# இந்து ஒளி

# HINDU OLI

தீபம் - 10
சுடர் - 03




## அமரர் வே. பாலசுப்பிரமணியம்
## நினைவுச் சிறப்பிதழ்

அகில இலங்கை இந்து மாமன்றம்
காலாண்டிதழ்

*Quarterly of*
*All Ceylon Hindu Congress*


# சிறப்பு மாநாடு நிகழ்வுகள் (02.04.2006)



மாநாட்டு மண்டபத்திற்கு பிரமுகர்கள் அழைத்து வரப்படுகிறார்கள்.



மாநாட்டில் சிறப்பு அம்சமாக இடம்பெற்ற நாட்டிய நிகழ்ச்சி.



“இந்து மக்களுக்கு ஒரு கையேடு” நூல் வெளியீட்டின்போது சிறப்புப் பிரதிகளை நல்லை ஆதீன முதல்வரிடமிருந்து முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன், கொழும்பு மகளிர் இந்து மன்றச் செயலாளர் திருமதி யமுனா கணேசலிங்கம், (அருகே திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம்), அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் பெற்றுக் கொள்கிறார்கள்.



சிறப்பு மாநாடு நிகழ்வுக்கு வருகை தந்தவர்களுள் ஒருபகுதியினர்.

சிவமயம்

# பஞ்சபுராணங்கள்

*– திருச்சிற்றம்பலம் –*

## தேவாரம்

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்ற நின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒரு தெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்ந்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே.

## திருவாசகம்

வினைப் பிறவி யென்கின்ற
வேதனையி லகப்பட்டுத்
தனைச் சிறிதும் நினையாதே
தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப் பெரிதும் ஆட்கொண்டென்
பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழும்
தில்லையம்பலத்தே கண்டேனே

## திருவிசைப்பா

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்காட்
செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கூடுமா றருள்கொ டுத்துக் "குலவுதென் திசையில் என்றும்
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய ஆலங்காட்டில்
ஆடுமா நடமும் நீகண் டானந்தஞ் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை" என்றான் பரவுவார் பற்றாய் நின்றான்.

*– திருச்சிற்றம்பலம் –*

சிவமயம்

# இந்து ஒளி


தீபம் – 10 சுடர் – 03
விய வருடம் ஆனித் திங்கள் 32ம் நாள்
16. 07. 2006


## வாழ்வில் நிம்மதியும் மகிழ்ச்சியும் கிடைக்கப் பிரார்த்திப்போம்

தமிழ்ப் புத்தாண்டு உதயமாகி மூன்று மாதங்களாகின்றன. இந்த விய வருடத்தில் மலரும் முதலாவது இதழாக இந்த "இந்து ஒளி" உங்கள் கரங்களில் தவழுகிறது. மாமன்றத்தின் காலாண்டிதழாக சுடர்விடும் 'இந்து ஒளி' பிரகாசிக்கத் தொடங்கி, அடுத்த இதழுடன் பத்து வருடங்களை பூர்த்தி செய்து கொள்ளுகின்றது என்பது இன்னொரு மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

பொன்விழா கண்டுள்ள மாமன்றத்தின் சமய, சமூக கல்விப் பணிகளுள் ஒன்றாக "இந்து ஒளி" யின் வளர்ச்சியையும் குறிப்பிட வேண்டும். மாணவர்களுக்கு மட்டுமல்ல, இந்து மக்கள் அனைவருக்குமே பயன்தரக் கூடியதாக "இந்து ஒளி" தனது சேவையைத் தொடருகிறது.

மாமன்றத்தின் ஐம்பதாண்டு கால வளர்ச்சிப் பாதையில் கடந்த ஒரு தசாப்த காலம் முக்கியத்துவமானதாக அமைந்திருந்ததைக் குறிப்பிடலாம். மாமன்றத்திற்கென அரசாங்கத்திடமிருந்து கிடைத்த காணியில் தலைமையகக் கட்டிடம் அமைக்கப்பட்டு கடந்த சித்திரை மாதத்துடன் பத்தாண்டுகள் நிறைவுபெற்றுள்ளன. மாமன்ற தலைமையகக் கட்டிடம் அமைவதற்கு பல வழிகளிலும் பெரிதும் உதவிய வள்ளல் பெருமக்களை மாமன்றம் என்றென்றும் நினைவில் வைத்திருக்கிறது. இவர்களுள் முதல்வராகக் குறிப்பிடக் கூடியவர் மாமன்றத்தின் முன்னாள் தலைவரான அமரர் வே. பால சுப்பிரமணியம் அவர்கள். இவரது சேவையை நினைவு கூர்ந்து மாமன்றம் வருடந்தோறும் நினைவுப் பேருரையை ஏற்பாடு செய்து நடத்திவருகிறது.

மாமன்றப் பொன்விழாவின் மற்றுமொரு முக்கிய நிகழ்வாக "பொன்விழா மலர்" வெளியீடு மிக விரைவில் இடம்பெறவிருப்பதுடன், க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான "இந்து நாகரிகம்" என்ற நூலும் மாமன்றத்தால் வெளியிடப்படவிருக்கிறது.

இதே வேளையில், கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவி வரும் சூழ்நிலைகளும், அதன் காரணமாக தமிழ் மக்கள் பலர் அனுபவித்துவரும் இன்னல்களும் துயரங்களும் மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது. அண்மைக் காலங்களில் எங்கள் மக்களுக்கு ஏற்பட்ட சில துரதிர்ஸ்டவசமான நிகழ்வுகளின் போது மாமன்றம் மிகவும் மனவேதனையடைந்து, வழமைபோல தனது வன்மையான கண்டனங்களையும் தெரிவித்து, இது விடயத்தை உரிய இடங்களுக்கு உரிய வகையில் எடுத்துச் சொல்லியும் வந்திருக்கிறது. எங்கள் சகோதர சகோதரிகளுக்கு இன்னல்கள் வரும் வேளைகளில் மாமன்றம் குரல் கொடுத்து வருவது அனைவரும் அறிந்ததே.

நாடளாவிய ரீதியில் விஸ்தீரணம் பெற்றுள்ள மாமன்றத்தின் சமூக நலப் பணிகளின் ஊடாக மருத்துவ தேவைகளுக்கும் மற்றும் யுத்த நிலைமைகள் மட்டுமல்ல, கடல்கோள் போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கும் மாமன்றம் தன்னால் இயன்ற அளவில் உதவி வருகிறது என்பது ஒரு சிறப்பான தகவல்.

நாட்டில் அமைதியும், மக்களது வாழ்வில் சுதந்திரமும், நிம்மதியும், மகிழ்ச்சியும் ஏற்படவேண்டும் என்பதில் மாமன்றம் பெரும் எதிர்பார்ப்பு கொண்டுள்ளது. இதற்காக இறைவனைப் பிரார்த்திப்போமாக.

# இந்தச் சுடரில் .........


1. பஞ்சபுராணங்கள்

3. அமரர் பாலாவின் 14வது ஆண்டு நினைவு

4. பொன்விழா காணும் நல்லை ஆதீன முதல்வர்

5. மருத மாணிக்கத் தீங்கனியும் மரணப் பழமும்

7. உண்மையே உனை உயர்த்தும் ஏணி

9. நந்திப் பெருமானும் நந்திக் கொடியும்

10. திருமூலரும் திருமந்திரமும்

11. THE NANDHI FLAG

13. நந்தி தேவருக்கு திருமணம்

15. தொடரும் நினைவலைகள்

17. சிறுவர் ஒளி – கடவுள் நம்பிக்கை

18. மாணவர் ஒளி – பெரிய புராணக் கதைகள்

20. மங்கையர் ஒளி – தாயு நீயே தந்தை நீயே

22. மங்கையர் ஒளி – திலகவதியார்

24. ஆலயக் கிரியைகளில் பாவிக்கப்படும் நாட்டிய முத்திரைகள்

26. இலங்கை அரசியலில் சேர் பொன். அருணாசலம் ஏற்படுத்திய தாக்கங்கள்

27. SIR PONNAMBALAM ARUNACHALAM

29. THE DAWN OF SIR PONNAMBALAM ARUNACHALAM

32. மாமன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு கருத்தரங்குகளும் சிறப்பு மாநாடும்


**அடுத்த சுடர்**

விய வருடம்

ஆடி – புரட்டாதி

**வாழ்த்து**

தந்திமுகனரு ளினொடு சரவணன ருளும் மேவச்
சுந்தரத் தமிழினோடு சுடர்விடு சைவம் வாழ்க
இந்து வாழ்சபை யெம்மண்ணல் இறையருள் மேவி யென்றும்
இந்து மாமன்றம் வாழ்க அதன்பணிவளர்க மேலும்.


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
விய வருடம் சித்திரை – ஆனி இதழ்
**ஆனித் திங்கள் 32ம் நாள்**
**16.07.2006**



**ஆசிரியர் குழு :**

புலவர் அ. திருநாவுக்கரசு
திரு. கந்தையா நீலகண்டன்
திரு. க. இராஜபுவனீஸ்வரன்
திரு. மு. பவளகாந்தன்
திரு. த. மனோகரன்
திரு. கு. பார்த்தீபன்



| | | |
|---|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா | 20.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா | 80.00 |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் | 10.00 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 2, இலங்கை.
இணையத்தளம் : http:/www.hinducongress.org
மின்னஞ்சல் : admin@hinducongress.org
தொலைபேசி எண் : 2434990, தொலைநகல் : 2344720


*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.*


# HINDU OLI

**Sithirai - Aani**

**ALL CEYLON HINDU CONGRESS**

**16th JULY 2006**



**Editorial Board :**

Pulavar A. Thirunavukarasu
Mr. Kandiah Neelakandan
Mr. K. Rajapuvaneeswaran
Mr. M. Pavalakanthan
Mr. D. Manoharan
Mr. G. Partheepan



| | | | |
|---|---|---|---|
| Price : | Rs. | 20.00 | per copy |
| Annual Subscription (Inland) | Rs. | 80.00 | |
| AnnualSubscription (Foregin) | U. S. $ | 10.00 | |
| (Including Postage) | | | |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Website : http://www.hinducongress,org
E-Mail : admin@hinducongress.org
Telephone No.: 2434990, Fax No.: 2344720


Next Issue :
Aadi - Puraddathy

**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



# மாமன்ற தலைமையகக் கட்டிடத்தின் பத்தாண்டு நிறைவும் அமரர் பாலாவின் பதினான்காவது ஆண்டு நினைவும்



ஐம்பது ஆண்டுகளாக அரும்பெரும் பணிகளாற்றி பொன்விழா காணும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகத்திற்காக புதிய கட்டிடம் அமைக்கப்பட்டு பத்தாண்டுகள் நிறைவுபெற்றுவிட்டன. மாமன்றத்திற்கான கட்டிடம் அமைக்கப்பட்டு அதன் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் ஐந்தாம் மாடியிலுள்ள மாமன்றப் பிரார்த்தனை மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு 1996ம் ஆண்டு மேமாதம் 3ம் திகதியன்று மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மாமன்றத் தலைமையகம் இந்தப் புதிய கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது. ஐந்து மாடிகளைக் கொண்ட மாமன்றக் கட்டிடத்தைப் பார்க்கும்போது அது, வெறுமனே மாமன்றப் பணிகளை எடுத்துச் சொல்வது மட்டுமல்ல, தலைமையகக் கட்டிடம் அமைவதற்கு பேருதவியாகவும் துணையாகவுமிருந்த ஒரு சில வள்ளல் பெருமக்களையும் என்றென்றும் எங்கள் நினைவலைகளில் மீட்டிக் கொண்டேயிருக்கிறது.

இவர்களுள் ஒருவராகக் குறிப்பிடக்கூடியவர் மாமன்றத்தின் முன்னாள் தலைவரான அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்கள். இவரது சேவையை நினைவு கூர்ந்து மாமன்றம் வருடந்தோறும் நினைவுப் பேருரையை ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது. அந்த வகையில் அன்னார் அமரத்துவமெய்திய பதினான்கு வருட நிறைவையொட்டிய நினைவுப் பேருரை 2006 ஜூலை 16ம் திகதி மாமன்ற தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறுகிறது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் "இந்துப் பண்பாட்டுக் கல்வி : நோக்கும் போக்கும்" எனும் பொருளில் பேருரையாற்றுகிறார்.

இந்த வேளையில் அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்களது வாழ்க்கை வரலாற்றையும், சேவைகளையும் நோக்குவது பொருத்தமாகவிருக்கும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கரவெட்டி கிராமத்தில் பிறந்த இவர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் தனது கல்வியை ஆரம்பித்து, கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும், பின்னர் யாழ். இந்துக் கல்லூரியிலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்று பூர்த்தி செய்தார்.

அமரர் பாலசுப்பிரமணியம் கல்லூரிக் கல்வியினை முடித்துக்கொண்ட பின்னர் தனியார் நிறுவனங்களில் நிதிதொடர்புடைய பதவிகளை வகித்து வந்தார். பின்னாளில் அவர் வர்த்தக நிறுவனங்களை அமைத்து நிர்வகித்து வந்ததன் மூலம் பிரபல தொழில் அதிபராக விளங்கினார். "முயற்சி தன் மெய் வருத்தக் கூலிதரும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய உழைப்பால் உயர்ந்த பெருமகன் அவர். தனக்காக - தன் குடும்பத்திற்காக என்றில்லாமல் சமய, சமூக, கல்விப் பணிகளுக்காக வாரிவழங்கிய அவரது வள்ளன்மை உயர் நிலையில் வைத்துப் போற்றப்படுகிறது என்பது மட்டுமல்லாது, அவை காலத்தால் அழியாதவையுமாகும். அவரது தொழில் நிறுவனங்கள் ஆயிரக்கணக்கானவர்களுக்கு தொழில்வசதிகளை வழங்கிக் கொண்டிருப்பதன் மூலம், அவரது சமூக நலப்பணி மேலும் விஸ்தீரணம் பெற்றுள்ளதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இவரது சமய சமூகப் பணியின் மகுடமாகக் குறிப்பிடக்கூடியது கொழும்பு மாநகரிலுள்ள அகில இலங்கை இந்து மாமன்ற தலைமையகக் கட்டிடமாகும். மாமன்றத்திற்கான காணி கிடைத்திருந்தும், அதன் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படாத வேளையிலேயே மாமன்றத் தலைவராக அவர் பதவியேற்றார். மாமன்றத்திற்கான ஒரு தலைமையகக் கட்டிடம் அமைக்க வேண்டும் என்பதில் அவர் காட்டிய ஆர்வமும், அவரது துணிச்சலான செயற்பாடுகளும் முழு அளவில் வெற்றி பெற்றன. இன்று கொழும்பு மாநகரில் உயர்ந்த கட்டிடங்களுள் ஒன்றாக விளங்கும் அகில இலங்கை இந்து மாமன்றம் அவரது நினைவை மீட்டிக் கொண்டிருப்பது மட்டுமல்ல, அவரது பரோபகாரப் பண்பையும் எடுத்துச் சொல்கிறது.

அமரர் பாலசுப்பிரமணியம் 1986ம் ஆண்டு அக்டோபர் 26ம் திகதியிலிருந்து மறையும்வரை மாமன்றத்தின் தலைவராகப் பணிபுரிந்தவர். அவர் சிறிது காலம் சுகநலமற்ற நிலையிலிருந்து 1992ம் ஆண்டு ஜூலை மாதம் 15ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்"*

என்றார் வள்ளுவர்.

இத்தகைய பெருமைக்குரியவராக விளங்கி, இவ்வுலகில் வாழ்ந்து மறைந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பிரபல தொழிலதிபராக விளங்கிய போதிலும், சமய சமூக நலப் பணிகளில் அவர் வைத்திருந்த ஆர்வமும் ஈடுபாடும் வெகுவாகப் போற்றத்தக்கது. எங்கள் நெஞ்சிருக்கும் வரை அவர் நினைவிருக்கும் என்பது மட்டும் உண்மையாகும்.

*- அ. கனகசூரியர்.*



## மாமன்றம் வாழ்த்துகிறது

# பொன்விழா காணும் நல்லை ஆதீன முதல்வர்.

அகில இலங்கை இந்து மாமன்றம் பொன்விழா கண்டுள்ள இவ்வேளையில், நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஐம்பது வயதை பூர்த்திசெய்திருப்பதன் மூலம் பொன்விழா காணுகிறார். சுவாமிகள் அவர்களுக்கு மாமன்றம் தனது இதயபூர்வ மான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

மாமன்றம் சுவாமிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளது. மாமன்றம் நடத்திய பல வைபவங் களில் சுவாமிகளும் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கிவந்திருப்பது மாமன்றத்திற்கு பெருமையும் சிறப்பையும் கொடுத்துள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் மூலம் சுவாமிகளது சமயப் பணி மேலும் சிறப்பாகத் தொடரவேண்டும் என்பதுடன், சுவாமிகளது சுகநலத் திற்கும் ஆரோக்கியத்திற்கும் மாமன்றம் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றது.

மாமன்றத்தின் முகாமைப் பேரவை உறுப்பி னரும், துணைத் தலைவருமான செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள், சுவாமிகளது பிறந்த தினத்தையொட்டி "அருள் ஒளி" சஞ்சிகையில் எழுதியிருந்த ஆசிரியர் கருத்தை "இந்து ஒளி" இங்கு தருகிறது:

"ஈழத்திருநாட்டில் சைவ சமய மரபில் தோன்றிய ஒரேயொரு ஆதீனம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம். இவ் ஆதீனத்தைத் தோற்றுவித்த பெருந்தகை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாச்சாரிய சுவாமிகள். இப்பெருமகனார் தனது நாவன்மையால் ஈழத்தில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் சைவப்பிரசங்கங்களைச் செய்து உன்னத சமயப்பணியாற்றியவர். ஈழத்தில் சைவ ஆதீனம் இல்லாத குறையைப் போக்குவதற்கு தன் வாழ்வை அர்ப்பணித்தவர். அவர் தன் வாழ்வில் தனக்குப் பின் ஆதீனத்தை வழி நடத்துவதற்குப் பொருத்தமான இளவரசைத் தேடினார். இறையரு ளால் ஆதீனத்தில் தினமும் திருமுறை பாராயணம் செய்ய வந்த சிறுவர்களில் ஒருவரை சுவாமிகள் அடையாளம் கண்டார். அச்சிறுவனைத் தனது கதாப்பிரசங்க நிகழ்வுகளுக்கு அழைத்துச் சென்று, சுருதிப் பெட்டியை வாசிக்கப் பணித்தார். அச்சிறுவன் இளைஞனாக நிமிர்ந்த வேளை எனக்குப் பின் இவ் ஆதீனத்தை நீயே பொறுப்பேற்க வேண்டுமெனக் கட்டளையிட்டார். ஆதீன சம்பிரதாயங்களை விளக்கினார். நைஷ்டிக பிரமச்சரிய வாழ்க்கையே ஆதீன மரபு என்பதை எடுத்துரைத்தபோது மிகுந்த பக்குவத்தோடு அவ்விளைஞன் தன் வாழ்வை ஒப்படைக்க முன்வந்தார். சுந்தரலிங்கம் என்ற பிள்ளைத் திருநாமமுடைய இளைஞன் தன் வீடு மறந்து உலகியல் மறந்து காவி வஸ்திரம் தாங்கி இளவரசானார். 1981ம் ஆண்டு பங்குனி மாதம் முதலாவது குருமகா சந்நிதானம் திடீரென சமாதி அடைந்தார்கள். இளவரசாகப் பதவி ஏற்ற சின்னச் சுவாமிகள் ஆதீன குரு முதல்வராகப் பட்டா பிஷேகம் செய்யப்பட்டு பதவி ஏற்றார்கள். பலரும் திகைத்தார்கள். மிக வயது குறைந்த இளைஞன் ஆதீன முதல்வராக பதவி ஏற்கிறார். இப்பணி மிக மிகப் பக்குவமான நிலையில் அர்ப்பணிப்போடு தொண்டாற்றுகின்ற சேவை. இரண்டாவது குருமகா சந்நிதானம், எப்படி ஆதீனத்தை நிர்வகிப்பாரோ என ஏங்கினர். மும்மொழிப் பாண்டித்தியம், நாவன்மை, அனுபவஞானம் நிறைந்த பெரிய சுவாமிகளின் இடத்தை நிரப்பத்துணிந்த இரண்டா வது குருமகா சந்நிதானம் தனது அயராத முயற்சி யால் ஆதீனத்தை சீரிய முறையில் வழிநடத்தத் தொடங்கினார். பலரும் வியந்து பாராட்டத் தொடங் கினர். முதலாவது குருமகா சந்நிதானம் சமாதி அடைந்து இருபத்தைந்து ஆண்டுகள் இன்று நிறைவு பெற்று விட்டது. இந்த இருபத்தைந்து ஆண்டுகளும் தன் துறவுப்பணியில் அயராது தொண்டாற்றி சைவ மக்களின் தலைமகனாக போற்றப்படும் நிலையில் இன்று ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஒப்பற்ற நிலையில் சிறப்புற்று விளங்குகிறார். பல ஆயிரக்கணக்கான ஆலய கும்பாபிஷேக வைபவங்கள் முதல் சமய விழாக்கள், பொது வைபவங்களில் நல்லாசியுரைகளை வழங்கி வருவதோடு சைவ சமயத்துக்கு ஆபத்துக்கள் வந்தபோதெல்லாம் குரல் கொடுத்துக் காப்பாற்று பவராக எம்மத்தியில் இன்று விளங்குகிறார். நல்லை ஆதீனத்தில் புதிய கலா மண்டபத்தைத் தோற்று வித்ததோடு தினமும் ஆலய குருமூர்த்தி பவனில் இருநேரப் பூசைகளை நடாத்தி அருட் பணியாற்றி வருகிறார். இலண்டன், கனடா, அவுஸ்திரேலியா, மலேசியா போன்ற நாடுகளில் நடைபெற்ற உலக இந்து மாநாடுகளில் இந்திய ஆதீனங்களுக்கு ஈடாக எமது நாட்டு ஆதீன சுவாமிகள் கலந்து கொண்டு ஆற்றியவுரைகள் அற்புதமானவை. புனிதத் தொண்டாற்றி வரும் இப்புண்ணிய ஆத்மா பூவுலகில் தோன்றி ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. குருமுதல்வர் பணியில் வெள்ளி விழாவும் பூவுலக வாழ்வில் பொன்விழாவும் காணும் சுவாமிகளை நாமும் வாழ்த்தி வணங்குவோமாக."

# மருத மாணிக்கத் தீங்கனியும் மரணப் பழமும்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
கோப்பாய்

எமது இந்து சமயத்தில் சமய நூல்களை நாம் பக்தி இலக்கிய நூல்கள் என்றும் கூறுகின்றோம். தத்துவங்களையும் அறநெறி களையும் வெறுமனே போதித்தால் மனதில் இலகுவாகப் பதியாது. அவற்றிற்கு இலக்கியச் சுவையூட்டினால் மனம் அவற்றின்பால் ஈர்க்கப்படும். இதனால்தானோ என்னவோ வேதகாலம் முதலே உவமைகள் உருவகங்கள் போன்றன கொண்ட பாடல்களாக ஆரம்பித்து எல்லா மொழிகளிலுமே எமது சமயக் கருத்துக்கள் வகைவகையான இலக்கிய வடிவங்களாக ஆக்கப்பட்டுள்ளன. இந்த இலக்கிய நயம் பற்றி எழுதப் புகுந்தால் அது முடிவின்றி நீளும்.

இங்கு பட்டினத்து அடிகள் அருளிச் செய்த திருவிடை மருதூர் மும்மணிக் கோவையிலுள்ள ஒரு பாடலை மட்டும் பார்ப்போம்.

இவ்வுலகில் பல்வேறு வகையானோர் வாழ்கின்றனர். ஒரு பகுதியினர் தங்கள் மனதைப் பண்படுத்தி, இறைவனைத் தொழுது இன்பமடைகின்றனர். மனதைப் பண்படுத்துவது இலகுவல்ல. மிகுந்த முயற்சியின் பயனாகவே மனம் பண்படும். சோம்பலுற்றோர் மனதைப் புலன்களின் வழிவிட்டு, துன்பமடைகின்றனர். மனதைப் பண்படுத்துவதை மிக அழகாகக் கூறியுள்ளார் பட்டினத்தடிகள்.

எமது நெஞ்சங்களில் வஞ்சகம் ஆழவேரூன்றிக் கிடக்கிறது. வஞ்சக மரத்தை மேலாக வெட்டியெறிந்தால் தற்போதைக்கு இல்லாதது போன்று தோற்றங்கொடுத்து, சிலநாட்களின் பின்பு தலைநீட்டி நீண்டு வளர்ந்து நிற்கும். எனவே அதனை மூலவே ரோடு தோண்டி எடுக்கவேண்டும் இது போன்ற கெட்ட குணங் களாகிய புல்பூண்டுகள் பலவுண்டு. அவற்றையெல்லாம் களைந்து மனதைச் செம்மைப்படுத்த வேண்டும். அதிலே அன்பென்னும் பாத்தியை அமைத்து மெய்யாகிய எருவை முதலிலே இடவேண்டும். எருவிட்ட பாத்தியில் பக்திவிதையை விதைக்க வேண்டும். சாதாரண பக்தி விதையாக அது இருக்க கூடாது. ஐயமில்லாத பக்தியாக இருக்கவேண்டும். "இறைவன் வருவானா? வரமாட்டானா?" என்பது மட்டுமல்ல, "தருவானா? தரமாட்டானா?" என்று கூட எமக்கு எத்தனை ஐயங்கள். இதன் முடிவில் கேட்டதைத் தராத இறைவனை வணங்க மனம் ஒப்பாது. ஐயத்துடன் உருவாகும் பக்தி வித்து, நல்ல வித்தாக அமையாது. அது முளைவிடாது. முளை விட்டாலும் சீராகவும் செழிப்பாகவும் வளராது. எனவே ஐயமில்லா பக்தி வித்து அதுவும் தனித்துவமான வித்து விதைக்கப்பட வேண்டும்.

விதையை விதைத்துவிட்டு பேசாமலிருந்தால் பயிர் வளருமா? அதற்கு நித்தமும் ஆர்வநீர் பாய்ச்ச வேண்டும். அது தெளிவான நீராக இருக்கவேண்டும். ஐயமற்ற பக்திபோன்றே தெளிவான ஆர்வமும் தேவை. அதுவும் "வாரமொருமுறை அல்லது ஒன்று விட்டொரு நாள்" என்று நீர்ப்பாய்ச்சக் கூடாது. இடைவிடாது ஒவ்வொருநாளும் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

பயிர் வளர இந்தக் கட்டாக்காலி மாடுகள் விடுமா? விடாதே. எமது ஐம்புலன்கள் கட்டாக்காலிகள்தான். பார்க்கக்கூடாது என்றால் எல்லாக் கட்டுப்பாட்டையும் தகர்த்துவிட்டு கண்கள் மேயும். இவற்றைப் போன்றவைதான் ஏனையவையும். நேரே நின்று தடுத்துப் பாருங்கள். அவை அடங்காது முட்டி மோத வரும். இவற்றிடம் இடிவாங்கிக் கஷ்டமுறுவதைவிட வேலியடைத்து விடுவது நல்லது. சாந்தமாகிய வேலியையடைத்துவிட்டால் ஐம்புலப் பட்டிகளிடமிருந்து பாதுகாப்புக் கிடைத்துவிடும்.

ஞானப் பெருமுனை கெட்டுப் போகாது முளைத்து கருணை யாகிய இளந்தளிர் தோன்றும். இந்தப் பயிர் வளரத் தடையாகக் களைகள் தோன்றும். களைகள் பயிருள்ள இடத்தில் தோன்றினால் பயிர் செழித்து வளராது. எனவே காமம், குரோதம் முதலிய களைகளைக் களைந்து பாதுகாத்து வளர்த்தால் இந்தப் பயிர் செழுமையாக வளர்ந்து அருமையான கனியைத் தரும்.

அக்கனி அறுசுவையினும் பார்க்கச் சிறந்த சுவையுடையது, கனியைச் சுவைத்தால் மகிழ்வேற்படும். இந்தக் கனியைக் கண்டாலே களிபேருவகை தோன்றும். கண்டால் மட்டுமா? கேட்டாற் கூட இன்பம் பிறக்கும், இல்லையில்லை, நினைத்தாலே போதும் பேரின்பம் சித்திக்கும், அப்படியொரு கனியா? அது என்ன கனி என்று கேட்கிறீர்களா?

கருமையான கழுத்திலே நஞ்சு பொதிந்திருக்க மூன்று கண்களும், நான்கு தோள்களும் ஐந்து முகங்களும் கொண்ட கனி முகங்கள் வெண்ணீறு பூசி சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றன. அதன் நிறமோ பவள நிறம். அது தித்திப்பான கனி. ஆனால் மாணிக்கக் கனி திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் மிகவுயர்ந்த மருத மாணிக்கத் தீங்கனி. பக்தியினால் பக்தனுக்கு உடலிலுள்ள உரோமம் சிலிர்த்தபோது முகிழ்த்து, கண்ணீரரும்பிய போது அரும்பி, மலர் மலர்ந்து புண்ணிய ஐந்தெழுத்தாகிய நமசிவாய எனும் அருமையான காய் தோன்றி, மெல்ல மெல்லப் பழுத்து இக்கனி கைக்குக் கிட்டியதும் எம்மவர்கள் இனிமையாய் உண்டு மகிழ்ந்திருந்தனர்.

முயன்று மனதைப் பண்படுத்தியோர் இவ்வாறு பயனெய்ய, வேறு சிலர் அப்படியில்லாது 'மனம்' என்கின்ற புனத்தைச் சோம்பலால் பாழாக்கினர். பண்படுத்தாததால் காமமாகிய காடு மனப்புனத்தை மூடியது. ஐம்புலன்களாகிய தீய வேடர்கள் அதனுள் வழியமைத்துத் திரிந்தனர்.

பாலைநிலத்தில் தூரத்தில் நீரிருப்பது போலக் கண்களுக்குத் தோன்றும். அதை நாடிச் சென்றால் அது கிட்டாது தூரத்திலேயே தோன்றிக் கொண்டிருக்கும். அது உண்மையான நீரல்ல. இதையே 'கானல் நீர்', 'பேய்த்தேர்' என்றெல்லாம் கூறுவர். சிற்றின்பமும் அத்தகையதே. பேரின்பம் உண்மையான இன்பம். ஆனால் அதை விடுத்து சிற்றின்பத்தை இன்பமெனக் கருதி, அதை நாடிச் சென்றால் இன்பம் கிட்டாது, பேய்த் தேராக இன்பம் கைக் கெட்டாது ஓடும். கல்வி பயின்று நல்வழிப் படுத்தப்படாத உணர்வு என்ற மான் சிற்றின்பக் கானல் நீர் கிட்டாது தவித்தேங்கும்.

இச்சையென்ற விதை விழ, "நான்" என்ற அகங்காரமாகிய பெரிய நச்சுமரம் நன்றாக முளைத்து வளர அதில் பொய்யாகிய கிளைகள் தோன்றும். பாவமென்னும் இலைகள் தழைத்து கொடுமையாகிய அரும்பு அரும்பி கடுமையென்னும் மலர் மலரும். அதிலிருந்து துன்பமெனும் காய் தோன்றும். அது மரணமெனும்

கனியாகக் கனிந்து நரகத்தில் வீழ்த்தும். அது எமக்கும் உதவாது, பிறருக்கும் உதவாது.

பட்டினத்தடிகளின் உருவாகம் எவ்வளவு அற்புதமாக மனதில் கருத்துக்களை பதிக்கும் வகையில் அமைந்துள்ளதைப் பார்த்தீர்களா?

உழப்பின் வாரா உறுதிகள் உளவோ
கழப்பின் வாரா கையற வுளவோ அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற அகழ்ந்து போக்கித் தூர்வை செய்(து)
அன்பென் பாத்தி கோலி முன்புற
மெய்யெனும் எருவை விரித்தாங்(கு) ஐயமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலும்
ஆர்வத் தெண்ணீர் பாய்ச்சி நேர்நின்று
தடுக்குநர்க்கு அடங்கா(து) இடுக்கண் செய்யும்
பட்டி அஞ்சினுக்(கு) அஞ்சியுட் சென்று
சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை இளந்தளிர் காட்ட அருகாக்
காமக் குரோதக் களைபறக் களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையின் ஓங்கி
மெய்ம்மயிர்ப் புளகம் முகிழ்த்திட்(டு) அம்மெனக்
கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து புண்ணிய
அஞ்செழுத்(து) அருங்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமும் கண்ணொரு மூன்றும்
தோளொரு நான்கும் சுடர்முகம் ஐந்தும்
பவளநிறம் பெற்றுத் தவளநீறு பூசி
அறுசுவை அதனினும் உறுசுவை உடைத்தாய்க்
காணினும் கேட்பினும் கருதினுங் களிதரும்
சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
எம்ம னோர்கள் இனிதின் அருந்திச்
செம்மாந் திரும்பச் சிலர் இதின் வாராது
மனமெனும் புனத்தை வறும்பா ழாக்கிக்
காமக் காடு மூடித் தீமைசெய்
ஐம்புல வேடர் ஆறலைத்(து) ஒழுக
இன்பப் பேய்த்தேர் எட்டா(து) ஓடக்
கல்லா உணர்வெனும் புல்வாய் அலமர
இச்சைவித்(து) உகுத்துழி யானெனப் பெயரிய
நச்சு மாமரம் நனிபிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பஃறழை பரப்பிப் பூவெனக்
கொடுமை அரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவா(து)
இமைப்பிற் கழியும் இயற்கையோர் உடைத்தே

என்னும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவைப் பாடலே மிகப் பெரும் தத்துவக் கருத்துக்களை இலக்கியச் சுவையில் பொதிந்து எமது மனங்களில் பதியச் செய்கிறது.

இத்தகைய பல பாடல்கள் எமது சமய நூல்களில் உள்ளன. அது குறித்து நாம் பெருமைப்பட வேண்டும். அவற்றைக் கற்று, பயன்பெறவும் வேண்டும்.

## சிவதொண்டர் அம்புலன்ஸ் சேவை

யாழ். மக்களுக்கு உதவும் பொருட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் சிவதொண்டர் அம்புலன்ஸ் சேவை ஊடாக பின்வரும் வசதிகளை வழங்குகின்றது.

- யாழ்ப்பாணம் - கொழும்பு நோயாளர் போக்குவரத்துச் சேவை.
- கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்கு நோயாளர்களை அழைத்துவருவதற்கான சேவை
- யாழ். குடாநாட்டில் அவசர நோயாளருக்கான சேவை.
- ஆலய உற்சவ காலங்களின்போதும் இலவச சேவை.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**யாழ்ப்பாணம்** சிவதொண்டர் அம்புலன்ஸ் சேவை,
இல. 16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3305

**கொழும்பு** அகில இலங்கை இந்து மாமன்றம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 02. தொலைபேசி : 011- 2434990

மாமன்றச் செய்தி

## மாமன்ற வருடாபிஷேகமும், குருபூசைகளும்


அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோவில் பிரதிஷ்டை செய்யப்பட்டதன் பத்தாவது ஆண்டு நிறைவும், வருடாபிஷேகமும் கடந்த மே மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் ஆரம்பமான விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து, நண்பகல் 12.30க்கு பூசையும், வழிபாடும் இடம்பெற்றது.

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை கடந்த ஏப்ரல் மாதம் 23ம் திகதியன்றும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை ஜூன் மாதம் 12ம் திகதியன்றும், மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை ஜூன் மாதம் 30ம் திகதியன்றும் மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்ற சமய விவகாரக் குழுவின் தலைவர் சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் தலைமையில் நடந்த மேற்படி குருபூசை நிகழ்வுகளின்போது பிரார்த்தனை, சொற்பொழிவு என்பன சிறப்பு அம்சங்களாக இடம்பெற்றன.



# உண்மையே உனை உயர்த்தும் ஏணி



**சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்**

இப்பரந்த நிலவுலகின் கண்ணே எத்தனையோ ஜீவராசிகள் பிறந்திறந்துழல்கின்றன. காலத்தின் சக்கரம் உருண்டோடிக் கொண்டிருக்கின்றது. அதற்குள்தான் எத்தனை மாற்றங்கள்? எத்தனை மர்மங்கள்.

நமக்கு ஏன் துன்பம் வருகிறது என்பதை மனிதன் சிந்திக்க ஏனோ மறுக்கின்றான். அவனுடைய சிந்தனையில் இது மட்டும் வருவதற்கு பல இடர்ப்பாடுகள் வருகின்றன. தான் செய்ததைத் தாமே அனுபவிக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியாததல்ல.

சுவரின் மீது ஒரு பந்தை விட்டெறிந்தால் அந்தப் பந்து மீண்டும் எம்மிடமே வருகின்றது. அதே போலத்தான் நாம் செய்தது நமக்கே வரும். நல்ல நல்ல எண்ணங்களுடன் நல்ல நல்ல காரியங்களை நல்ல மனதுடனே நாங்கள் செய்தோமேயானால் அது எமக்கு நன்மைகளைத் தரும். அதனை விட்டுவிட்டு கெட்ட எண்ணத்துடன் கெட்ட காரியங்களைக் கெட்ட மனதுடனே நாம் செய்தால் எமக்கும் கெட்டதே நடக்கும்.

பாகற்காய் மரத்தை நட்டால் அது பாகற்காயைத்தான் தரும். அதை விடுத்து இனிய மாம்பழத்தையா தரப்போகிறது? 'தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்பது முதுமொழியல்லவா!

எல்லாம் வல்ல கடவுள் ஒருவர் இருக்கின்றார். அவரே எம்மை நடத்துவிக்கின்றார் என்பதை நாம் ஏன் உணருகின்றோமில்லை? இவ்வளவு பெரிய உலகத்தைப் படைத்த இறைவன்தான் நம்மையும் படைத்திருக்கின்றான். ஆகவே அவனுடைய ஆளுகைக்குட்பட்டே நாங்கள் உலாவருகின்றோம். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஒரு பொம்மலாட்டக்காரன் திரைமறைவில் இருந்து கொண்டு பொம்மைகளை ஆட்டுகின்றான். அவனுடைய கைகளில் இருந்து வருகின்ற கயிறுகளினால்தான் அப் பொம்மைகள் யாவும் அழகாக அபிநயம் பிடித்து ஆடுமாப் போல் ஆடுகின்றன. மக்கள் பார்த்துப் "பலே ஜோர்" என்று புகழ்ந்து ரசித்துச் சுவைக்கின்றனர். அதிலே பொம்மைகளுக்கும் அந்தப் பொம்மலாட்டக்காரனுக்கும் இடையிலே தொடர்பை ஏற்படுத்து கின்ற கயிறு மட்டும் இடைநடுவிலே அறுந்து போய் விட்டால் அவ்வளவுதான். எல்லா ஆட்டமும் நின்று போய்விடும். எனவே கயிறுதான் அங்கே ஜீவநாடியாக இருக்கின்றது.

உலகத்திலுள்ள அனைத்துச் சகல ஜீவராசிகளும் இப்படித் தான். ஆண்டவன் தனது விதி என்று கயிற்றின் மூலமாக நம்மையெல்லாம் ஆட்டுவித்துக் கொண்டிருக்கின்றான். இந்த உண்மையை நாம் நிச்சயமாக உணர்ந்து கொள்ளத் தவறக் கூடாது. இறைவனுடைய ஆளுகைக்குட்பட்டே நாம் இப்பூவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவன் நினைத்தால் நம்மை அழிக்கமுடியும். பின்னர் ஆக்கவும் முடியும்.

இந்த உலகில் மனிதப்பிறவி என்கின்ற புனிதப்பிறவி எடுத்த நாம் முதலில் மனிதனாக வாழப் பழக வேண்டும். மனித உருவில் இருந்து கொண்டு மிருகமாக வாழ்தல் கூடாது. எவ்வளவுதான் துன்பங்கள் வந்தாலும் எவ்வளவுதான் இடர்கள் வந்துற்றாலும் நாம் எப்போதும் உண்மையைப் பேசுதல் வேண்டும். பொருளீட்டவும் பூமியில் வாழவும் பொய் சொல்லக் கூடாது. "பொய்" எமது நாவில் வரவே கூடாது.

அரிச்சந்திர மகாராஜாவின் வாழ்க்கையை எடுத்துப் பாருங்கள். அவன் எவ்வளவோ துன்பங்கள் வந்தபோதும் தனது சத்தியத்தினின்றும் தவறவில்லை. உண்மைக்காக அவன் தன்னையே அர்ப்பணித்து விட்டான். ஒன்றல்ல இரண்டல்ல அடுக்கடுக்காய்ப் பல துன்பங்களை அவன் சந்திக்க நேரிட்டது. நாடு நகரிழந்து, மனைவி மக்களை இழந்து, சுடலை காக்கவும் வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்துக்குள்ளானான். இத்தனையும் வந்தும் அவன் உண்மைக்குப் புறம்பாக நடக்க அஞ்சினான். விசுவாமித் திரரோ விட்டபாடில்லை தக்க தருணத்தில் வந்து அரிச்சந்திரனைப் பொய்சொல்லவைக்கலாம் என்று பல்வேறு முயற்சிகளை எடுத்தார். அவருடைய சூழ்ச்சிகள் எதுவுமே பலிக்கவில்லை. எல்லாவித துன்பங்களையும் அவன் தாங்கிக் கொண்டு சத்தியத்தையே கடைப்பிடித்தான். அந்த உண்மைக்காக அவன் எதனையுமே சந்திக்கத் தயாராகவிருந்தான். 'எல்லாம் அவன் செயல், இது எப்பவோ முடிந்த காரியம், ஒரு பொல்லாப்புமில்லை' என்ற யோகரின் கூற்றுக்களைத் தன் மனத்தின் கண்ணே பதித்து வாழ்கின்ற ஒவ்வொரு மானிடனும் தன்னுடைய வாழ்க்கையில் வெற்றியையே சந்திப்பான். 'என்னால் என்ன செய்ய முடியும்? இது இறைவன் திருவுளப்பாங்கின்படிதான் நடக்கும். நடக்கிறது நடக்கட்டும்' என்று எவன் ஒருவன் நினைக்கின்றானோ அவன் தான் உண்மையான மானுடன்.

இன்றைய காலகட்டத்தில் 'எப்படியும் வாழலாம்; இதில் என்ன தவறிருக்கின்றது?' என்று வாழ்வதை முற்றாக ஒழிக்க வேண்டும். இப்படித்தான் வாழவேண்டும் என்று ஒரு வரன்முறை இருக்கின்றது. அதை நாங்கள் கடைப்பிடித்துத் தான் ஆகவேண்டும். சைவ நாயன்மார்கள் சைவ வாழ்வின் மகத்துவத்தை நமக்கு உணர்த்திப் போயிருக்கின்றார்கள். அவர்கள் வாழ்ந்து காட்டிய பாதையிலே நாமும் வாழப் பழகல் வேண்டும். அதுதான் உண்மை யான சைவ வாழ்வு.

சைவம் சைவம் என்று சொல்லிக் கொண்டு நம்மில் பலர் அசைவர்களாக வாழ்கின்றார்கள். 'இன்று செவ்வாய்க்கிழமை, இன்று வெள்ளிக்கிழமை' என்று சொல்லி அன்று மாத்திரம் மாமிசம் புசிக்காமல் விட்டு விட்டு மற்றைய நாள்களில் மூக்குப் பிடிக்க முட்டையும் மச்சமும் சாப்பிடுபவர்கள் சைவர்களா? இல்லவே இல்லை. அது நம்மை நாமே ஏமாற்றும் நடவடிக்கையாகும். சைவசமயத்தவன் என்றால் உண்மைச் சைவ சமயத்தவனாகவே இருத்தல் வேண்டும். போலியாக வாழ்தல் கூடவே கூடாது. மகாத்மா காந்திஜி கூட உண்மைக்காகவே வாழ்ந்தவர். அவரும் தமது வாழ்க்கையில் சத்தியத்தைக் கடைப்பிடித்திருக்கின்றார். நாம் மட்டும் ஏன் பொய்யான வாழ்க்கை வாழவேண்டும்? 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்பது

போன்று'சைவன் என்று சொல்லடா சைவக் கொள்கைப்படி நில்லடா' என்று நடந்தால் என்ன? இந்த உலகிலேயே சிறந்த சமயம் சைவ சமயம். மிகவும் தொன்மை வாய்ந்த இச்சைவ சமயத்தைப் போன்று வேறு சமயம் கிடையாது. எனவே சைவத்தில் பிறந்து சைவமாகவே வளர்ந்து சைவத்திலேயே ஊறித் திழைப் பதற்கு நாம் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

அதுமாத்திரமன்றி இவ்வளவு உயர்ந்த சைவசமயத்தில் பிறந்து உண்மைச் சைவர்களாக வாழ்வதற்கு நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

ஒரு கந்தோரில் ஐந்து பேர் வேலை செய்கின்றார்கள். அவர் களது மதியவேளை உணவுக்காக ஒருவர் காலையிலேயே சமைத்து சோற்றுப் பார்சலுடன் வருகிறார். இன்னொருவர் காலையில் சாப்பிட்ட பிட்டையே மதியத்துக்கும் கொண்டு வருகின் றார். மற்றொருவர் கன்ரீனில் ஏதாவது பார்த்துக் கொள்ளலாம் என்று வருகின்றார். ஒருவர் எதுவுமே கொண்டுவர வக்கில்லாமல் வெறும் வயிற்றோடு காலங்கழிக்கின்றார். ஒருவரோ மத்தியானம் அவரது மகன் கொண்டு வந்து கொடுக்கும் சூடான சோற்றையும் கறியையும் அப்பளப் பொரியலோடு வாழையிலை போட்டே சாப்பிடு கின்றார். இவர்கள் ஒவ்வொருவரையும் பார்த்தீர்களா? அவர்கள் தாம் கொண்டு வந்தவற்றையே அனுபவிக்கின்றார்கள். வாழை இலையிலே சூடாகச் சாப்பிடுபவனைப் பார்த்து வெறும் வயிற்றுடன் இருப்பவர் பொறாமைப்பட்டு எந்தவித பிரயோசனமும் இல்லை.

நியதி எப்படியோ அப்படித்தான் வாழ்க்கை. எனவே நாங்கள் உண்மையாக நடந்தால் அந்த நியதி நமக்கு நல்லதாக அமையும்.

நம்மில் எத்தனைபேர் இன்றிலிருந்து உண்மை பேசி, உண்மைச் சைவனாக, உண்மையாக வாழ்வதற்குச் சங்கற்பங் கொள்ளவிருக்கிறார்கள்? செய்வார்களா?

## மாமன்றச் செய்திகள்

### மகா சிவராத்திரி வைபவம்

கடந்த பெப்ரவரி மாதம் 26ம் திகதியன்று மகா சிவராத்திரி வைபவம் மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. அன்றைய தினம் மாலை 6.00 மணியளவில் சாயங்காலப் பூசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. நான்கு சாமப் பூசைகளுடன், திருமுறைப் பாடல்கள், சிவபுராணம் என்பன ஓதப்பட்டதுடன், சிவநாமபஜனை, சிறப்புச் சொற்பொழிவு, மற்றும் இரத்மலானை இந்துக் கல்லூரி மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அன்றைய சிறப்பு நிகழ்ச்சிகளின் ஆரம்ப நிகழ்வாக லேக்ஹவுஸ் இந்து மன்ற அங்கத்தவர்கள் வழங்கிய பஜனைப் பாடல் நிகழ்ச்சி பெருவிருந்தளித்தது. மாமன்ற குரு சிவஸ்ரீ இராமநாத விஜயகுமாரக் குருக்கள் பூசை நிகழ்வுகளை நடத்திவைத்தார்கள்.

மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி"யின் மகா சிவராத்திரி சிறப்பிதழும் அன்றைய தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

### சுவாமிஜி ஜீவனானந்தா மகராஜ் நினைவு அஞ்சலிக் கூட்டம்

இவ்வருடம் பெப்ரவரி 4ம் திகதியன்று மகா சமாதியடைந்த மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வணக்கத்திற் குரிய சுவாமிஜி ஜீவனானந்த மகராஜ் அவர்களது மனிதநேயப் பணிகளைப் போற்றி, அவர் செய்த அரிய சேவையை நன்றியுடன் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் கூட்டமொன்றை அவரது மறைவின் ஒருமாத நிறைவுதினமான கடந்த மார்ச் மாதம் 4ம் திகதியன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் கொழும்பிலுள்ள இந்து நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்து நடத்தியிருந்தது. மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடந்த இந்த அஞ்சலிக் கூட்டத்தில், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வணக்கத்திற்குரிய சுவாமிஜி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்களும், மாமன்றப் பிரதிநிதிகளும், இந்து மன்றங்கள் மற்றும் பாடசாலை இந்து மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

### ஞானவித்தகர் சீ. விநாசித்தம்பி நினைவு அஞ்சலிக் கூட்டம்

கடந்த வருடம் (2005) டிசெம்பர் 12ம் திகதியன்று மறைந்த அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான அறங்காவலரான ஞானவித்தகர், அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களது சமய, ஆன்மீக, சமூக நலப் பணிகளைப் போற்றி அவரது மறைவின் மூன்று மாத நிறைவையொட்டி அகில இலங்கை இந்து மாமன்றம் கொழும்பிலுள்ள ஏனைய இந்து நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த அஞ்சலிக் கூட்டமொன்று கடந்த மார்ச் மாதம் 12ம் திகதியன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் கடந்த இந்த அஞ்சலிக் கூட்டத்தில் மாமன்ற உபதலைவரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி துணை அதிபருமான செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் நினைவுச் சிறப்புரையாற்றினார். இந்து மன்றங்கள் மற்றும் பாடசாலை இந்து மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

### 8ம் ஆண்டு நிறைவு விழாவும் நினைவுப் பேருரையும்

இரத்மலானை மாணவர் விடுதியின் எட்டாவது ஆண்டு நிறைவு விழாவும் வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரையும் மாமன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த மார்ச் மாதம் 14ம் திகதி மாலை இரத்மலானை சக்தி இல்லத்தில் நடைபெற்றது. மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் நடந்த இந்த நிகழ்வில், மாமன்ற உப தலைவரும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி துணை அதிபருமான செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் "திருமந்திரம் கூறும் வாழ்வியல் கருத்துக்கள்" எனும் பொருளில் நினைவுப் பேருரையாற்றினார். மார்ச் மாதத்தில் பிறந்த விடுதிப் பிள்ளைகளின் பிறந்த தின வைபவமும் அன்றைய நிகழ்வின்போது இடம்பெற்றது.

# நந்திப் பெருமானும் நந்திக் கொடியும்



வி.கணேசமூர்த்தி,
செயலாளர்
இலண்டன் சிவன் கோவில் அறங்காவலர் சபை
பிரித்தானியா சைவத் திருகோவில் ஒன்றியம்



செம்மையின் முழுமை சிவம். சிவம் பேராற்றல் மிக்கது. அதன் சக்தியே (அருளே) இயக்கத்தால் இவ்விரண்டின் இயக்கத்தை ஓசை ஒலியாகச் சொல்வது யோக முறை. இதனையே சப்தப் பிரபஞ்சம் என்பர். சிவம்சக்தி இயக்கத்தை நாதம் விந்து எனவும் கூறுவர். இவற்றின் பேரியக்கத்தை சிவநடனம் அல்லது அண்ட திருக்கூத்து அல்லது சிவதாண்டவம் என்று கூறுவர். இவ்வாறு சிவசக்தி ஆடும்போது அதன் இயக்கத்தை தாள அடைவுகளாக்கிக் காட்டும் மத்தளம் கொட்டும் இயல்பாற்றலே நந்தி எனப்பட்டார். சிவனை நந்தியாகவே திருமூலர் கூறுவார்.

*"நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்து அடிபோற்றுகின்றேனே".*

நந்தியை வாகன நந்தி, அதிகாரநந்தி, கொடியில் இருக்கும் நந்தி என்று மூன்று வகையாகக் கூறுவர். சைவத்தின் தனிச் சிறப்பே முப்பொருள் உண்மையாகும். உலகில் உள்ள வேறு எந்த சமயமும் மெய்யியலும் சைவம் போலப் பகுத்தறிவிக்கும், அறிவிய லுக்கும் முதலிடம் தருவதில்லை. முப்பொருளாவன பதி – பசு – பாசம் அதாவது இறை – உயிர் – தளை என்பன, இவை என்றும் உள்ள பொருள் ஆகும். இவற்றின் இயக்கமே அண்டமாகும்.

அந்த இயக்கத்தை ஒழுங்குபடுத்தும் ஆற்றலின் வெளிப்பாடு அதிகார நந்தியாகும். அதிகாரநந்தி கருவறை முன்பாக (சிவ லிங்கத்தின் முன்பாக) மகா மண்டபத்தில் எழுந்தருளி இருப்பார். புராணங்களில் அவர் கையில் பிரம்பு ஒழுக்கநெறி நிற்கச் செய்து மக்கள் சிவத்தை வழிபட வழிகாட்டுவார். இவரே சிவன் திருக்கூத்து இயற்றும் போது மத்தளம் கொட்டுவார். இவ்வாறு அடியாரிடம் ஒழுக்கமும் நீதியும் நிலைக்கச் செய்யும் ஆற்றலின் வடிவமே அதிகார நந்தியாவார். அடுத்து திருக்கோவிலில் நுழைந்தவுடன் வாகன நந்தி என்ற ரிசபம் இருக்கும் அதுதான் அறத்தின் திரு வடிவம், அதாவது தூய மெய்யான நல்ல தருமத்தின் முழு நிறை வடிவம் (சிவம் சக்தி). எங்கெங்கு அறம் புண்ணியம் இருக்கிறதோ அங்கங்கு அதைப் போற்றி அதன்மேல் அமர்ந்து உயிர்கட்கு காட்சி தருவார்.

இவ்வாறு அறத்தின் திருவுருவாக உருவகம் செய்யப்பட்டதே வாகன நந்தியாகும். மேற்கூறியவற்றால் நந்தி என்பது ஒழுக்கத் தையும் அறத்தையும் மக்களுக்கு புகட்டும் ஆற்றல் என்பது புலப்படும். இறைவனாகிய சிவமும், சக்தியும் நம்முன் செயல்பட வேண்டின் சீவனைச் சிவமாக உயர்த்தவேண்டின் ஒழுக்கத் துடன் கூடிய அறச் செயல்களைச் செய்யவேண்டும். இதனையே நால்வர் பெருமக்களும் திருமூலரும் விளக்கிக் கூறுகிறார்கள்.

சைவத்திற்கு சோதனை வந்த போது நந்தி உயிர் பெற்று காட்சி கொடுத்த வரலாறுகளை அறிவோம். கன்னியாகுமரிக்கும் நாகபட் டணத்திற்கும் மத்தியில் அமைந்துள்ள சுசீந்திரத்தில் சுண்ணாம் பாலும், செங்கற்களாலும் உருவாக்கப்பட்ட நந்தி உள்ளது. சந்தாசாகிப் கோவிலின் சிலைகளை சிதைக்கும் போது நந்தி வைக்கோலைச் சாப்பிட்டு சாணம் போட்ட அற்புதத்தைக் கண்ட சந்தாசாகிப் சிலைகளை சிதைக்காது விட்டதாக வரலாறு கூறுகிறது.

திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் தலம் மறைகள் பூசித்த தலமாகும். இத்தலத்திலுள்ள நந்தி திருவாவடு துறை ஆதீனத் தைச் சேர்ந்த ஒரு மகான் பாடிய பாடலைக் கேட்டு உயிர் பெற்று நின்றது என்று கூறுகிறார்கள்.

திருப்புன்கூர் தலத்தில் மிகப் பெரிய நந்தி. இந்த நந்தி சிவ பெருமானின் கட்டளைக்கிணங்க இரண்டு அடி நகர்ந்து நந்தனார் இறைவனை வணங்க வழி செய்தது என்பது புராண வரலாறு. திருஞான சம்பந்தர் திருப்பட்டீஸ்வரத்தை அடைந்த போது, சம்பந்தரைக் காண்பதற்கு ஆவல் கொண்ட சிவன் தன்முன்நின்ற நந்தியை விலகச் சொல்ல நந்தியும் விலகியது. இப்படியான வரலாறுகளும் நந்திக்குண்டு.

கொடி கட்டுதல் என்பது ஒரு செயலைச் செய்ய எடுத்துக் கொள்ளும் உறுதியாகும். அது கொள்கைக் கோட்பாட்டின் மீது கொண்ட பற்றையும் செயல் வீரத்தையும் உணர்த்துவதாகும். பழந் தமிழ் வேந்தர்கள் தமக்கு என்று கொடி கட்டுதல், கொடிமரத்தைப் போற்றியதும் அறிவோம்.

பல்லவர்கள் சைவம் தழுவிய நந்திக் கொடி கொண்டதும் வரலாறு காட்டும். சிவன் கோவிலில் பலிபீடத்திற்கு (மனிதன் தனது தீய குணங்களை பலியிடும் இடம்) அருகில் இருக்கும் கொடி மரம் அதன் மீது பறக்கும் நந்திக் கொடியும் சிவசக்தியின் ஆட்சியை உலகுக்கு வெளிப்படுத்த எடுத்த முறையாகும். தூய அறமாக – நல்ல ஒழுக்கமாக – நன்மையே வடிவாக – புண்ணியச் செய லாகக் கடமை செய்து செம்மையாக சிவத் தொண்டு செய்து பிறவா நெறி நின்று வீடு பேறு பெறவருவார் வருக என்று அழைக்கும் அழைப்பே நந்திக் கொடியாகும். இவ்வாறு சிவத்தின் முப்பெரும் ஆற்றலை எடுத்துக் காட்டும் வண்ணம் முப்பெரும் நந்திகள் சிவன் கோவில் உள்ளனர். படைக்க வருக (வீடு பேறு) என அழைக்கும் நந்திக் கொடியும், காக்கவருக (சிவ ஒழுக்கத்தை) என அழைக்கும் வாகன நந்தியும், அருள் பெறவருக என அழைக்கும் அதிகார நந்தியும் முறைப்படி அமைந்துள்ள திறம் சிவன் கோவிலின் விந்தைமிக்க திறமாகும். முப்பெரும்நந்தியும் சிவத்தின் மூவகை ஆற்றலைக் காட்டும் உருவமாகும். சிவனிய மெய்யியலை உணர்வர். இதனை நன்கு உணர்வார். அன்றைய மன்னர்கள் எங்கள் நாணயங்களிலும் இடபம், நந்தி சின்னங் களை பதித்து மிக உயர்ந்த நிலைப்படுத்தியிருந்தார்கள்.

ஆனால், அன்னிய ஆட்சியின் மதவெறியால் எமது கோவில்கள் எமது பாரம்பரியம், எமது சின்னங்கள் எல்லாம் புதைக்கப்பட்டன. இன்று எல்லாம் உயிர் பெற்றுவிட்டபோதும், சைவர்கள் நந்திக் கொடியை மட்டும் பாராமுகமாக, அதாவது சில கோவில்களைத் தவிர வேறு எங்கும் காணமுடியாமலிருந்தது. ஆனால் திரு. சின்னத் துரை தனபாலா அவர்களின் பெருமுயற்சியால் வெளிநாடுகளிலும் இலங்கையிலும் உள்ள வீடுகளிலும் கோவில்களிலும் போக்கு வரத்து வாகனங்களிலும் நந்திக் கொடி பறந்து கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. இவரது பணியை கௌரவிக்கும் முகமாக பேரூர் ஆதீன கைலைமாமணி தவத்திரு சாந்தலிங்கம் இராமலிங்க அடிகளார், *"விடைக் கொடி வேந்தன்"* என்னும் பட்டம் கொடுத்து கௌரவித்தார். நாம் அனைவரும் இதனைப் பின்பற்றி செயல் படுவோமாக.

*"சந்திரனை சடைமுடியிற் கொண்ட சிவன் கழல் போற்றி"*
*"சிந்தையே சிவனாய் திகழும் நந்திப் பெருமான் போற்றி"*



# திருமூலரும் திருமந்திரமும்



திருமதி கௌசலாதேவி சிதம்பரேஸ்வரன்
ஆரம்ப பிரிவு தலைவர்
கொ/ விவேகானந்தா கல்லூரி

தென்னகத்தில் சித்தர் மரபை தோற்றுவித்தவர் திருமூலர். இவர் தமிழ்பற்றாளர். யோகநெறி விற்பன்னர். மெய்யறிவை போதித்த பெரும்புலவர். மெய்ஞானி என்றால் அது மிகையாகாது. சித்தர் குழாத்தின் தலைவர் என்றே கூறலாம். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்று கருதப்படுகிறார்.

இவருக்கு திருமூலர் என்ற பெயர் வரக் காரணக் கதை யொன்று உண்டு. அதாவது மூலன் என்பவன் ஓர் இடையன். அவன் பசுக்களை மேய்த்து வந்தான். ஒரு நாள் அவன் பசுக்களை மலையடி வாரத்தில் மேய்த்துக் கொண்டிருந்த வேளை அவன் திடீரென இறந்து விட்டான். அவனைச் சுற்றி அவனது பசுக்கள் சோகத்தில் வீடு திரும்பாது அங்கேயே நின்றன. அதனைக் கண்ட முனிவர் பசுக்களின் துயர் போக்க கூடுவிட்டு கூடு பாயும் தனது வித்தையால் மூலனின் உடலில் தனது உயிரை செலுத்தி மூலனாக மாறி பசுக்களை ஓட்டிச் சென்றார். அதனை அறியாது மூலனின் குடும்பத்தார் மூலன் செயலைக் கண்டு வியந்தனர். முனிவர் பின் வந்து தனது உடலைப் பார்த்த போது அது அங்கே இல்லை. அதுவே இறைவன் சித்தம் என எண்ணி அவ்வுடம்புடனேயே முனிவர் தனது காலத்தைக் கழித்தார்.

திருமூலர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் ஒன்று திரு மந்திரம். இது தந்திரம், மந்திரம், உபதேசம் என மூவகைப் பகுப்பினை உடையது. இதன் பெயருக்கு ஏற்ப மந்திரத்தைப் போல சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சிறப்பிற்குரிய நூலாகும். மேலும் தத்துவம், யோகம் ஆகிய கருத்துக்களுடன் சிறந்த மருத்துவக் கருத்துக்களும் செறிந்த நூலாகும்.

திருமந்திரம் யாப்பின் அமைப்பினால் தனித்தன்மை கொண்டது. இதன் தந்திரப் பகுதியில் ஒன்பது ஆகமங்களின் சாரங்களைத் தொகுத்துக் காட்டப்பட்டுள்ளது. அத்தந்திரங்கள் முறையே 1.நிலையாமை, 2.சிவனார்தம்புகழ், 3.யோகசாதனங்கள், 4.மந்திரயந்திர வழிபாடு, 5.சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நெறிகள், 6.சிவமே குருவாக வந்தமர்ந்து அருள் செய்வது, 7.அண்டத்தையும் பிண்டத்தையும் லிங்க உருவாகக் காண்பது – சிவபூசை குருபூசை ஆகியவற்றின் தேவையை அறிவது, 8.உயிர் எடுக்கும் உடல் பற்றியது, 9.அகர, உகர, மகரமாகிய ஓங்காரப் பிரணவமே எல்லாவற்றுக்கும் மூலம் என்பதையும் ஐந்தெழுத்து உண்மைகளையும் விளக்குகின்றது.

மந்திரங்கள் பதினொன்று என்று திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது. இதில் பத்தாவது மந்திரம் நேத்திர மந்திரமாகும். நமக்கு கண்கள் மூன்று. அவற்றுள் வலது கண் சூரியன், இடது கண் சந்திரன், நெற்றிக்கண். புருவமத்தி நெற்றிக் கண் யோக முயற்சியினால் திறக்கக்கூடியது. இது பிராணாயாமப் பயிற்சி யினால் அடையக் கூடியது. திருமந்திரம் யோகநூலாகக் காட்சி தருவதாலும், நெற்றிக் கண்ணும் யோகத்தால் திறக்கப்படுவதாலும் பத்தாவது மந்திரமான நேத்திரத்திற்கு ஒப்பாக திருமந்திரம் "பத்தாம் திருமுறை" யாகக் கொள்ளப்பட்டது என்று திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது.

திருமூலரின் நோக்கிலே மக்கள் தங்கள் வாழ்வில் படுகின்ற துன்பங்களைக் கண்டு மனம் வருந்தி மக்கள் எப்போதும் இன்பமுடன் இருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கில் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கேற்ப அதற்கான வழியைக் கூறுவதே திருமூலரின் நோக்கமாகும். மக்களின் துன்பத்துக்கு காரணம் எது? அறியாமையே, அறியாமையாகிய இருளே என்பதை உணர்ந்து அவர் தம் அறியாமை இருளை நீக்க நல்ல கல்வியும், நல்ல ஆசிரியனும் வேண்டும் எனக் கருதுகின்றார். அவ்வாறு அமையாவிட்டால் தானும் கெட்டு தம் வாழ்வையும் படு குழியில் தள்ளி விடுவர்! என்று எச்சரிக்கை செய்கின்றார்.

குண்டலினி சக்தியைப் பற்றி திருமூலர் கூறும் போது நம் உடம்பில் புதைந்து கிடக்கும் ஆற்றலை குண்டலினி சக்தி என்பர். அது நிற்குமிடம் மூலாதாரமாகும். நாபிக்குக் கீழே பன்னிரண்டு அங்குலம்

*எருவிடும் வாசற் கிருவிரன்மேலே*
*கருவிடும் வாசற் கிருவிரற் கீழே*
*கருவிடும் சோதியை உள்கவல்லார்க்குக்*
*கருவிடுஞ் சோதி கலந்து நின்றானே.*


என்று மூலாதாரமும் அதில் அமைந்துள்ள குண்டலினியும் சுட்டிக் காட்டி விளக்கப்படுகிறது. ஆகவே நீங்கள் எங்கே எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தாலும் மூக்கின் வழியாக ஓடுகின்ற காற்றை இடது பக்க நாசியின் வழியாக உள்ளுக்கு இழுத்து பூரகம் செய்வீர்களாக! அப்படிச் செய்தால் உங்கள் உடம்புக்கு அழிவு என்பதே இல்லை. மூலாதாரத்தில் பொதிந்துள்ள ஆற்றலுக்கு ஈடான ஆற்றல் வேறொன்றுமில்லை. அதுவே உயிரை ஆக்கவும், அழிக்கவும், காக்கவும் வல்லது. அதன் பயனை அறிந்து கொண்டால் வாழ்வு நிலைக்கும் என்பது ஞானநூல் கூறும் கருத்தாகும்.

எமது சைவ ஆகமங்களாக கருதப்படும் பன்னிரு திருமுறை களிலும் பத்தாவது திருமுறையாக திருமூலர் பாடிய திருமந்திரம் விளங்குகின்றது. இந்நூலில் மூவாயிரம் பாடல்கள் காணப்படு கின்றன. ஒவ்வொரு பாடலும் அரிய பொருள் புதைந்துள்ளவை. மந்திர, தந்திர சக்தி வாய்ந்தவை. நாமும் இவற்றைப் படித்து வாழ்வில் பயன் பெறுவோமாக.


தியானம் என்பது புலன்களை அடக்கி மனதை இடையறாது பரமாத்மாவிடம் செலுத்துவதாகும். ***(ஞான சிந்தாமணி)***

ஆசையை மிகவும் சிறிய ஒரு விதையுடன் ஒப்பிடலாம். அது புள்ளியைவிடப் பெரிதாக இல்லாத ஒரு விதையிலிருந்து வளரும் பெரிய ஆலமரம் போன்றது

***(அன்னை ஸ்ரீசாரதாதேவி)***



# THE NANDHI FLAG



Justice C. V. Wigneswaran
*Retired Judge of the Supreme Court of Sri Lanka*

Hinduism is revealed through symbolism. Most abstruse spiritual truths are portrayed in visual delights both for appreciation of beauty as well as for deep penetrative spiritual investigation and contemplation. Let us examine the example of SHIVA. God Almighty or the all-pervading omnipresent, omniscient, omnipotent Godhead is referred to by Tamil Hindus as SHIVAM. Shivam in Tamil means auspiciousness, final salvation and also God existing as Sivan, one of the Hindu Trinity. There is a difference between SHIVAM and SIVAN in Tamil. The Advaitic all pervading PARA BRAHMAN is SHIVAM. A lesser God in the category of Brahma and Vishnu is SIVAN.

Shiva in his Para or transcendental aspect is inactive in creation. His energy or activating force called SHAKTHI is relegated to his "consorts", the productive "female" powers that make possible the infinite unfoldments in the Cosmos. Thus, Shiva remains as a figure of the Grand Ascetic, eternally enthroned in the towering mountain world, where the powerful, mighty GANGES in her descent from heaven passes through his matted locks. Shiva is passive, meditative and owns nothing but his Shakthi or power or energy gushes out from him to be active, outward and all encompassing.

This same idea of the latent spirit, which is SHIVA and the patent nature, His Consort, is picturised by KALI. Kali represents the Eternal principle in Nature . She is traditionally pictured as a four-armed woman standing on the recumbent form of SHIVA or the Infinite, bringing out the idea that the activities of Nature or the phenomenal world (SHAKTHI) spring forth from the latent spirit (SHIVA). The four arms of KALI symbolize cardinal attributes - two beneficent and two destructive, illustrating the essential duality of matter or creation.

It was St. Mathew who said in the New Testament 'If therefore thine eye be single, thy whole body shall be full of light' (Mathew 6.22). During deep meditation the single or spiritual eye gains vision within the central part of the forehead. This omniscient eye is referred to as the third eye of Shiva. Shiva in deep meditation is portrayed to have his third eye open.

Shiva in His aspect of Nataraja or the cosmic dancer is scripturally represented as working out the infinite modes of rhythm in the processes of universal creation, preservation and destruction. The small drum (Udukkai) in one hand symbolizes creation reminding the Biblical saying in the Gospel according to St. John - "In the beginning was the Word and the Word was with God and the Word was God". The primordial sound is portrayed by the drum. The abayakara or the hand dispelling fear and assuring protection, symbolizes preservation. Fire in another hand depicts the aspect of destruction. Thus, His dance continues, everything in the Universe having to come into existence, exist for some time and go into extinction.

The three fold nature of God Absolute is brought out by the Dance of Shiva. Anything created obtains characteristics or attributes and hence enters the dimension of duality and therefore becomes subject to Time. The movement in Time is also personified by the Dance.

Each of the above picturised portrayals hold deep spiritual truths. There are innumerable other symbolic representations too of Shiva and other deities as well.

NANDHI too needs to be examined in its literal as well as esoteric sense. NANDHI or the BULL is said to be the vehicle of SHIVA. Nandhi, Rishabha or Idapam all refer to a Bull. 'BRISH' in Sanskrit means Bull as well as DHARMA. The Bull therefore represents Dharma. Dharma is that morality or the internal discipline by which a given social order is protected.

The 'MATSYA PURANA' (CXLV. 27) said "It is by Dharma that civilization is maintained". Therefore Dharma may be defined as social norm or moral law or social vocation or function, social order, duty, righteousness or even as Religion mainly in its exoteric or external aspects, all of Time.

Since Nandhi or the sacred Bull is said to be the vehicle of Shiva, it also means that Dharma is the vehicle of Shiva. To the ordinary Hindu, Nandhi represents physical vehicle of Shiva in the form of a Bull. To the perceptive recluse the Bull represents Dharma and therefore Time.

The passive Shiva is said to be in a state of Being. When He needs to stir and move into a state of Becoming, His vehicle would be Dharma or Nandhi the Bull. What does this mean? Movement means Time. As soon as mobility is invoked then Time begins to function. Time is the essence of the state of Becoming. State of Becoming means to be subject to change and transitoriness. Since it comes and goes, and does not last forever it is called Maya or illusion. So Shiva being the primordial unchangeable GODHEAD, when He needs to enter the Time dimension, He is symbolically said to be using his vehicle Nandhi. He sits on "Time-Dharma".

Use of Nandhi connotes the activation of Dharma or attributes for a given Age, which is the essence of all that is created. When we say SWADHARMA, it means the duties and the way of life cast upon me intrinsically as well as by circumstances and environment. There could be similarly duties and mode of behaviour expected of a Society too. Such behavioural pattern could be for the well being of the individual or society or for its or their detriment and decline.

According to the PURANAS, the Dharma Devatha or the God of Dharma is said to be of the form of a Bull, white in colour, having four legs, two horns, and a long tail touching earth. The said BULL would stand and walk on all four legs during the 1st Yuga (KRETHA YUGA). The characteristics of this Yuga are said to be that none would be hurt nor becomes hurt physically nor mentally, none would covet another's possessions, none would flout nor question their elders, none would forget the help rendered by others to themselves, none would suffer diseases and so on. The Dharma Devatha would stand on three legs during THRETHA YUGA, two legs during THUWAPARA YUGA and one leg during KALIYUGA (The present Yuga)

The characteristics of the present Yuga are said to be that hurting by thought, word and deed would be the order of the day, greed and covetousness rampant, questioning the elders and those in authority common, ingratitude a trait and second nature, people would be prone to newer and newer diseases and so on. Such characteristics have been recorded centuries ago. We see them today around us.

The standing on one foot in the present Yuga is significant. The NANDHI FLAG, it would be noticed, does not portray a Bull standing on all its feet. It portrays a recumbent Bull with only one foot slightly raised, while the other three feet are bent and reclined. It portrays the Dharmic (or more correctly the Adarmic) level of consciousness of the present Yuga. If the Bull reclines fully with all its feet bent, that would signify that the end of the Yuga (pralaya) is at sight. Therefore, the Nandhi Flag is teaching us certain spiritual truths. What are they?

(i) Almighty, the Everpresent and All-Knowing Shiva is beyond Time. But when he needs to enter into Time dimension, which is the dimension we human beings are used to, he uses Dharma Devadha or Time as his vehicle. Unable to portray Time pictorially, the other meaning of Brish or Dharma, (from which came the word Rishabha and Idapam) was used. That was a White Bull. Hence, Nandhi the Bull came to be identified as Shiva's vehicle.

ii) Nandhi stands for the Time-encompassed World and its inherent qualities (Dharma). To transcend Time should be the goal of every spiritual seeker. Seeking permission from Nandhi to see God signifies this.

(iii) When Nandhi is placed at a Temple between the Seeker and the Sanctum Sanctorum which houses either the Shivalinga or the idol of Shiva, what is sought to be informed to the Seeker is that transcending Time brings the Seeker face to face with the Reality. If Nandhi or Time moves aside, you come face to face with the Almighty Shiva. When we say Nandhi is blocking the vision of Shiva it also means our Time consciousness and worldly characteristics block our vision of the Reality..

(iv) The recumbent Nandhi (Bull) with one foot raised up reminds us that our moral and social norms are at a low ebb in the present Era. Yet transcending such an environment would bring us close to Reality (Shiva). Namasangirthanam (singing the holy names of the Almighty) is recommended for the present Age to transcend our environment and Time.

(v) Patience and passivity are generally the qualities of a powerful Bull. Seekers are to learn to be passive and patient to invite the Grace of Shiva. Thirumoolar refers to Shiva as Nandhi. He sees no difference between the two. Shiva is Timeless. When He is in Time, He is Nandhi. Thus, the Vehicle of the Unseen, All Embracing God is God Himself.

The Nandhi flag encapsulates the essence of Hindu Saiva thought. It portrays (i)Reality (ii) Its Vehicle which is equally Holy as Reality (iii) As well as the World in which we live today and (iv) The moral and ethical norms which condition and causate our thoughts and actions. As Hindus we are reminded of ourselves, the moral fibre of our existence at the present moment of Time, the need to transcend the limitations of Time in order to reach the Holy Feet of the Divine, the need to be patient awaiting the grace of the Almighty, all portrayed by the reclining Nandhi. The Nandhi Flag is an apt representation of the Hindus who are passive yet perceptive, hale yet humble and deep, devout and detached.

MAY THE HOLY NANDHI BLESS US ALL!


## Manifestation...

'Manifestation, and not creation, is the word of science today, and the Hindu is only glad that what he has been cherishing in his bosom for ages is going to be taught in more forcible language, and with further light, from the latest conclusions of science.'

*- Swami Vivekananda*



# நந்தி தேவருக்கு திருமணம்



சிவகவிமணி தேவாரமாமணி திருமதி செல்வநாயகி முத்தையா

மகப் பேரின்மையால் வருத்தமுற்ற சிலாதமுனிவர் ஐயாறப்பனைப் பூஜித்து தவம் செய்ய ஐயாறப்பர், "சிலாதனே நீ புத்திர காமேஷ்டியாகம் செய்தல் வேண்டும். யாகம் செய்வதற்காக யாக பூமியை உழும் பொழுது பெட்டகம் ஒன்று தோன்றும். அதில் ஒரு புத்திரன் காணப்படுவான். அவனுக்கு ஆயுள் பதினாறு வயது தான். அவனை எடுத்துக் கொள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வாறே சிலாத முனிவரும் யாக முடிவில் பூமியை உழும் போது ஒரு பெட்டகம் அகப்பட அதனை திறந்து பார்த்தார்.

## செபேஸ்வரர் உதயம்

அதில் நான்கு தோள்களும் மூன்று கண்களும் சந்திரனை அணிந்த முடியும் கொண்டு விளங்கும் ஒரு மூர்த்தியை வணங்கினார். ஐயாறப்பர் "ஆசரீரியால் பெட்டியை மூடித்திற" என்று கட்டளையிட்டார். அம்மூர்த்தி முனைய வடிவம் நீங்கி அழகிய குழந்தை வடிவுடன் திகழ்ந்தது. பெற்றோர்கள் அக் குழந்தைக்குச் செபேஸ்வரர் என்று நாமகரணம் செய்து வளர்த்து வந்தார்கள். செபேஸ்வரர் பதினாலு வயதுக்குள் வேதாகம சாஸ்திரங்களாகிய சகல கலைகளிலும் வல்லவரானார்.

## வைராக்கியத்தால் பெற்றவரம்

அறிவின் மிக்க இம்மைந்தனை இன்னும் இரண்டு வருடத்தில் இழக்க நேருமே என்று தாய் தந்தையர்கள் கவலையடைந்தனர். செபேஸ்வரர் ஐயாறப்பன் ஆலயத்தை அடைந்து இறைவனை பூஜித்து அயனரி தீர்த்தத்தில் நீராடி காலின் மேல் காலை ஊன்றிக் கடுந்தவம் செய்தார். செபேஸ்வரரின் அருமைத் திருமேனியை நீர் வாழும் பாம்பு மீன் முதலியவைகள் அரித்துத் தின்றன. பல நாட்களாகியும் வெளியே வராத மகனைக் கண்ட தாய் தந்தையர்களும் மற்றவர்களும் கலங்கினர். செபேஸ்வரரின் உறுதியான அன்பையும் வைராக்கியத்தையும் கண்டு மகிழ்ந்த இறைவன் காட்சி கொடுத்து வரங்களையும் பதினாறு பேறுகளையும் கொடுத்தருளினார்.

மேலும் இறைவன் செபேஸ்வரரின் ஏற்புடம்பைக் கண்டு அவ்வுடம்பை நலமுறச் செய்தல் வேண்டுமெனத் திருவுளங் கொண்டு கங்கை நீர், மேக நீர், பிரம்மன் கமண்டல நீர், அம்மையின் கொங்கை பால், இடப நந்தியின் வாய் நுரை நீர் எனும் ஐந்து நீரினாலும் தாமே அபிஷேகம் செய்தார். செபேஸ்வரர் உடல் ஊறு நீங்கிச் சூரியனைப் போல விளங்கியது.

## திருமணம்

சிலாத முனிவர் வசிஷ்ட முனிவரின் பேத்தியும், வியாக்ர பாத முனிவருடைய மகளும், உபமன்யு முனிவரின் தங்கையுமாகிய சுயம்பிரகாசை அம்மையாரைத் தமது புதல்வனுக்கு பங்குனி மாத புனர்பூச நட்சத்திரத்தில் திருமணம் செய்வித்தார். பின் செபேஸ்வரர் ஐயாற்றண்ணலிலால் உபதேசம் பெற்று கயிலையில் சிவகணங்களுக்குத் தலைவரானார். முதற்றிருவாயிலில் இருந்து காக்கும் உரிமையும் சைவ ஆச்சாரியருள் முதற் குருவர்ந் தன்மையும் பெற்றார். இத்தகைய பேறுகளைப் பெற்று திருநந்தியெம்பெருமான் மேலும் ஐயாறப்பரிடம் நினைத்த பதினாறு பேறுகளைத் தந்தருள வேண்டும் என்று வரமாகப் பெற்றார்.

## நந்திகேஸ்வரர் திருக்கலியாணம் நிகழ்ந்த முறை

பெருமைமிகு திருமழப்பாடி ஸ்ரீ வைத்திய நாத சுவாமி திருக் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் பரமேஸ்வரனுக்கு காவலாகவும் உற்ற தோழனாகவும் விளங்கிவரும் நந்தி தேவருக்கும் சுயசாம்பிகை தேவியாருக்கும் (சுயம்பிரகாசையம்மை) நிச்சயிக்கப்பட்டு இத்தெய்வீகத் திருமணம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. (தஞ்சை மாவட்டம் திருவையாற்றை அடுத்த அந்தணர் குறிச்சியில் வயலில் உழுது கொண்டிருக்கும் போது பூமியிலிருந்து கிடைத்தவர் நந்திகேஸ்வரர். மாமுனிவர் சிலாதமுனிவரே இவரது தகப்பனார் ஆவார்.)

## திருமேனி கிடைத்தல்

இந்த பிறப்பு நிகழ்ச்சி இன்றும் நந்தியெம்பெருமானின் திருமணத்துக்கு முதல்நாள் காலை அந்தணர் புரத்தில் நடந்து வருகிறது. அதாவது வெள்ளிக்கலப்பையால் பூமியை உழுவார். அப்போது ஏற்கனவே மறைத்து வைக்கப்பட்ட நந்தியெம் பெருமானின் திருவுருவம் கிடைக்கும். அங்கேயே நீராட்டி திருவையாறு திருக்கோயிலை அடையும். அன்று மாலையே நந்தியெம் பெருமானுக்கு பட்டாபிஷேகம் நடைபெறும். மறுநாள் திருமழப் பாடியில் நந்தி எம்பெருமானுக்கும் வசிஷ்ட முனிவரின் தவப் புதல்வியாகிய சுயசாம்பிகை தேவிக்கும் திருமணம் நடைபெறும்.

## மாப்பிள்ளை வீட்டார் வருகை, மாப்பிள்ளை அழைப்பு

திருமணத்தன்று காலை நான்கு மணிக்கு கம்பீரமான குதிரை வாகனத்தில் மாப்பிள்ளை 'நந்தி தேவர்' வெள்ளித் தலைப்பாகை, வெள்ளிக் கோலுடன் வருவார். உடன் திருவையாறு இறைவன் ஐயாறப்பனும், அறம் வளர்த்த நாயகியும், பல்லக்கில் வருவார்கள். வரும்போது நெய்த்தானம், கடுவெளி, பனையூர், நாதன்பேட்டை வழியே வந்து கொள்ளிட ஆற்றில் இறங்குவார். (சம்பந்தி அழைப்பு) அதே சமயம் கொள்ளிட ஆற்றங்கரையில் போடப் பட்டுள்ள பெரிய பந்தலில் பெண் வீட்டார் வைத்தியநாத சுவாமியும் (திருமழப்பாடித்தலப்பெருமாள்) சுந்தாம்பிகையும் அழகிய கண்ணாடிப் பல்லக்கில் சென்று சம்பந்திகளை 'வாங்க வாங்க' என்று வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறும். வரும் வழியில் ஒவ்வொரு வீட்டின் முன்னும் பெரிய பந்தல் போட்டு வரவேற்பு அளிக்கப்படும். திருமழப்பாடியில் நான்கு வீதிகளையும் வலம் வந்த பின் திருக் கோயிலின் முன்னே உள்ள பிரமாண்டமான கலியாண மண்டபத்தில் மாலை ஆறு மணிக்கு நந்தி தேவருக்கும் சுயசாம்பிகைக்கும் திருமணம் நிகழும். மனிதர்களின் சம்பிரதாயம் போல் கோயில் ஸ்தானிகர் நாத்திமுடிச்சும் போடுவார்.

## வரவேற்பு வைபவம்

தனியே வந்த நந்தியெம் பெருமான் சுயசாம்பிகை தேவியாருடன் தம்பதி சமேதராய் ராஜ வீதிகளில் பவனி வருவார். அப்போதும் மணமக்களுக்கு பலத்த வரவேற்பு அளிக்கப்படும். (வருவது வைத்திய நாதன் பேட்டை : போவது புனல் வாயில் என்பது பழ மொழி) கொள்ளிட ஆற்றங்கரையில் சம்பந்தியையும், மணமக்க ளையும், பெண் வீட்டார் (பல்லக்கு வலம் வந்து) வழியனுப்புவர். அப்போது பிரமாண்டமான வாண வேடிக்கை நடக்கும். மேற்குறிப் பிட்ட பழமொழிக்கேற்ப போகும் போது புனல் வாயில் பெரும் புலியூர் என்ற ஊர் வழியாக சென்று திருவையாறு அடைவர்.

திருவையாற்றை சுற்றியுள்ள தெய்வங்கள், என்னது எங்களுக்கு அழைப்பு இல்லாமல் நந்தி கல்யாணத்தை நடத்திவிட்டீர்களே! என்று ஐயாறப்பனைக் கேட்டார்களாம். உடனே ஐயாறப்பர், கவலைப்படா தீர்கள், கலியாணம் நடந்த நாற்பதாம் நாள் மணமக்களை உங்கள் பகுதிக்கு அழைத்து வருகிறோம் என்றனராம்.

அதன்படி மணமக்களுடன் ஐயாறப்பன் பல்லக்கில் ஏறி திருப் பழனம், துரச்சோற்றுத்துரை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்யாடியப்பர், (திருநெய்த்தானம்) ஆகிய ஊர்களுக்குச் சென்று எட்டு பல்லக்கில் உலா வருவர். இதுவே "சப்தஸ்தானம்" ஆகும்.

## இறைவனிடம் நந்தி எம்பெருமான் கேட்ட பதினாறு பேறுகளின் விளக்கம்

பெருமானே! மோட்சம் கிட்டினாலும், நரகம் கிடைத்தாலும், இறந்தாலும், பிறந்தாலும், இன்பமே அனுபவித்தாலும், பிறைமுடி சூடிய பெருமானே! யான் விரும்பிக் கேட்டுக் கொள்ளும் இப் பதினாறு வரங்களையும் மறுக்காமல் வழங்கியருள வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

பெருமானே!

1. வேதங்களைப் பழித்தாலும் சிவத்தைப் பழித்தலுமாகிய செயலைக் கண்டால் பொறுக்கயியலாத மனத்தையும்,
2. மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன் ஆசைகளுக்கும் அடிமைப்படாத அறிவையும்,
3. எடுத்த பிறவி தீதாகுமே என்று அறியா மாந்தரோடு மாறுபட்டு சேராது வாழும் இயல்பையும்,
4. நல்ல அறச்சிந்தனையுடையவர்களோடு உறவு கொள்ளவும்,
5. சிவனடி மறவாச் சிந்தனையாளர் எது கேட்பினும் அதனை மறவாது கொடுக்கும் தன்மையையும்,
6. தவவலிமையுடையவர் நம்மைத் தண்டித்தாலும், அதனை மகிழ்வொடு வணங்கி ஏற்றுக் கொள்ளும் இயல்பும்,
7. குருநாதர் நமக்கு உபதேசித்த உண்மைப் பொருளை உண்மையுடன் கடைப்பிடிக்கும் ஆற்றலையும்,
8. சிவனடியார் தீமை செய்தாலும் அதனைச் சிவச் செயல் என ஏற்றுக் கொள்ளும் மனத் தெளிவும்,
9. சிவனடியாரிடத்து மனமும் வாக்கும் ஒன்றுபடும் தன்மையும்,
10. கனவில் கூட சிவனடியார்களை வணங்கும் மனப் பக்குவத்தையும்,
11. மனத்தாலும் மற்றொரு கடவுளை வழிபடாத உறுதிப் பாட்டையும்,
12. நாள் தோறும் உனது புகழையே பேசிக் கொண்டே இருக்கும் அழகையும்,
13. தீமை புரியும் புறச்சமயங்களை அழிக்கவல்ல ஆற்றலையும்
14. உண்மையாகவே பிறரது பொருளுக்கு ஆசைப்படாத வளத்தையும்,
15. விரும்பத்தகாத அழகுடைய பிறர் மனைவியைக் கண்டு ஆசைப்படாத விரதத்தையும்,
16. பரிசுத்தமான மனதில் 'யான்' எனது என்னும் தன்முனைப் பற்று துறவு மனப்பான்மையும்,

*அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு*
*நங்குருமரபுக் கெல்லா முதற்குரு நாதனாகிப்*
*பங்கயத் துளவநாறும் வேத்திரப் படைபொறுத்த*
*செங்கையெம் பெருமாநந்தி சீரடிக்கமலம் போற்றி.*

*ஓம் நந்தி கேஸ்வராய நமஹ:*

## இதயம் பேசுகிறது

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி"யின் தை - பங்குனி வெளியீட்டைப் பார்த்தேன். அற்புதமான - ஆன்மீக விருந்தாகும் இதழ். முகப்பு அட்டை மனோலயமாக அமைந்துள்ளது. கோபுரமும், சிவனும், சிவலிங்கமும், நந்தியும் மனதைக் கவர்கின்றன. அருட்கவி, மூத்த சிவாச்சாரியார், சுவாமி ஜீவனானந்தா ஆகியோருக்கான அஞ்சலிகள் நன்றிக்குரியன. கவிஞர் கந்தவனம் அவர்கள், திருமதி. பத்மா சோமகாந்தன் அவர்கள், சிவகவிமணி செல்வநாயகி முத்தையா அவர்கள், செல்வி வி. லாவண்யா, ஆன்மீக அருளொளி நா. சிதம்பரநாதர், திரு. த. மனோகரன், சிறுவர் - மாணவர் பகுதிகளை அலங்கரிப்போர் செல்விகள் வி. இலக்ஷிணியா, திவ்யாஷனி சிவசுப்பிரமணியம், டிடுனி ஷமத்கா புஷ்பகுமார, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள், முகவைக் கவிஞர் தெய்வச்சிலை அவர்கள், புலவர் ஸ்ரீவிசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்கள், சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் ஆகியோரின் ஆக்கங்களும், தெய்வத் திருமகள் - சிவதமிழ்ச் செல்வியின் காட்சியும், மாநாட்டு அம்சங்களும், யுனிஆட்ஸ் பதிப்பகத்தாரின் அழகுறு அச்சும் இதழினைச் சீராக வணங்க வைத்துள்ளன. போற்றுதற்குரிய கைங்கரியம். மலிவான விலை. அனைவருக்குமான ஆன்மீக சஞ்சிகை.

- கே. என். சிவஞானராஜா

ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தெய்விக வாழ்க்கை ஒரு நீரோட்டம் போன்றது. அது மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்படவேண்டும். அதில் தேக்கநிலை ஏற்படுவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. தேக்க நிலையை அனுமதிக்கும் அந்த விநாடியே நமது ஆன்மிக முன்னேற்றம் தடைப்பட்டு ஒரு முடிவுக்கு வந்துவிடும். **(சுவாமி யதீஸ்வரானந்தர்)**



# தொடரும் நினைவலைகள்



கொழும்பு மாநகரின் மத்தியில் உயர்ந்து காட்சியளிக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகக் கட்டிடத்தை அமைக்கும் பணிக்கு பெரிதும் பங்களிப்புச் செய்த வள்ளல் பெருமக்களுள் ஒருவராகக் குறிப்பிடக்கூடியவர் அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்கள். மாமன்றத்தின் முன்னாள் தலைவராகவிருந்த இவரது சேவையைப் பாராட்டும் வகையில், இவரது நினைவு நாளிலே மாமன்றம் வருடந்தோறும் நினைவுப் பேருரையை நடத்தி வருகிறது.

அமரர் பாலா அவர்களின் நண்பர்களுள் ஒருவராகவிருந்தவர் பிரபல எழுத்தாளர் நா. சோமகாந்தன் அவர்கள். இவர் இவ்வருடம் [2006] ஏப்ரல் மாதம் 28ம் திகதி காலமானார். நாடறிந்த எழுத்தாளரான இவர் நாவல், சிறுகதை, கட்டுரை, வானொலிப் பேச்சு ஊடாக கலை, இலக்கிய ரசிகர்களால் பெரிதும் அறியப்பட்டவர். கலை, இலக்கியத் துறையில் மட்டுமல்ல சமய, சமூக நலத் துறைகளிலும் பெரிதும் பங்களிப்புச் செய்தவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நூற்றாண்டு விழா சபையில் இணைந்து பணியாற்றியதன் மூலம் யாழ் நகரில் நாவலருக்கு மண்டபத்தையும் சிலையையும் நிறுவுவதில் பெரும் பங்காற்றியவர்.

இவர் மாமன்றத்துடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். இவரது துணைவியார் திருமதி பத்மா சோமகாந்தன் மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினராகவும், மாமன்ற நூலகக் குழுவின் செயலாளராகவும் சேவையாற்றுகிறார்.

அமரர் பாலா அவர்களின் பங்களிப்பை பெரிதும் மதித்துப் போற்றும் வகையில் 1996ம் ஆண்டில் இவரது நான்காவதாண்டு சிரார்த்த தினத்தன்று மாமன்றத் தலைமையகத்தில் அவரது புகைப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட நிகழ்வைக் குறிப்பிட்டு, எழுத்தாளர் நா. சோமகாந்தன் அவர்கள் 1996. 08. 04ம் திகதி தினகரன் வார மஞ்சரியில் சிறப்புக் குறிப்பொன்றை எழுதியிருந்தார்.

அமரர் பாலா அவர்களது நினைவுப் பேருரை நிகழ்த்தப்படும் இந்நாளில் அமரர் நா. சோமகாந்தன் அவர்கள் எழுதியிருந்த அந்த நினைவுக் குறிப்பை "இந்து ஒளி" பிரசுரம் செய்கிறது.

## வள்ளல் பாலா

எனது நெருங்கிய நண்பர்கள் வட்டாரத்தில் "பாலா" என செல்லமாக அழைக்கப்பட்ட தொழிலதிபர் வே. பாலசுப்பிரமணியம், எமது தலைமுறைக் காலத்தில் கலை, இலக்கியம், விளையாட்டு, கல்வி, ஆன்மிகம் முதலிய கொடிகள் தலையெடுத்து வளர்வதற் கான கொழுகொம்பாக விளங்கியவர்.

இதனைப் பிரகடனம் செய்வது போல சென்ற வார இறுதியில் அவரின் நான்காவதாண்டு சிரார்த்ததினத்தன்று கொழும்பு சிற்றம்பலம் கார்டினர் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டிடத்தில் அவரின் புகைப் படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. "தற்கால நெருக்கடிகளுக்கு இந்து சமயத்தின் அணுகுமுறை" என்னும் தலைப்பில் அமரர் வே. பால சுப்பிரமணியம் நினைவுப் பேருரையை நீதியரசர் விக்னேஸ்வரன் நிகழ்த்தினார்.

காலத்துக்குக் காலம் பல சாதனைகள் நிகழ்ந்து வடமராட்சி என்னும் பிரதேசம் வரலாற்றில் இடம் பிடித்து விட்டது. வடமராட்சி யின் நடுநாயகமாக உள்ள நெல்லியடிக் கிராமத்தின் சந்தியை ஒட்டினாற் போலமைந்த டாக்குத்தர் வேலுப் பிள்ளையின் இல்லம், உடற்பிணி தீர்க்கும் மருத்துவத்துக்கு மட்டுமல்ல, உளப்பிணி தீர்க்கும் கல்வி, ஆன்மிகத் துறைகளுக்கும் பலகாலமாக உதவி யிருக்கிறது. 1950களின் முற்பகுதியில் பாலா கம்பீரமான இளைஞராகவிருந்த காலப்பகுதியில் அவர் விடுமுறைக்கு வீடு வரும் நாட்களில் நெல்லியடியைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த பல இளைஞர்கள் அந்த இல்லத்தை மொய்த்து விடுவார் கள். பாலாவின் ஆஜானுபாகுவான தோற்றம், கணீரென்ற குரல், சாதனைகளைப் புரிய வேண்டுமென்ற உறுதி எல்லாவற்றிற்கும் மேலாக கருணையோடு உதவும் மனப்பாங்கு என்பன அக்காலத் திலேயே அபிமானத்திற்குரிய தமது தலைவராக பாலாவை அந்த இளைஞர்கள் போற்றுவதற்கு காரணமாக இருந்தன.

அந்தக் காலத்தில் அப்பிரதேசத்தில் ஊருக்கு ஊர் கரப்பந்தாட்டக் குழுக்கள் இருந்தன. இவர்களை ஒன்று சேர்த்து கரப்பந்தாட்டச் சம்மேளனம் ஒன்றினை அமைக்கவும் உள்ளூர் விளையாட்டுத்துறையை பெரிய அளவில் வளர்க்கவும் மாணவப் பருவத்திலேயே திட்டங்கள் தீட்டினார். அத்துளு நன்னீர்க் கிணற்றை அபிவிருத்தி செய்ய ஆசைப்பட்டார். சகல வசதிகளும் கொண்ட நூலகம் ஒன்றினை ஏற்படுத்தவும் வழிவகைகள் ஆராயப்பட்டன. ஒவ்வொருதுறை விஷயங்களையும் கவனிக்க இளைஞர் குழுக்களை அமைத்து திட்டங்களை நிறைவேற்ற நிதி சேகரிப்பதற்காக பிரபல சர்க்கஸ் கம்பனி ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையில் 1952 பொதுத் தேர்தல் குறுக்கிட்டது. திட்டங்கள் அக்காலத்தில் நிறைவேற வில்லை. அந்த இளைஞர்கள் (பாலா உட்பட) வாழ்க்கைப் பயணத்தில் தத்தம் திசையை நோக்கிச் சென்று விட்டனர்.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு 1974ல் பாலாவைச் சந்திக்க அவருடைய அலுவலகத்துக்குச் சென்றிருந்தேன். அவர் இளைஞராயிருந்தபோது சிறுவனாக இருந்த என்னை, பிரபலத் தொழிலதிபராக வளர்ச்சி பெற்றிருந்த நிலையில் அவர் நினைவில் வைத்திருப்பாரா என உள்ளூர சந்தேகம் எனக்கிருந்தது.

பெரிய அளவில், அதிக பக்கங்களில் மிகப் பெரும் மலராக நாவலர் நூற்றாண்டு மலர் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த போது, விளம்பரங்கள் இடம் பெறாமல் மலரைத் தயாரிக்க வேண்டும் என

விரும்பினோம், தயாரிப்புச் செலவுக்கு சில உபகாரி களின் உதவியைப் பெறவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த தால், பிரபல தொழிலதிபராக விளங்கிய பாலாவிடம் ஒரு பகுதிச் செலவுக்கு உதவி கேட்கப் போயிருந்தேன்.

அங்கே தனது அலுவலகத்தில், ஊரில் கெட்டு நொந்துபோய் இருந்த தனது இளமைக்கால நண்பர்கள் பலரை பொறுப்பான பதவிகளில் பாலா அமர்த்தியிருந்தார்.

என்னை அடையாளங் கண்டு கொண்ட பாலா ஒரு நிமிட தாமதமுமின்றி தனது அறைக்குள் அழைத்துச் சென்று அன்பு ததும்ப குசலம் விசாரித்து உபசரித்தார், உள்ளத்தால் இருபது ஆண்டுகளுக்கு முன் பழகிய அதே பாலா. "வலக்கை கொடுப்பது இடக்கைக்கு தெரியாது" என்பார்கள். பாலாவைப் பொறுத்தவரை அது உண்மை. பொக்கற்றுக்குள் கையை விடும்போது எவ்வளவு கையில் வருகிறதோ அதை எண்ணிப் பார்க்காமல் அப்படியே கொடுத்து விடுவது இளமையிலிருந்தே பாலாவின் பழக்கம். மலரைப் பற்றிக் கூறினேன். என்ன தொகையை உதவுவேன் என்பதை அவர் சொல்லவில்லை. பழகிப் போன வழக்கப்படி வளையம் வளையமாக சிகரட் புகையை தொடர்ந்து ஊதித் தள்ளியபடி ஊரைப் பற்றியும் கடந்து போன எமது இளமைப் பருவ சம்பவங்களையும் பற்றியே சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.

நான் புறப்படுகிறபோது, தமக்கே உரித்தான சிரிப்புடன் சொன்னார். "மலரின் முழுச் செலவுக்கான பில்லை எனக்கு அனுப்புமாறு அச்சுக்கூடத்தாருக்குச் சொல்லுங்கள். மலரில் எனது பெயரைப் போடவேண்டாம்."

என்ன செலவு ஏற்படும் என்றுகூட விசாரிக்காமல் முழுச் செலவையும் தாமே ஏற்பதாக ஒப்புக்கொள்ளும் மனிதர், பாலாவைப் போல எவர் இருக்கமுடியும்?

எத்தனையோ பெரிய மனிதர்கள் முயற்சித்தும், இருபது வருடங்களாக இந்து மாமன்றக் கட்டிடம் எழும்பவே முடியவில்லை. "எத்தனை பேர் ஏறிச் சறுக்கி விழுந்த சண்டிக் குதிரையிலை இப்போ பாலா ஏறியிருக்கிறார். இதை இவரா அடக்கப் போகிறார்?" என இந்து மாமன்றத் தலைமைப் பொறுப்பை பாலா ஏற்றபோது எண்ணியவர்களும் உண்டு. ஆனால் பாலாவின் திடசித்தத்தையும், உபகாரிப்பு உள்ளத்தையும் தெரிந்தவர்கள் கட்டிடம் இனி எழுந்துவிடும் என்பதை உறுதியாக நம்பினர். குறுகிய காலத்தில், தனது குடும்பப் பணத்தைக் கொண்டு முதல் மாடியைக் கட்டி முடித்து அடுத்த மாடிகள் அமைய வழிகோலியவர் வள்ளல் பாலா! அந்த எழில்மிகு கட்டிடத்தின் மண்டபத்தில் நடுநாயகமாக பாலாவின் படமும், கட்டடம் வளர்வதற்கு பக்கபலமாக விளங்கியவர்களின் படங்களும் திரைநீக்கம் செய்யப்பெற்றிருப்பது இத்தலைமுறையின் நன்றி வெளிப்பாடாகும்!

தமது கணவர் வழிகாட்டிய பாதையில் திருமதி சாந்தி பால சுப்பிரமணியம் அவர்களும் சமய, சமூக, கலை, இலக்கிய மன்றங்களினூடாக பணியாற்றி அத்துறைகளைப் போஷித்து வளர்த்து வருவது இன்றைய தலைமுறையினருக்கு கிடைத்த வரப்பிரசாதம்.

நன்றி : தினகரன் வாரமஞ்சரி (04.08.96)

## மாமன்ற வெளியீடு




# இந்து மக்களுக்கு ஒரு கையேடு

மாமன்றம் 2001ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் வெளியிட்டிருந்த "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" என்ற நூலின் திருத்திய மறுபதிப்பு, மாமன்றப் பொன்விழா வெளியீடாக வந்துள்ளது. இந்து மக்களுக்கு நாளாந்த வாழ்வில் உதவும் வகையிலான பயனுள்ள சமய அனுட்டான தகவல்களை தருவதுடன், சிவதொண்டர் அணியில் இணைந்து சேவையாற்றுபவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் இந்தக் கையேடு அமைந்துள்ளது.

விவேகானந்த சபை (கொழும்பு) வருடந்தோறும் நடத்திவரும் சமயபாடப் பரீட்சைக்கு ஒரு துணை நூலாக மாமன்றத்தின் "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" என்ற நூலை பயன்படுத்தவிருக்கிறது.

இந்தக் கையேடு இயல் ஒன்று தொடக்கம் இயல் எட்டு வரையாக வழிபாட்டியல், வாழ்வியல், கிரியையியல், விரதவியல், சிராத்தவியல், ஆசௌசவியல், தத்துவ இயல், திருமுறையியல் என வகைப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு இயலுக்கும் வெவ்வேறு தலைப்புகளில் விரிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளது.

பிரதி ஒன்றின் விலை: ரூபா **150/=** (தபாற் செலவு ரூபா **20/=**) மாணவர்களுக்காக விசேட விலைக்கழிவுடன் கையேடு வெளியிடப்பட்டுள்ளது. **இதன் பிரதி ஒன்றின் விலை ரூபா 75/= (தபாற் செலவு 20/=)**

இந்த நூலை, மாமன்றத் தலைமையகத்திலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும், கொழும்பு விவேகானந்த சபையிலும் பெற்றுக்கொள்ளலாம். தபாலில் பெறவிரும்புவர்கள் அதற்குரிய தபாற் செலவையும் சேர்த்து, காசோலை அல்லது காசுக் கட்டளை மூலம் மாமன்றத் தலைமையகத்திற்கு அனுப்பிவைக்கலாம். பணம் பெறுபவர் பெயர்: அகில இலங்கை இந்து மாமன்றம் (All Ceylon Hindu Congress) என்று எழுதப்படவேண்டும்.



இது சிறுவர்களுக்கான சிறப்புப் பகுதி. சிறுவர் சிந்தனைக் கதைகள் சிலவற்றை இங்கு தருகிறோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கதைகளைப் படித்துக் காட்டி அதன் தத்துவத்தை விளக்குவது கடன்.

## சிறுவர் ஒலி

# கடவுள் நம்பிக்கை

குளிர் காலம். மாலை நேரம். ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்திருந்தன. ஒரு வேப்ப மரத்தில் ஆங்காங்கே காகங்கள் நிறைய உட்கார்ந்திருந்தன. அவை அடிக்கடி கா.....கா..... என்று கரைந்து கொண்டிருந்தன. ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அச்சமயம் அங்கு ஒரு சிறிய மைனா வந்து, அதே வேப்ப மரத்தின் ஒரு கிளை மீது அமர்ந்தது. மைனாவைப் பார்த்ததும் பல காகங்கள் அதன் மீது பாய்ந்தன.

'மேகங்கள் சூழ்ந்துள்ளன. விரைவாக இருட்ட ஆரம்பித்து விட்டது. நான் என் கூட்டை மறந்துவிட்டேன். ஆகையால், என்னை இன்று இரவு மட்டும் இங்கே தங்க அனுமதியுங்கள்' என்று அந்த அப்பாவி மைனா வேண்டியது.

ஆனால் காகங்களோ, 'இந்த மரம் எங்களுடையது. நீ இங்கிருந்து ஓடிவிடு' என்றன.

மரங்கள் எல்லாமே கடவுளுடையவை. இந்தக் குளிரில் மழை பிடித்துக் கொண்டு ஆலங்கட்டி விழ ஆரம்பித்தால் நம் எல்லோருடைய உயிரையும் கடவுள்தானே காப்பாற்ற முடியும்! நான் மிகச் சிறியவள். உங்கள் தங்கையாக என்னைக் கருதி, என் மீது நீங்கள் இரக்கம் காட்டுங்கள். என்னையும் இங்கே உட்கார விடுங்கள்' என்று மைனா கெஞ்சியது.

'எங்களுக்கு உன்னைப் போன்ற தங்கை தேவையில்லை. நீ கடவுள் பெயரை அடிக்கடி உச்சரிக்கிறாய். அந்தக் கடவுள் மீது நம்பிக்கை வைத்து, நீ ஏன் இங்கிருந்து சென்றுவிடக் கூடாது? நீ போகாவிட்டால் நாங்கள் உன்னைக் கொல்வோம்' என்று காகங்கள் கூறின.

காகங்களோ சண்டைக்காரப் பறவைகள். அவை மாலையில் மரத்தில் உட்கார்ந்ததுமே தங்களுக்குள் சண்டையிடாமல் இருப்பதில்லை. அவை ஒன்றோடொன்று தாக்கிக் கொண்டு, 'கா...கா....' என்று கரைந்து, சண்டையிட்டுக் கொண்டே இருக்கும். எந்தக் காகம் எந்தக் கிளையில் உட்கார்வது என்பதை, அவை விரைவில் தீர்மானிப்பதில்லை. ஆகவே, அவற்றுக்குள் அடிக்கடி சண்டை நடந்து கொண்டே இருக்கும். பிறகு எப்படி மற்றொரு பறவையைத் தங்கள் மரத்தின் மீது உட்கார அனுமதிக்கும்? தங்கள் சண்டையை விட்டு அவை மைனாவைத் தாக்க ஓடி வந்தன.

காகங்கள் 'கா...கா...' என்று கரைந்து கொண்டு தன்னை நோக்கிப் பாய்வதைப் பார்த்த அந்த அப்பாவி மைனா, அங்கிருந்து பறந்து, கொஞ்ச தூரம் சென்று ஒரு மாமரக் கிளையில் உட்கார்ந்து கொண்டது.

இரவு பலத்த காற்று வீசியது, இடிஇடித்தது, பெரிய பெரிய கல்லைப் போன்ற ஆலங்கட்டி மழை பொழியத் தொடங்கியது.

காகங்கள் 'கா... கா....' என்று கரைந்தன. இங்கும் அங்குமாகப் பறந்தன. ஆனால் ஆலங்கட்டி மழையின் தாக்குதலினால் காகங்கள் எல்லாமே காயமடைந்து, தரை மேல் வீழ்ந்தன. பல காகங்கள் இறந்துவிட்டன.

மைனா உட்கார்ந்திருந்த மாமரத்தின் ஒரு பெரிய கிளை புயலில் ஒடிந்துவிட்டது. கிளையின் உட்புறம் உளுத்துப் போயிருந்ததால் கூடாகிப் போயிருந்தது. கிளை உடைந்ததும் வேருக்கு அருகில், உடைந்த இடத்தில் ஒரு பெரிய பொந்து ஏற்பட்டுவிட்டது. இந்தச் சிறிய மைனா அதற்குள் நுழைந்து கொண்டது. அதன் மீது ஒரு ஆலங்கட்டி கூட விழவில்லை.

பொழுது விடிந்தது. இரண்டு மணிநேரம் சென்றதும் வெளிச்சம் பரவியது. மைனா பொந்துக்குள் இருந்து வெளியே வந்தது. இறக்கையை விரித்து ஒலி எழுப்பிக் கொண்டு அது கடவுளுக்கு வணக்கம் செலுத்தியது. பின் பறந்து சென்றது.

தரை மீது ஆலங்கட்டி மழையினால் காயமடைந்து வீழ்ந்து கிடந்த காகங்கள் மைனா பறந்து செல்வதைப் பார்த்து மிகப் பரிதாபத்தோடு 'மைனா தங்கையே ! நீ எங்கே இருந்தாய்? உன்னை ஆலங்கட்டியின் தாக்குதலிலிருந்து யார் காப்பாற்றியது?' என்று கேட்டன.

'நான் மாமரத்தின் மீது தனியாக உட்கார்ந்து கடவுளை வேண்டிக் கொண்டிருந்தேன். துன்பத்தில் அகப்பட்ட உதவியில்லா ஜீவன்களை கடவுளைத் தவிர வேறு யார் காப்பாற்றுவார்?' என்று மைனா கூறியது.

ஆனால், கடவுள் ஆலங்கட்டி மழையிலிருந்து மட்டும்தான் காப்பாற்றுவாரா அல்லது மைனாவை மட்டும்தான் காப்பாற்றுவாரா? இல்லை, யார் கடவுள் மீது நம்பிக்கை வைக்கின்றார்களோ, யார் கடவுளை நினைக்கின்றார்களோ அவர்கள் எல்லோருக்கும் கடவுள் எல்லா ஆபத்து நேரங்களிலும் உதவுகிறார்; அவர்களைப் பாதுகாக்கிறார்.

**"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"**

(நன்றி : பல்சுவைக் கதைகள்)

---

கடவுள் அன்பு சொரூபமாய் இருக்கிறார். அன்பை நாம் அனைவரும் உணருகிறோம். அன்பைச் செலுத்தவும், பெறவும் நமக்கு இயலுகிறது. இந்த அன்பைத் தூயதாக மாற்றியமைக்கவும் நமக்கு இயலும். தூய அன்பு எல்லாம் வல்லது. குழந்தையினிடத்துள்ள அன்பை அதற்குச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம். குழந்தையின் அன்புக்கு எல்லாரும் வசப்படுகின்றனர். பேரன்பை வளர்க்கும் மனிதன் பெருமகன் ஆகின்றான். அவன் மக்கள் அனைவர்க்கும் உகந்தவன் ஆகின்றான். அன்பே சிவம் என்று பெரியோர்கள் பகர்ந்துள்ளார்கள். தூய அன்பை வளர்ப்பவர்கள் தெய்வ சொரூபம் ஆகிவிடுகின்றனர்.

*(சுவாமி சித்பவானந்தர்)*

கடவுள் அறிவு சொரூபமாய் இருக்கிறார். மக்களாகிய நாமும் அறிவு சொரூபமாய் இருக்கிறோம். நம்முடையது சிற்றறிவு. கடவுளோ வாலறிவன். மனத்தினுள் இருக்கும் பேரறிவைச் சிந்திக்குமளவு நம்மிடத்துப் பேரறிவு வளர்கிறது. கடவுள் தன்மையை அப்பொழுது நாம் சொந்தமாக்குகிறோம்.

*(சுவாமி சித்பவானந்தர்)*



இது மாணவர்களுக்கான பக்கம். இதில் சமய வரலாறு, மற்றும் புராணக் கதைகள் உட்பட மாணவர்களுக்குப் பயனுள்ள பல விஷயங்கள் அலங்கரிக்கின்றன. இது போன்ற விஷயங்கள் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவர் ஒலி

# பெரிய புராணக் கதைகள்

## அன்பு வலையில் ஆண்டவன்

காவிரியாறு வளம்பெருக்கும் சோழநாட்டில் திருக்கடவூர் சிறப்புமிக்க ஊராகும். இவ்வூரில் எங்கு பார்த்தாலும் செந்நெல் வயல்கள் காட்சி தரும். வாய்க்கால்களில் செங்கழுநீர் மலர்க் கூட்டங்கள் நிறைந்து காணும். வயல்களில் பணிசெய்யும் பெண்கள் கூட்டமாகத் திரண்டு பாடுகின்ற பண்ணிசைப் பாடல்கள் செவிகளில் இன்பம் சுரப்பன. வேள்விச் சாலைகளில் மறையோர்கள் ஓதும் வேத கீதங்கள் இறைவன் நினைவை எழுப்பிக் கொண்டிருக்கும். தடாகங்களில் எருமைகள் நின்று பாலைச் சொரியும். அப்பாலை உண்ணும் கெண்டை மீன்கள் தாமரை மலர்களில் துள்ளி விழ, அம்மலர்களும் பால் மணம் வீசும். வானளாவிய மாடங்களில் படிந்து செல்லும் மேகங்கள், வேள்விச் சாலைகளின் புகை மணம் ஏற்றுச் செல்வதால் அவை மழையாகப் பெய்யும்போது அம்மழையிலும் நறுமணம் கமழும். இவ்வளவு சிறப்புகள் கொண்ட ஊரில் திருவீரட்டானம் என்னும் இடத்தில் கோயில் கொண்டிருக்கும் இறையவர் மார்க்கண்டேயரை எமனிடமிருந்து காத்த பெருமான் அமிர்தகடேசுவரர் ஆவர்.

இத்தகைய சிறப்புமிக்க ஊரில் மறையவர் குலத்தில் சிவபக்தர் ஒருவர் இருந்தார். இவரது பெயர் குங்குலியக்கலய நாயனார் என்பதாகும். ஒழுக்கங்களில் சிறந்த உத்தமர் இவர். நாள்தோறும் இவர் ஆலயம் சென்று எங்கும் மணம் கமழும் குங்குலியத் தூபம் புகைக்கும் பணியைச் செய்து வந்தார். இவ்வாறு இவர் தவறாது செய்துவந்த பணியால் இவரிடமிருந்த செல்வமெல்லாம் மெல்ல மெல்லக் கரையலாயிற்று. என்றாலும் குங்குலியம் புகைக்கும் பணியை இவர்விட்டுவிடவில்லை. இதற்காக இவர் நிலபுலங்களை விற்றார்; அடிமைப் பணியாள்களை விற்றார். வீட்டையும் விற்றார். இறுதியில் பிழைப்புக்கு வழியின்றி இவரது குடும்பத்தாரும் மனைவி மக்களும் வாடி வருந்தினர்.

அன்று இவரது வீட்டில் தொடர்ந்து இரண்டு நாட்கள் பட்டினி. சமைப்பதற்கு எதுவும் இல்லை. இவரது மக்களும் சுற்றமும் பசிக்கொடுமைக்காற்றாது துயர் கொண்டனர். இந்நிலையைக் கண்டு இவரது மனைவியார் கண்கலங்கிப் போனார். கடைசியாகத் தம் கணவரது பக்கம் வந்து அவரை வணங்கி, தம் மங்கல நாணிலுள்ள தாலியைச் கழற்றிக் கணவர் கையில் கொடுத்து, அதைக் கொண்டு நெல் வாங்கி வரும்படியாக வேண்டிக் கொண்டார். தம் வறிய நிலையை நினைந்து நெஞ்சம் உருகிய நாயனாரும் நெல் வாங்குவதற்குப் புறப்பட்டு வெளியே சென்றார்.

பாதையில் குங்குலியக்கலய நாயனார் சென்று கொண்டிருக்கும் போது எதிரே ஒரு வணிகன், மணம் மிகுந்த குங்குலியக் கலயப் பொதியோடு வந்து கொண்டிருந்தான். நாயனார் அவ்வணிகனைப் பார்த்து, "இது என்ன?" என்று கேட்டார்.

"மணம் மிகுந்த குங்குலியம்" என அவ்வணிகன் பதில் அளித்தான். இதைக் கேட்ட நாயனார் உள்ளம் களிப்புற்றது. முகம் மலர்ச்சி கண்டது. அவர் அவ்வணிகனிடம், "இறைவரின் பூசனைக்கேற்ற குங்குலியமாக இது இருந்தால் நானே வாங்கிக் கொள்கிறேன். இதை விடவும் சிறந்த பேறு வேறு எனக்கேது? இந்தப் பேற்றைக் கைநழுவ விட்டுவிட்டு நான் கடைக்குப் போய் நெல் போன்ற பிற உணவுப் பொருள்களை வாங்குதல் எவ்வளவு வீணான செயல்!" என்று சொல்லி மீண்டும் நாயனார் அவ்வணி கனைப் பார்த்து, "நான் உமக்குப் பொன்னைக் கொடுக்கிறேன். நீர் இந்தக் குங்குலியப் பொதியைக் கொடும்" என்று உரைத்தார்.

அவ்வணிகன் நாயனாரிடம், "நீர் இதற்கு எவ்வளவு பொன் கொடுப்பீர் ?" என்று கேட்டான்.

நாயனார் தம்மிடமிருந்த திருமங்கலியத்தை வணிகர் கையில் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்ட அவ்வணிகர் அதற்கு மேல் அங்கு நிற்காது, இறையனார் வீற்றிருக்கும் திருக்கோயிலை நோக்கி விரைவாகச் சென்றார்.

பின்னர் நாயனார் இறைவன் கோயில் இருக்கும் திரு வீரட்டானம் சென்று அங்குள்ள பண்டகசாலையில் தாம் வாங்கி வந்த குங்குலியத்தை முறையாக வைத்தார். தம் செயலில் அவருக்குப் பெரும் நிறைவு ஏற்பட்டது. பின்னர் வழக்கம்போல் தூபம் புகைத்து இறைவனுக்குரிய பணியை இதயப் பேரன்போடு செய்து கொண்டிருந்தார்.

நாயனார் இவ்வாறு ஆலயத்தில் இறைப்பணி செய்து கொண்டிருக்க, வீட்டில் அவரது மனைவியார் தம் கணவர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இரவு நீண்ட நேரம் விழித்திருந்து பசித்துயரால் நொந்த அவ்வம்மையார் இறுதியில் கங்கையணிந்த சடையாரை வணங்கிக் கண் துயிலலானார்.

இந்நேரம் அவ்வீட்டில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. இறைவன் திருவருளால் குபேர வேந்தன் அவ்வீட்டில் அளவற்ற செல்வத்தைக் கொண்டு குவித்தான். வீடு நிரம்ப நெற்குவியல்; அரிசிக் குவியல்; பொன் பெருக்கு; பிற பொருள்களின் செழுமை.

கலயரின் மனைவியார் கனவில் இறையனார் தோன்றி, "கணவருக்கு உணவு ஆக்குக!" எனக் கட்டளையிட்டு மறைந்தார். விழித்தெழுந்த அவ்வம்மையார் வீடு முழுவதும் எல்லாவகைப் பொருள்களும் நிறைந்திருக்கக் கண்டு எல்லையில்லாத வியப்பில் மூழ்கினார். 'இது கண்ணுதல் பெருமான் கருணையே' என்பதைத் தெரிந்து, அப்பெருமானை இருகரங் குவித்து வணங்கினார். பின்னர் தம் கணவருக்கு வேண்டிய உணவை ஆக்குவதற்கு வீட்டில் போய் விரைவாகப் பணியில் ஈடுபட்டார்.

இதே நேரம் திருவீரட்டானம் ஆலயத்தில் மற்றொரு அதிசயம் நடைபெற்றது. பிறைசூடிய பெருமான் சிவலிங்கத்தினின்றும் வெளித்தோன்றி நாயனார் அறியும்படியாக, "நீ பசித்து வாடு கின்றாய். உன் வீடு சென்று இனிய உணவை உண்டு உன் பசித் துன்பத்தை நீக்குவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார். இம்மொழிகளைக் கேட்ட குங்குலியக் கலய நாயனார், பெருமான் கட்டளையைத் தலைமேல் தாங்கி ஆலயம் விட்டு வீதிவழியாக நடந்து தம் வீட்டை அடைந்தார். அங்கு அளவற்ற செல்வக் குவியல் களைக் கண்டு வியப்பு மேலிட்டவராய் தம் மனைவியாரை "இச் செல்வங்களெல்லாம் ஏது? எவ்வாறு வந்தன?" என வினவினார்.

இதற்கு அவ்வம்மையார், "இறைவர் பேரருளால் வாய்த்தவை" என்று பதில் அளித்தார்.

இதைக் கேட்ட கலயநாயனார் விம்மிதமுற்றவராய், "எம்பெருமான் எனக்கும் இரங்கி அருளினாரே" என மொழிந்து, அப்பெருமானை நினைந்து நினைந்து, நெஞ்சம் நெகிழ்ந்து நெகிழ்ந்து கரங்கூப்பித் தொழுதார். பின்னர் நாயனாரது மனைவியார் தம் கணவரை வழிபட்டு அவருக்குச் சிவனடியார் களுடன் அறுசுவை உண்டி பரிமாறினார். நாயனாரும் பிறரும் பசி தீர உண்டு மகிழ்ந்தனர். இதன்பின்னர் கலயநாயனார் தம் செல்வப் பெருக்கால் குங்குலியத் தூபம் புகைக்கும் பணியுடன் அடியார்களுக்கு அமுது படைக்கும் திருப்பணியையும் மேற்கொண்டொழுகி வந்தார். அவரது வாழ்வு செம்மை நலம் பூத்துத் திகழ்ந்தது.

இவ்வாறு கலநாயனார் வாழ்ந்து வருகின்ற நாளில் திருப்பனந்தாள் என்னும் திருத்தலத்திலுள்ள ஆலயத்தில் அரசனால் திருப்பணி நடைபெற்றது. அங்கு சாய்வு நிலையிலுள்ள சிவலிங்கத்தை நேர்செய்து வழிபட எண்ணினான் சோழ மன்னன். அவன் தனது ஆட்களையும், யானைகளையும் கொண்டு சிவலிங்கத்தை இழுத்து நிமிர்த்த முயன்றான். என்ன முயன்றும் வெற்றி கிடைக்கவில்லை. மன்னனுக்கு இது பெரும் சோர்வையும் துன்பத்தையும் அளித்தது.

இச்செய்தி குங்குலியக்கலய நாயனார் செவியில் விழுந்தது. இத்திருத்தொண்டில் தாமும் ஈடுபட எண்ணினார். மன்னன் படைகளும் வேழங்களும் முயன்று வெற்றி கிட்டாது இளைத்துப் போயின. தாம் இத்திருப்பணியில் ஈடுபட்டுப் பயன்கிட்டாது போயினும் அது சிறந்த பேறுக்குரியதே எனக் கருதினார் நாயனார். எனவே இப்பணியில் ஈடுபடும் எண்ணத்தோடு இவர், அமிர் தகடேசர் ஆலயம் சென்று, அப்பெருமானை முதலில் வழிபட்டுக் கொண்டார். பின்னர் திருப்பனந்தாளுக்குப் புறப்பட்டார். அங்கு திருக்கோயில் வந்து, இறையனார் திருவுருவத்தில் இணைத்திருந்த பூங்கச்சோடுள்ள கயிற்றைத் தம் கழுத்தில் சுற்றிக் கொண்டு வருந்தி இழுக்கலானார். என்னே வியப்பு! கலியநாயனாரின் பேரன்புக்குக் கட்டுப்பட்டு இறையனார் சரிந்த நிலையிலிருந்து நேராகத் தரிசனம் கொடுக்கலானார். விண்ணவர் மலர் மாரி பொழிய மண்ணவர் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர்.

செய்தியறிந்த சோழ வேந்தனும் அவனது படைகளும் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டனர். கழலணிந்த காவலர் கோமான் கலயநாயனாரின் திருப்பாதங்களில் தன் முடியை வைத்து வணங்கினான். "அருள்மிக்க அன்புப் பெருமானே, தங்களை எவ்வாறு புகழ்வேன்? சரிந்து நின்ற இறையவரை நேராக ஆக்கித் தரிசனம் செய்ய வைத்தீர்களே! அன்பு வலையில் இறைவன் அகப்படுவான் என்பதை இவ்வுலக மக்களுக்கு மெய்ப்பித்துக் காட்டி விட்டீர்களே" என்று வாழ்த்திப் புகழ்ந்தான்.

மன்னவன் பின்னர் அவ்வாலயத்திலுள்ள ஏனைய திருப்பணிகளை நிறைவாகச் செய்து முடித்துத் தன் இருப்பிடம் சென்றான். கலயநாயனார் சில நாட்கள் அம்பலத்தில் திருநடனம் செய்யும் எம்பெருமானை வணங்கி வழிபட்டு வந்தார். பின்னர் திருக்கடவூருக்குத் திரும்பி முன்போல் குங்குலியத் தூபம் புகைக்கும் திருப்பணியில் ஈடுபட்டு நாட்களைக் கழித்து வந்தார்.

இந்நாட்களில் நாயனார் அச்செய்தியைக் கேள்விப்பட்டார். அதாவது திருஞான சம்பந்தப் பெருமானும் திருநாவுக்கரசு நாயனாரும் திருக்கடவூர் வருகிறார்கள் என்ற செய்தியே அது. இதைக் கேட்டுக் களிப்படைந்த கலயநாயனார் அவர்களை எதிர்கொண்டு வரவேற்றுத் தம் இல்லத்திற்கு அழைத்து வந்தார். இனிய உணவை அவர்களுக்கு அமுதாகப் படைத்து, அப்பெருமக்களின் பேரன்பைப் பெற்றார். அடியார்களிடம் காட்டும் அன்பு ஆண்டவன்பால் காட்டுவதன்றோ! கலயநாயனார் திருக்கடவூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானுக்குரிய திருப்பணிகளை நாளும் செய்து அவன் திருவடி நிழலை அடைந்தார்.

தூய அன்புக்குக் கட்டுப்படுகிறவன் ஆண்டவன் என்பதை இவ்வரலாறு காட்டுகிறதன்றோ!

---

**சிந்தனைக் கதைகள்**

## தாயுமானவர்

"நமக்கு எல்லாம் தருபவர்தான் கடவுள் என்றால், அவருக்கு எதற்காக பிரசாதங்களை நைவேத்யம் செய்ய வேண்டும்?" என்று தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை குருவிடம் கேட்டான் சீடன்.

குரு அவனை அழைத்துக்கொண்டு தெருவழியே போனார். ஒரு வீட்டு வாசல் திண்ணையில் தன் குழந்தைக்கு சாதம் ஊட்டிக் கொண்டிருந்தாள் ஒரு தாய். குழந்தையும் சாதத்தை நாலைந்து கவளம் சாப்பிட்டது. பிறகு தட்டிலிருந்து தன் கையால் ஒரு பிடி சாதத்தை எடுத்து தாய்க்கு ஊட்டியது. தாயும் மறுப்பு சொல்லாமல், மகிழ்ச்சியுடன் அந்த உணவை ஏற்றுக்கொண்டாள். தான் கொடுத்ததை தாய் பெற்றுக் கொண்டதைக் கண்டதும் குழந்தைக்கு குதூகலம். கைதட்டிச் சிரித்து, தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தியது.

குரு சீடனைப் பார்த்தார். "இந்தத் தாய்போலதான் இறைவனும். தான் தயாரித்த உணவைத் தன் குழந்தைகளாகிய நமக்கு அளிப்பதில் இறைவன் ஆனந்தம் அடைகிறான். அதே உணவில் ஒரு பகுதியை மட்டும் ஆண்டவனுக்கு நைவேத்யமாக - நன்றிக் கடனாக - அர்ப்பணித்தால் அவன் பேரானந்தமடைகிறான் - இந்தத் தாயைப்போல!" என்றார்.

"புரிந்தது சுவாமி" - சீடன் தெளிவுடன் பதில் சொன்னான்.

(நன்றி : பக்தி)

## பக்குவம்

"கடவுள் பொதுவானவர் என்றால், மனிதரில் ஏற்றத் தாழ்வு ஏன்?" - என்று சீடனொருவன் குருவிடம் கேட்டான்.

"ஏற்றத் தாழ்வுகள் எல்லாம் மனிதரின் கர்மவினைப்படி தான் நிர்ணயம் செய்யப்படுவது. கடவுள் அருள் பொதுவானது தான். அதை மனிதர் அவரவர் மனப் பக்குவப்படி ஏற்று, அனுபவிக்கிறார்கள்" என்றார் குரு.

குருவின் பதில் சீடனுக்குத் தெளிவாகவில்லை. அவனை ஒரு தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார் குரு. அங்கே வாழை, மா, பலா என்று மரவகைகளும், பூச்செடிகளும் தோட்டத்தின் வேலிப்பகுதியில் முட்செடிகளுமாகக் காட்சியளித்தன.

"கடவுள் இந்த பூமித்தாய் போலத்தான். பாரபட்சமில்லாமலேயே இந்த பூமி எல்லா வளங்களையும் தருகிறது. மரங்கள் தமக்குத் தேவையானதையும், பூச்செடிகள் தமக்கு தேவையானதையும் பூமியிலிருந்து எடுத்துக் கொள்கின்றன. முட்செடியும் இதே பூமியில்தான் வளர்கிறது. மனிதரும் அப்படித்தான் இறைவன் அருளை, அவரவர் கர்ம வினைக்கேற்ப, மனப் பக்குவத்துக்கு ஏற்ப ஏற்றுக் கொள்கிறார்கள். ஏற்றத் தாழ்வும் இதனால்தான் ஏற்படுகின்றன." என்று சீடனுக்கு விளக்கம் கொடுத்தார் குரு.

சீடன் புரிந்து கொண்டான்.

(நன்றி : பக்தி)



## மங்கையர் ஒளி

# தாயு நீயே தந்தை நீயே

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

குழந்தைப் பருவத்திலே பெறுகின்ற அநுபவம் மனிதனுடைய முழுமையான வாழ்வுக்கும் உறுதுணையாக இருக்கும். இன்று உலகெங்கும் சிறுவர் பற்றியே பேச்சு. "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என எமது முன்னோர் கூறியது, இன்று பொருளுள்ள தொடராக விளங்குகிறது. மனித உறவுகளில் மிக உன்னதமான, வியப்பான, உறவு தாயும் சேயுமாய் நிற்கும் உறவு தான். குழந்தையைக் கருவாக வயிற்றிலே சுமந்து, பெற்றெடுத்து, தன் உதிரத்தையே பாலாக ஊட்டி வளர்க்கும் தாய் மிக உயர்ந்தவள். அவள்தான் முன்னறி தெய்வம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என ஒளவையார் பாடிய கொன்றை வேந்தன் தாயின் பெருமையைப் பதிவு செய்துள்ளது. தாயின் அன்பான அரவணைப்பும் பரிவான வளர்ப்பும் ஒரு குழந்தையை நல்லவனாக வல்லவனாக அறிவுள்ளவனாக ஆக்குகின்றது. குடும்பம் என்ற கட்டமைப்பில் தாயின் பொறுப்புத் தனித்துவமானது. அதனை உணர்ந்த நம்முன்னோர் தாய்மையைத் தெய்வக்குணமாகப் போற்றினர். அவள் ஒரு வழி காட்டியாக மனிதகுலத்தைச் சிறப்பாக வழிநடத்துபவளாக விளங்கியமையால் வழிபாட்டு நடைமுறைகள் பேணப்பட்டன.

தாயின் வழிகாட்டலில் குழந்தை தன்னையும் தன்னைச் சார்ந்த உறவுகளையும் தொடர்புகளையும் ஒழுங்காக அறிந்து கொள்கிறது. பழந்தமிழ்ப் பாடலான புறநானூற்றில் "ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே" (புறநானூறு : 312) என ஒரு தாய் சொல்கிறாள். அவள் கூற்றில் அடங்கிய பொருள் பரந்தது. குழந்தையின் வளர்ப்புப்பணியில் தாயின் பங்களிப்பு எத்தகையது என்பதை விளக்குகிறது. புறநிலைக் கற்கை நெறிக்காகக் குழந்தை வீட்டை விட்டு வெளியே செல்லும் வரை தாயின் வழி காட்டலில் குழந்தை வளர்கிறது. அவளையே தன்னுடைய தோழமையாக நம்பிக்கைக்குரியவராக எண்ணுகிறது. பால் நினைந்தூட்டும் அவள் அன்பும் துன்பந்துடைத்து நின்று வளர்க்கும் இரக்கநினைவும், குழந்தையை, அவளே தன் தேவைகளை நிறைவேற்றும் வடிவாகக் கண்கண்ட கடவுளாக நினைக்க வைக்கிறது. தாயுடன் வாழும் வாழ்வே இன்பமானது என உறுதியாக நம்புகிறது. அவள் கற்றுத் தருபவற்றை மனத்திலே ஆழமாய் பதிவு செய்து வைக்கிறது. தாய் அறிமுகம் செய்த தந்தையை உறவாக ஏற்று வளர்கிறது.

இத்தகைய குழந்தைகளின் உள்ளத்தில் 'இறைவழிபாடு' என்ற செயற்பாட்டைப் பயிற்றுவதும் தாயின் கடனாகின்றது. தனது தாயின் பணிகளை நினைந்து தன் குழந்தையை வளர்க்கும் தாய் ஒரு பண்பாட்டுச் சங்கிலியின் இறுக்கமான இணைப்பாக விளங்குகிறாள். இறைவன் பற்றிய உண்மையான உணர்வை ஒரு குழந்தை தாயிடம் முதலிலே காண்கிறது. தான் விரும்புவதை நிறைவேற்றும் தாயின் கொடை உள்ளத்தைக் குழந்தை உணரும் போது அவளை வணங்கவேண்டும் என மனதில் வரித்துக் கொள்கிறது. தாயின் வழிபாட்டு நடைமுறைகளில் தானும் முழுமனதோடு இணைந்து கொள்கிறது. இந்த உண்மையான குழந்தையின் வாழ்வியலைப் பெரியபுராணம் கதையாகக் கூறுகிறது.

*"பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குரு நீர்ப்*
*பொருவில் திருத்தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்*
*வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்*
*பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்."*

(தி. தொ. பு. திருஞான :14)

மேற்காட்டிய பாடல் பன்னிரெண்டு பெயர்களால் வழங்கப்பெற்ற ஒரு ஊரைக் குறிப்பிடுகின்றது. குழந்தைப் பருவத்திலேயே வழிபாட்டு நெறியை உணர்ந்து கொண்ட ஒரு குழந்தை பிறந்த ஊரின் சிறப்பு இவ்வாறு புகழப்பட்டுள்ளது. தாய் மரபும், தந்தை மரபும் சைவநெறிவழி வந்தமையால் அவர்களின் புதல்வன் சைவக் காவலனாய் தோன்றினான். சமணம் முதலிய பரசமயங்கள் தமிழர் சமயநெறியைப் பாழ்படுத்திய வேளையில் இக்குழந்தை பிறந்தது. குழந்தையை வளர்க்கும் போது தாய் தன் முலைப்பாலுடன் இறைவன் தாள் பரவும் அன்பு நெறியையும் உணர்த்தினார். குழந்தை தாயின் வழிபாட்டு நெறியினை நாளும் பொழுதும் மனத்துள் பொதிந்து வைத்துக் கொண்டது.

ஒருநாள் தந்தை நீராடுவதற்காகப் புறப்பட்ட போது குழந்தையும் அவருடன் செல்லவிரும்பியது. அடம்பிடித்து அழுதது. தந்தை சினந்து மறுத்தார். தாயின் பரிந்துரையால் தந்தை குழந்தையை உடன் அழைத்துச் சென்றார். அந்தக் கணத்திலேயே தன் தாயின் அன்புநிலையை நன்கு உணர்ந்து கொண்ட குழந்தை தந்தையுடன் சென்றது. நீராடும் தந்தை நீருள் முங்கிய போது குழந்தை பதறியது, ஏங்கி அழுதது. கண்மலர்கள் நீர் ததும்பக் கைமலர்களைப் பிசைந்து வண்ணமலர்ச் செங்கனிவாய் மணி அதரம்புடை துடிப்ப வெம்பி அழுதது. தன் துயர்தீர்க்கும் தாயை நினைத்தது. ஆனால் தாயோ அதன் அருகில் இல்லை, எனவே தாய் பயிற்றிய வழிபாட்டு நெறியை நினைந்து திருத்தோணி புரத்தின் கோபுரத்தை நோக்கி அம்மே! அப்பா! என்று கூவி அழுதது. குழந்தையின் நம்பிக்கை வீண்போகவில்லை. தாய் பயிற்றிய வழி பாட்டுநெறியே என்றும் எதற்கும் உதவும் என்ற உண்மை தெளிவாயிற்று. அழும் குழந்தையின் அருகில் பொற் கிண்ணத்திலே திருமுலைப்பாலுடன் உலகிற்கெல்லாம் தாயான இறைவி தோன்றினாள். பாலைக் குழந்தைக்குப் புகட்டிக் கண்ணீரைத் துடைத் தருளினாள். தந்தையைக் காணாது துன்புற்ற குழந்தை பாலூட்டிய தாயின் பரிவால், அருளால் துன்பந் தீர்ந்து அமைதியடைந்தது.

புதியதொரு அறிவு பெற்ற நிலையில் தாய் பயிற்றிய வழிபாட்டு நெறியின் அற்புதத்தை எண்ணி வியந்து நின்றது. பாலூட்டிய தாய் உரு மறைந்தது. நீராடிய தந்தை குழந்தையருகே வந்தார். குழந்தையின் கோலம் கண்டு சினந்தார். "யார் உனக்குப் பாலூட்டினார்?" என குழந்தையின் கடைவாயில் ஒழுகும் பாலைப் பார்த்துக் கேட்டார். அவர் மனதிலே பெருங்குழப்பம். பிராமணக் குழந்தைக்குப் பாலூட்டத் துணிந்தவர் யாராக இருக்கலாம் என எண்ணினார். ஆனால் குழந்தையோ குழப்பமடையவில்லை. தனக்குப் பாலூட்டியவளை யாரெனப் பாடலால் விளக்கிக் கூறுகிறது. மூன்றே வயதான குழந்தை தன் அல்லல் தீர்த்தவரை அடையாளம் சுட்டிப்பாடுகிறது. வீட்டுநிலையில் தாய் சொல்லித் தந்த வழி பாட்டுப் பயிற்சியால் மனங்கனிந்து சொல்மாலை தொடுக்கின்றது. எச்சில் பால் தந்தாரை அடையாளம் காட்டென்று தந்தை சிறிய தொரு கோலை எடுத்துக் குழந்தையை மிரட்டுகிறார். இளம் குழந்தை பயப்படாமல் தன் விரலாற் சுட்டிக் காட்டுகிறது. விண்ணிலே விடையேறி வந்து அம்மையுடன் காட்சிதரும் அப்பனைக் காண வைக்கிறது. நெடுந்தமிழால் அத்தெய்வீகக் காட்சியைப் பார்த்துப் பரவசமாகப் பாடியது. அது காட்டிய அடையாளம் வருமாறு அமைந்தது.

*"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்*
*காடுடைய சுடலைப் பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன்*
*ஏடுடைய மலரான் முனை நாட் பணிந்தேத்த வருள் செய்த*
*பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே,"*

அந்தக்குழந்தையின் தெளிவான பாடல் அதன் அன்னையின் பயிற்றுந் திறனைப் பறைசாற்றியது. வழிபாட்டு நெறியில் குழந்தை ஆழமாக ஈடுபடவைத்த தாய் அதன் செந்தமிழ்ப் பயிற்சியிலும் சிறந்த கவனம் எடுத்ததைப் பாடல் தெளிவாய்க் காட்டுகிறது. தலைமுறை தலைமுறையாக நம்பிய வழிபாட்டு நெறியும் வழிபாட்டுச் சூழலும் எந்தவிதமான முரண்பாடுமின்றிக் குழந்தை மனதில் பதியும் வண்ணம் தாயின் வளர்ப்புநிலை இருந்தது. தான் கண்ணால் நேரிற் கண்ட காட்சியை மிகவும் துல்லியமாக மொழி யால் கூறும் திறமையைக் குழந்தை பெற்றிருந்தது. தாயின் அன்பான பண்பான வீட்டுநிலையான கற்பித்தல், வழிபாடு வாழ்வியலோடு இணைந்தது என்பதைக் குழந்தைக்கு நன்குணர்த்தியிருந்தது. ஆனால் தந்தையோ சமூகவயப்பட்ட ஏற்றத் தாழ்வுகளை மனதில் ஆழமாகப் பதிய வைத்துக் குழந்தைக்குப் பாலூட்டியவர் யாரென அறிவதிலேயே குறியாயிருந்தார். ஆனால் குழந்தையோ தாயின் வழிபாட்டுப் பயிற்சியால் பெற்ற அசையாத நம்பிக்கை உண்மை யானது என்பதை உணர்ந்து கொண்டமையால் அதனைத் தெளி வாகவே தந்தைக்குக் கூறுகின்றது. மனிதரில் ஏற்றத்தாழ்வு ஏதும் இல்லை. துன்புறுவாருக்கு உதவும் தொண்டுமனம் வேண்டும். அதுவே இறைவனின் அருட்கொடை என்பதைத் தானாக உணர்ந்த போது குழந்தை ஞானக் குழந்தையாக மாறி விட்டது. தன் முன்னே தோன்றியவரே உலகத்து உயிரினங்கள் அனைத்துக்கும் தாயும் தந்தையுமாவர் என உணர்த்துகிறது. சிவனை வழிபடும் சைவ சமயத்தவரின் அறியாமையைப் போக்கும் அறநெறிப் பணியில் குழந்தை அன்று தொட்டுத் தன்னை இணைத்துக் கொண்டது. ஆளுடைய பிள்ளையாராக ஞான சம்பந்தராக வழிபாட்டைப் பரப்பும் புதியதொரு இயக்கத்தைத் தொடக்கிவைத்தது. இதற்கான அடிப்படையான தகைமைகளைக் கற்பித்த பகவதி யாரின் பணி இன்றைய பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய தாகும். தாயுடன் அறுசுவையை உணரும் குழந்தை ஞானச் சுவையையும் நன்குணரவேண்டும். கருவிலே குழந்தையைத் தாங்கும் தாய் தன் உள்ளத்திலே வழிபாடுபற்றிய தெளிவும் உறுதியுமுடையவளா யிருக்க வேண்டும். ஞானசம்பந்தனைப் பெற்ற பகவதியின் வழி பாடு பற்றிய தெளிவும் உறுதியுமே பிறசமயப் பரம்பலைத் தடுக்கும் ஆற்றலை ஞானசம்பந்தருக்கு நல்கியது.

குழந்தைநிலையிலிருந்து இளமை நிலைக்குச் செல்லும் போது ஐம்புலன்களின் செல்வாக்கால் வழிபாடு பற்றிய உறுதி குலையும். இதனைச் சம்பந்தர் தனது வாழ்வியலிற் காண்டார். எனவே தான் அதிலிருந்து மீள இறைவனையே வேண்டுகிறார்.

*"தாயு நீயே தந்தைநீயே சங்கரனேயடியேன்*
*ஆயு நின் பாலன்பு செய்வானா தரிக்கின்ற துள்ளம்*
*ஆயமாய காயந்தன்னுளைவர் நின்றொன்ற லொட்டார்*
*மாயமே யென்றஞ்சுகின்றேன் வலிவல மேயவனே."*

இளமைக் காலத்தில் தலங்கள் தோறும் சென்று வழிபாட்டின் சிறப்பைப் பாடல்களால் எடுத்தோதிய பணி மீண்டும் சைவம் நிலை பெற வழிசெய்தது. வழிபாடு பற்றிய தெளிவு குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் ஏற்படுவதற்குத் தாய்மைப் பண்புடைய வழி காட்டல் இன்றியமையாதது. பெற்றோருடன் வாழும் சிறுவரும் பெற்றோரைப் பிரிந்து வாழும் சிறாரும் வழிபாட்டில் நம்பிக்கை கொள்ளப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். எல்லோருக்கும் தாயா கவும் தந்தையாகவும் இருக்கின்ற பேராற்றலைத் துணையாகக் கொள்ளும் மனப் பக்குவம் பயிற்றப்பட வேண்டும். "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற குறிக்கோள் வாசகத்தைப் பொறித்துவைப்பதால் பயனேதுமில்லை. தாய், தந்தை பற்றிய செம்மையான பண்புநலன்களைக் குழந்தைகளும் இளைஞரும் நன்குணர ஒரு புதிய ஆற்றுப்படுத்தல் தேவை. பிறந்து மொழி பயின்று கல்விப் பயிற்சிக்காகப் பள்ளி செல்லும் வரை அளிக்கப்படும் தாய்மையின் வழிபாட்டுப் பயிற்சி நெறிதான் சிறந்தது. நம்முன்னோர் பெற்ற பயிற்சி இதுவே. தற்கால விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியில் இறைவன் பேராற்றலை எண்ணிப் பாட யாருக்கும் நாவில்லை. கூட்டு வழிபாட்டில் நாட்டமில்லை. ஓசையிலும் ஒலியிலும் நிறைந்திருக்கும் இறையாற்றலை இயற்கை நிலையிலே வீட்டிலோ அல்லது வழிபாட்டு மன்றங்களிலோ குழந்தைகளும் இளைஞர்களும் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். இன்று இப்பணியைப் பெண்கள் முன்னெடுக்க வேண்டும். அறநெறி மன்றங்களிலும், இந்து மன்றங்களிலும், சைவபரிபாலன சபைகளிலும் தருமபரிபாலன சபைகளிலும் பெண் களின் வழிபாட்டுப் பயிற்றுதல் பணி இணைய வேண்டும். தாய்மை யின் இயற்கையான வழிகாட்டலே இன்றைய கால கட்டத்திற்கு இன்றியமையாதது.

எப்போதும் இறைவனை நினைவில் கொண்டு வாழ்வதன் மூலம் அவனை உள்ளத்தில் கோயில் கொள்ளும்படி செய்யலாம். அதன் மூலம் மனதிலுள்ள குறைகள் நீங்கி உயர்வு பெறமுடியும். ***(சுவாமி கமலாத்மானந்தர்)***

ஒவ்வொருவரும் தனக்கென்று ஒரு சொந்த இலட்சியத்தை வைத்துக்கொள்ள வேண்டும்.

***(சுவாமி விவேகானந்தர்)***

நீ எந்த இடத்தில் இருந்தாலும் மகிழ்ச்சியுடன் இருக்கும் வகையில் உன் மனதை அமைத்துக் கொள்ள வேண்டும்.

***(ஸ்ரீசாரதாதேவியார்)***

# திலகவதியார்

மங்கையர் ஒளி

கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்

சைவசமய வரலாற்றில் பக்தி இயக்கத்தின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் பெண்கள் முக்கிய பங்கு கொண்டனர். காரைக் காலம்மையார் தொடக்கி வைத்த பணியைத் திலகவதியாரும் மங்கயற்கரசியாரும் தொடர்ந்தனர். திருநாவுக்கரசர் உயிரோடு வாழ்வதற்கும், சைவத்தைவிட்டு, சமண சமயத்திற் புகுந்த நாவுக்கரசர் மீண்டும் சைவசமயத்திற்கு மீளக்காரணமாக இருந்தவர் திலகவதியாரே. நாவுக்கரசரது அற்புதங்களால் பல்லவனும் தமிழ்நாட்டு வடபகுதி மக்களும் சைவமதமாக மாறினர். திலகவதியாரின் அர்ப்பணிப்பினால்தான் நாவுக்கரசர் உயர்ந்தார். திலகவதியாரின் வரலாறு பெரிய புராணத்தில் திருநாவுக்கரச நாயனாரின் வரலாற்றின் ஊடாகப் பேசப் படுகின்றது. நாவுக்கரசரை நாயன்மார் வரிசையில் இடம்பெற வைத்தவர் திலகவதியாரே. அதனால்தான் நாவுக்கரசர் வரலாற்றில் திலகவதியார் பேசப்படுகின்றார்.

சேக்கிழார் பெரியபுராணத்தில் திலகவதியாரை விளிக்கும் சொற்பதம் குறிப்பிடத்தக்கது.

*"செங்கமல நிரையிதழின் அகவயினில்*
*திகழவருந் திருவனைய திலகவதியார்"*[1]
*"செம்மலர் மேற்றிருவனைய திலகவதியார்*
*அணங்கனைய திலகவதியார்"*[2]
*"அம்பொன்மணி நூல் தாங்காதனைத் துயிர்க்குமருள்*
*தாங்கி இம்பர் மனைத்தவம் புரிந்த திலகவதியார்"*[3]
*"தூண்டுதவ விளக்கனையார்"*[4]
*"மன்னு தபோதனியார்"*[5]
*"அருந்தவத்தார்"*[6]
*"உயர் தவத்தோர்"*[7]
*"தாபதியார்"*[7]

திலகவதியாரை இவ்வாறு தெய்வநிலைப்படுத்தியும் அவரின் தவநிலையினையும் உயர்வுபட சேக்கிழார் பேசுவதை பெரிய புராணம் காட்டுகின்றது.

திருமுனைப்பாடி நாட்டிலே உள்ள திருவாமூர் என்னும் ஊரில் அவரின் துணைவியார் மாதினியாருக்கும் திருமகளாகத் திலகவதி யார் தோன்றினார். திலகவதியார் பிறந்த சில ஆண்டுகளுக்குப் பின்னர் அவருக்கு தம்பியாக மருணீக்கியார் பிறந்தார்.

கலிப்பகையார் திலகவதியாரை மணந்து கொள்ள விரும்பி புகழனாரிடம் பெரியோரை மணம் பேச அனுப்பினார். குணமும் குலமும் ஒற்றுமை கேட்டு புகழனார் தம் மகள் திலகவதியாரை கலிப்பையார்க்கு மணம் செய்து கொடுப்பதாக உடன்பட்டார். மணம் பேசிச் சென்ற பெரியோர் புகழனாரது சம்மதத்தினைக் கலிப்பகையார்க்குத் தெரிவித்தனர். இரு குடும்பத்தாரும் உறுதி செய்து திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் வடநாட்டிலுள்ள பகை மன்னர் சேனை தமிழ் நாட்டுடன் போர் தொடுப்பதாக இருந்தது. படையெழுச்சிக்கு முன்னரே குறிப்பால் உணர்ந்த தமிழ் நாட்டு வேந்தன் போராற்றல் மிக்க கலிப்பகையாரைச் சேனைத் தலைவராக நியமித்து படைகளுடன் வடநாட்டிற்கு அனுப்பினார். சேனைகளுடன் வடநாடு சென்ற கலிப்பகையார் நீண்ட நாட்கள் அங்கேயே தங்கியிருந்து கொடும் போரில் ஈடுபட்டார். இதற்கு இடையில் திலகவதியாரின் தந்தையார் புகழனார் நோயினால் இறக்கின்றார். அவரின் மனைவியார் மாதினியாரும் கணவருடன் (உடன்கட்டை) உயிர்நீத்தார். இந்நிலையிலே தந்தையையும் தாயையும் இழந்த நிலையில் திலகவதியாரும் மருள்நீக்கியாரும் ஆற்றொணாத் துயரில் மூழ்கினார்கள். தந்தை தாயர்க்கு செய்யவேண்டிய ஈமக் கடன்களை முறையாக செய்து முடித்தனர்.

இவ்வாறு திலகவதியாரும் மருள் நீக்கியாரும் ஆற்றொணாத் துயரில் மூழ்கி இருக்கும் பொழுது வடநாட்டிற்கு போர்புரியச் சென்ற கலிப்பகையார் போர்க்களத்தில் உயிர் நீத்தார். இந்த துன்பச் செய்தி திலகவதியாருக்குக் கிடைத்தது. இச்செய்தியைக் கேள்விஉற்ற திலகவதியார் என் தந்தையும் தாயும் என்னை அவர்க்கே (கலிப்பையார்க்கு) கொடுப்பதாக எண்ணினர். அந்த வகையில் அவருக்கே உடமைப் பொருளாவேன். எனவே இவ் உடம்பை துறந்த என்னுயிரை அவருயிரோடு இசைவிப்பேன் எனத் தமது உயிரைவிடத் துணிந்தார். அப்பொழுது தம்பியார் மருள்நீக்கியார் திலகவதியாரின் பாதங்களில் வீழ்ந்து புலம்பினார். "அன்னையும் அத்தனும் இறந்த பின்னரும் தமக்கையாராகிய உம்மை வணங்கப் பெறுதலினால் யான் இதுவரையும் உயிர் தரித்திருக்கின்றேன். இந்நிலையில் ஒன்றுமறியாத என்னைக் கைவிட்டு செல்வீராயின் யானும் உமக்கு முன்னே உயிர் துறப்பேன்" எனக்கூறி வருந்தினார்.

மருள்நீக்கியார் ஆதரிப்பார் இன்றி வருந்தும் நிலைகண்டு திலகவதியார் கலங்கினார். தனது உயிரைத் துறந்து செல்கின்ற எண்ணத்தைக் கைவிட்டு தம்பிக்காக இவ்வுலகில் உயிர்தாங்கி இருப்பதாக உறுதி கொண்டார். திலகவதியார் அன்னையாக இருந்து தமது தம்பியாகிய மருள்நீக்கியாரை பேணிவளர்த்து வந்தார். மருள்நீக்கியாரை வளர்த்து வழிகாட்டி நெறிப்படுத்தி வந்தார். இதனை

*"எம்மையாரிலை யானும் உளேனலேன்*
*எம்மையாரும் இது செயவல்லரே*
*அம்மையாரெனக் கென்றென்றாற்றினேற்*
*தம்மையாரைத் தந்தார் ஆரூர் ஐயரே"*[9]

எனவரும் திருவாரூர் திருக்குறுந்தொகையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். எம்மைப் பெற்ற தாயும் தந்தையும் என்னை விட்டு இறந்தாராக, அவர்கள் இல்லாமையால் யானும் இவ்வுலகில் நிலையில் ஆதரவற்றிருந்தேன். தாயாகிய நிலையிலிருந்து எளியேனை வளர்ப்பார் யார்? எனத் தம்மை நோக்கி அழுதபொழுது என்பொருட்டு ஆரூரில் எழுந்தருளிய இறைவன் என்னைப் பாதுகாத்தற்குரிய அம்மையாரைத் தந்து அருள் புரிந்தார் என மேல்வரும் அடிகளால் குறிப்பிடுவார். தமக்கையாரை அம்மையார் என குறிப்பிடுவதை நோக்கலாம்.

புகழனார் இறந்தவுடன் அவரின் மனைவி மாதினியார் தம் கணவனோடு உடன்கட்டை ஏறினார். உடன்கட்டை ஏறுதல் என்பது அக்கால வழக்கமாக இருந்தது. உடன்கட்டை ஏறுதல் தானே செய்வதாகவும் அமையும். கணவன் இறந்த பொழுது அந்தத்

துன்பத்தை தாங்கமுடியாத காரணத்தினால் பெண்கள் உடன் கட்டை ஏறினர் எனவும் கொள்ளலாம்.

"கணவனை இழந்தவர்க்கு காட்டுவது இல்"[10] என இளங் கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் நிலையை எடுத்துக் காட்டுவார். கணவர் இறந்த பின்னர் பெண்கள் வாழமுடியாத சூழ்நிலை காரணமாகவும் பெண்கள் உடன்கட்டை ஏறும்படி பணித்தனர் எனவும் வரலாறு காட்டும். ஆனால் திலகவதியாரின் நிலையோ வேறுபட்டதாக அமைகின்றது. திலகவதியார் கலிப்பகையாருடன் சேர்ந்து வாழவில்லை. கலிப்பகையாரை பெற்றோர்கள் திலகவதியாருக்கு மணம் பேசிய நாளில் இருந்து கணவனாக நினைத்தது மாத்திரமே. அந்த நிலையில் கூட வேறுயாரையும் தான் மணப்பதில்லை என்ற உறுதியுடன் கலிப்பகையாருடன் தானும் இறந்துபட வேணும் என எண்ணியதும் திலகவதியாரின் வேறுபட்ட நிலையினைக் காட்டுகிறது. திலகவதியார் அர்ப்பணிப்புள்ள பெண் என்பதுவும் வரலாற்றிலே இவரைப் போன்ற பெண்ணைக் காணமுடியாது என்பதையும் அவரது வரலாறு காட்டுகின்றது.

அப்பர் சுவாமிகளுக்கு தந்தையாரின் இழப்பு, தாயின் இழப்பு, பெற்றோர் திலகவதியாருக்கு மணம் பேசிய கலிப்பகையாரின் இறப்பு என்பன உலக நிலையாமையை உணர்த்தியது. அன்பு, வாழ்க்கை, உலகம் என்பன நிலையில்லாதவை என்பதையும் உணர்த்தியது. உலக நிலையாமைக் கொள்கை அவரை வாட்டியது. அப்பொழுது நாவுக்கரசருக்கு ஆறுதல் தேவைப்பட்டது. சமண சமயம் உலக நிலையாமை, கொல்லாமை, அறம் என்பவற்றையே போதித்தது. அப்பொழுது சமணசமயப் போதனை அவருக்கு ஆறுதல் அளிப்பதாக இருந்திருக்க வேண்டும். குடும்பச்சூழலும் நாட்டினது சமணசமயச் சூழலும் அவரைப் பாதித்தன. அந்நிலையில்தான் நாவுக்கரசர் சமணசமயத்தை நாடவேண்டி ஏற்பட்டது என்று கூறலாம். மனம் பக்குவப்படாத வயதில் போதனை தேவைப்பட்டது. மனம் பக்குவப்படுகின்ற பொழுதே சைவசமயத்தின் உண்மை நிலையினையும் சைவசமயத்தைப் போன்ற சமயம் வேறில்லை என்பதையும் உணர்ந்தார். இன்றைய நிலையில் கூட மனம் பக்குவப் படாத நிலையில் வாழ்க்கையில் துன்பம் வந்தபொழுது சினிமாப் பாடல்களை போதனைக்காக கேட்கின்றனர். மனம் பக்குவப்பட்ட பொழுதே தேவார திருவாசகங்களை கேட்கின்றனர்.

சமண சமயத்தினர் அறிவுரைகளினால் தமது சமயத்தினைப் பரப்பி வந்தனர். நிலையற்ற உலகைக்கண்டு இனி நிலையா வாழ்க்கையில் ஈடுபடுவேனல்லேன் எனத்துணிந்து சிவபெரு மானது திருவருள் கிடைக்காமையால் எல்லாச்சமயத்திலும் மெய் சமயம் சமண சமயமே எனத் துணிந்து சமணசமயத்திற் சேரலானார். பாடலிபுத்திரம் என்ற ஊரில் சமணரின் தவப் பள்ளியில் சேர்ந்தார். வீடு பேற்றினை கொடுக்க வல்ல சமயம் சமணசமயமே என அறிவு றுத்தினர். மருள்நீக்கியார் சமணப் பள்ளியில் அரியபல நூல்களைக் கற்றார். சமணர்கள் தருமசேனர் என்ற பட்டத்தினையும் வழங்கினர்.


தருமசேனர் புறச்சமயத்தினர் பலருடன் வாதஞ் செய்து அவர் களைத் தோற்கடித்து வாதில் வென்றார். திருப்பாதிரிப்புலியூரில் உள்ள சமண மடத்தின் தலைவராகவும் தருமசேனர் கடமையாற்றினார்.

மருள்நீக்கியார் சமணசமயத்தில் சேர்ந்ததை திலகவதியார் கேள்வியுற்றதும் வேதனையடைந்தார். தம்பியாருக்காக வீட்டில் தவம் இருந்தவர். இச்செய்தி கேட்டதும் திருவதிகைத் திரு வீரட்டானத் திருக்கோயிலை அடைந்து கோயிற் திருப்பணியில் ஈடுபட்டார். கோயில் சுற்றுப்புறங்களை துப்பரவு செய்தல், மெழுகுதல், மலர்கொய்து கொடுத்தல், மலர்கொய்து மாலை கட்டுதல் முதலிய திருப்பணிகளை செய்து இறைவனைப் போற்றி யிருந்தார். திருக்கோயிலில் பெருமான் முன்னிலையில் அடியேன் பின் பிறந்தவனைப் புறச்சமயப் படுகுழியினின்றும் எடுத்தாள வேண்டும் எனப் பலமுறை விண்ணப்பஞ் செய்தார். பெருமான் திலகவதியாரின் கனவிலே தோன்றி "நீ உன் மனக்கவலையை நீக்குவாயாக! உன்னுடன் பிறந்த தம்பி முன்னமே முனியாகி எமை யடையத் தவமுயன்றான். அன்னவனை இனிச் சூலை நோயைத் தந்து ஆட்கொள்வோம்"[11] என அருள் செய்தார்.

தருமசேனர் சூலைநோயினால் துன்புற்றார். சமணரால் தரும சேனர் சூலைநோயினை மாற்ற முடியாது போயிற்று. திலகவதி யாரை அடைந்ததும் திருநீற்றின் மகிமையால் சூலை நோய் நீங்கிற்று. சைவசமய வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. சமண சமயத்தினால் மாற்றமுடியாத நோயினை சைவசமயத்தி னால் திருநீற்றின் ஒளியால் மாற்றமுடிந்ததே. திலகவதியாரின் தவத்தினால்தான் மருள்நீக்கியார் சைவ சமயத்தில் மீண்டும் சேர லானார். திருநாவுக்கரசர் என்ற பெயர் இறைவனால் வழங்கப் பட்டது என பெரியபுராணம் குறிப்பிடுகின்றது. சமணர் அப்பரைத் தண்டிக்க பல வழிகளில் செயற்பட்டனர். அப்பரை நீற்றறையுள் விட்டு பூட்டினார்கள். அப்பர் இறைவனை நினைத்து "மாசில் வீணையும் மாலை மதியமும்" எனும் பதிகத்தைப் பாட இவ்விடம் சந்திரனும் தென்றலும் பொய்கையும் போலக் குளிர்ந்தது. அதனைக் கண்டு சமணர் ஆச்சரியமடைந்தனர். பின்னர் நஞ்சு ஊட்டிய பாற் சோற்றை நாயனாரிடம் சமணர் கொடுக்க அப்பர் அதனை உண்டார். அந்த நஞ்சு அமிர்தம் போலானது. பின்னர் சமணர் யானையை ஏவி விட்டனர் அப்பரைக் கொல்லும்படி. "சுண்ண வெண் சந்தனச் சாந்தும் கெடிலப் புனலுமுடையா ரொருவர் தமர்நா – மஞ்சு வதியா தொன்றுமில்லை யஞ்ச வருவது மில்லை" எனப்பாடிய பொழுது யானை அப்பரை வலம் வந்து வணங்கிச் சென்றது. இறுதியில் அப்பரை கல்லோடு சேர்த்து கடலில் சமணர் போட்டனர். கல் தெப்பமாக மிதந்து வருணபகவான் கல்லிலே சிவிகையாக அமர்ந்து அப்பரைக் காப்பாற்றினார். சமணர் கொடுமைகளை திருநீற்று ஐந்தெழுத்து துணைக் கொண்டு அப்பர் எதிர்த்து நின்றார். துன்பங்கள் யாவற்றையும் ஏற்றார். சிவன் அற்புதங்களை கண்டு மகிழ்ந்தார். சமணர்களின் .போதனை களுக்கு இசைந்த பல்லவராஜன் திருவதிகை வீரட்டானத்தில் அப்பர் முன்னிலையில் தோன்றி அப்பரை வணங்கி சைவ சமயத்தில் சேர்ந்தார். சைவசமயமே மெய்ச்சமயம் என உணர்ந்து காடவ னென்பவனும் சமணப்பள்ளி களையும் பாழிகளையும் இடித்து அவற்றின் கற்களை திருவதி கையில் பரம சிவனுக்கு குணதர வீச்சுரம் எனும் கோயிலைக் கட்டுவித்தான். சைவசமயத்தின் பெருமையையும் உண்மையையும் அப்பர் நிலை நாட்டினார். தமிழ் மக்களும் மன்னனும் வணங்கும்படி பெருமையுடயவராக அப்பர் காணப்பட்டார். அப்பரை உலகிற்குத் தந்த அன்னையாக திலகவதியார் காணப்படுகின்றார். திலக வதியார் இல்லை என்றால் அப்பர் சமணசமயத்தில் மாண்டிருப்பார். திருநாவுக்கரசர் நாயனார் என பெரியபுராணத்தில் அவரின் வரலாறு பேசப்படுவதற்குக் காரணமானவர் திலகவதியாரே.

தர்மம் தவம் செய்கின்றவர்களுக்கு எந்த துன்பமும் அணுகாது. அவர்களை இறைவனே தாங்கிக் கொள்வார் என்பதை அடியார் களின் வரலாறு காட்டும். திலகவதியாரின் தவமே சைவ சமயம் தழைத்தோங்குவதற்குக் காரணமாகும்.

*(தொடர்ச்சி 25 பக்கம்)*



# ஆலயக் கிரியைகளில் பாவிக்கப்படும் நாட்டிய முத்திரைகள்



திருமதி சோ. வேணுகோபால சர்மா
இணுவில்

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் கிரியைகளையும் சடங்குகளையும் அடிப்படையாகக் கொண்டே ஆரம்பமாகின்றது. ஒருவன் பிறப்பில் இருந்து அவன் இறக்கும் வரை அவனுடைய வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் கிரியைகள் முக்கிய இடம் பெறுகின்றன. கிரியா என்பது "கிறு" என்னும் வினையடியாக பிறந்து தமிழில் கிரியை என வழங்கப்படுகிறது. "கிரியா" என்பது எல்லாச் செயல்களையும் உணர்த்தினாலும் நடைமுறையில் அவை சமயத் தொடர்பு கொண்டமைந்தவையாக காணப்படுகின்றது. இதனையே நாவுக்கரசர்

*"பூமென் கோதை உமையொரு பாகனை*
*ஓமஞ் செய்தும் உணர்மின்கள் உள்ளத்தால்"*

எனக் கூறியுள்ளார். ஆகமங்களில் கூறியவாறு "சிவனைப் புறத்தொழிலாலும் அகத்தொழிலாலும் வழிபடுகை கிரியை ஆகும்" எனத் தமிழகராதியில் கூறப்பட்டுள்ளது.

மந்திரங்கள் எல்லோர்க்கும் எளிதில் விளங்கக் கூடியது அல்ல. அவற்றை மக்களுக்கு புரிய வைப்பவை கிரியைகள். ஆகவே கிரியை நிகழ்த்துபவர் பாவனையை வெளிப்படுத்தும் திறமையைப் பெறுவது அவசியமாகும். காரணாகமத்தில் ஆசார்ய லட்சணம் பற்றி "மந்திரம், தந்திரம், கிரியை, முத்திரை, பாவனை ஆகியவற்றை உள் ளீடாகக் கொண்டவர் ஆச்சார்யா" என்று கூறப்படுகிறது. முத்திரை என்பது அடையாளம் எனப் பொருள்படும். இம்முத்திரைகளின் ஊடாக ஆச்சாரியார் கிரியைகளை நிகழ்த்தி ஆன்மாவை இறை வனிடம் நெருங்க வைக்கின்றார். ஆகமங்களில் முத்திரா லட்சண விதி என்ற பகுதியில் முத்திரைகள் பற்றிய செய்திகள் இடம் பெறு கின்றன. கிரியை நிகழ்த்தும் ஆசாரியர் பக்தி என்னும் ரசத்தை தன்னைச் சூழ உள்ளோரிடம் தோற்றுவிக்க இம்முத்திரைகள் உதவு கின்றன. இது ஒருவகை அபிநயமே. அதாவது நாட்டிய நிகழ்ச்சியை நிகழ்த்தும் கலைஞன் ரசங்களையும் பாவங்களையும் மாறி மாறித் தோற்றுவிக்கும் முறையை அபிநயம் என்பர். இவற்றின் ஊடாக நாட் டியக் கலைஞனுக்கும் ஆசாரியாருக்கும் உள்ள தொடர்பு புலனாகிறது.

எனவே கிரியைகளின்போது முத்திரைகளின் பாவனை மிக முக்கியமாக விளங்குகின்றது. நாட்டியத்தில் பயன்படும் முத்திரைகள் கிரியைகளின்போது அதே அம்சங்களுடன் அதே பெயருடன் பிர யோகம் பெறுவது கவனிக்கத்தக்கது. ஆகமங்கள் "பாவனைக்குத் துணை செய்யும் இம்முத்திரைகள் தேவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பன" எனக் கூறுகின்றன. நாம் ஒரு கருத்தைக் கூறுவதை விட சைகை மூலம் அக்கருத்தை மற்றவர்களுக்கு எளிதில் உணர்த்தி விட முடியும். ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த இம்முத்திரைகள் உதவி செய்கின்றன.

ஆலயக் கிரியைகளில் எவ்வாறு இந்நாட்டிய முத்திரைகள் பயன்படுகின்றன என நோக்குவது மிக முக்கியமாகும். சிவமகா மண்டப பூஜையில் யாகரட்சகரான ஐந்து முகம் கொண்ட சிவனையும் செந்நிறமுடைய உமாதேவியாரையும் பூஜிப்பது மரபு. அவ்வாறு பூஜிக்கும் சிவ கும்பத்தை சிவ முத்திரையாலும் வர்த்தனி கும்பத்தை முஸ்டி முத்திரையாலும் தொடவேண்டும் என ஆகமங்கள் கூறுகின்றன.

இம்முத்திரைகளை தொடும்போது சகல சௌபாக்கியங்களும் பெறப்படுகிறது என ஆகமங்கள் கூறும். இம் முத்திரைகள் பரதக் கலை வழக்கில் ஒற்றைக்கை முத்திரையின் 9வது 10வது முத்திரை களாகும். பரதக்கலையில் இடம்பெறும் பதாக முத்திரையானது கிரியைகளின் போது பதாகை என அழைக்கப்படுகிறது. இம் முத்திரையினால் நீரைத் தொட்டு தெளிப்பது புரோக்ஷணம் எனப்படும். தலசுத்தி, திரவிய சுத்தி என்பவற்றுக்காக இது செய்யப் படுகிறது. ஆசனம் செய்த பின் ஆதாரங்களை துடைக்கவும் பதாகை முத்திரையே பயன்படுகிறது. பதாகை முத்திரையை கவிழ்த்துப் பிடித்தல் அம்புக்ஷண முத்திரை எனப்படுகிறது. இதனை சோத்திக முத்திரை எனவும் சொல்லப்படும். தோற்றுவிக் கப்பட்ட சிவசக்தி பிரகாசம் நீங்காது நிலைபெற்று இருக்கச் செய்தல் இதன் நோக்கமாகும். இருகைகளையும் உள்ளங்கைகள் ஒன்றன் மேல் ஒன்று பொருந்தச் சேர்த்து நிமிர்த்திப் பெருவிரல்கள் ஒன்றன் மேல் ஒன்று பிணையுமாறு சிரசில் அல்லது மார்பில் வைத்து வணக்கம் செய்தல் நமஸ்கார முத்திரையாகும்.

இம் முத்திரை நாட்டியத்தில் ஸம்யுத ஹஸ்தத்தின் முதலாவது முத்திரை அஞ்சலிஹஸ்தமாகும். இவ்அஞ்சலி ஹஸ்தம் வணக்கத் தைக் குறிக்க பயன்படுகிறது.

மேலும் கிரியைகளில் விநாயக வணக்கம் நடைபெறும் போது அங்கு தலையினை இரு கைகளினாலும் முஸ்டி முத்திரை மூலம் குட்டிக் கும்பிடுதல் முறை. இதே போல் சங்கல்பம் எனும் கிரியை யின் போது இரு கைகளையும் ஒன்றாகப் பொத்தி மடியின் மேல் வைத்திருப்பர். இங்கு ஸம்யுதஹஸ்த 14வது முத்திரையாகிய ஸம்புட முத்திரை பாவிக்கப்படுகிறது. மேலும் சிவாச்சாரியார் பூக்களை இரு கைகளினாலும் எடுத்து இறைவனுக்கு முழுமை யாக சமர்ப்பிக்கும் போது அங்கு புஷ்பபுட முத்திரை பயன்படுகிறது. பூசைப் பொருட்களை தூய்மைப்படுத்துவதற்கு சிவனது பார்வை யாக பார்ப்பதற்கு நிர்க்ஷண முத்திரை பயன்படுகிறது. அதாவது பெருவிரலால் மோதிர விரலை வளைத்துப் பிடித்து மற்ற விரல் களை நீட்டியவாறு இவ் இடைவெளி மூலமாகப் பார்த்தலைக் குறிக்கும். இது அஸம்யுத ஹஸ்த மயூர முத்திரை ஆகும்.

மேலும் விபூதி கொடுப்பதற்கும் ஓமம் செய்யும் போதும் கிரியைகளில் மிருக் என்ற முத்திரை பாவிக்கப்படுகிறது. அதாவது வலக்கையின் சுட்டுவிரல், சிறு விரல்களை நீட்டி ஏனைய மூன்று விரல்களையும் ஒருங்கு சேர்த்தலைக் குறிக்கும். இது ஆடல் கலையின் அஸம்யுத ஹஸ்த சிம்ம முக முத்திரையாகும். வலக்கை சுட்டுவிரல், பெருவிரல், நடுவிரல் மூன்றின் நுனிகளையும் ஒன்று சேர்த்து ஏனைய இரண்டு விரல்களையும் நீட்டிப் பிடிப்பது நாட்டிய முத்திரையில் கடகாமுகம் எனப் பெயர் குறிப்பிடப்படுகிறது. இம்

முத்திரையானது கிரியைகளின் போது ஹம்ச முத்திரையாக பாவிக்கப்படுகிறது.

சிவசக்தியை சுற்றிலும் மூன்று மதில்களும் மூன்று அகழிகளும் உண்டாவதாக அல்லது வெளியிலுள்ள அசுத்தங்கள் வந்து சேரா வண்ணம் தடைசெய்வதாக பாவனை செய்து மும்முறை சுற்றுவதற்கு அவகுண்டன முத்திரை உபயோகிக்கப்படுகிறது. இது ஒற்றைக் கை முத்திரையின் ஆசி முத்திரையைக் குறிக்கும். இடக் கையை கவிழ்த்து விரல்களை நீட்டி அதன்மேல் வலக்கையையும் அதேபோல் வைத்து இரண்டு பெருவிரல்களையும் அசைப்பது மகர முத்திரையாகும். இம்முத்திரை கிரியைகளில் பயன்படுவதுபோல் நாட்டியத்தில் மட்சய முத்திரையாக மீனைக் குறிக்க பயன்படுகிறது.

அங்குச முத்திரை என்பது வலக்கையை முஷ்டியாக பிடித்து பெருவிரலை விலகாது நீட்டி அதன் மேல் சுட்டு விரலை வளைத்துப் பிடித்தல் ஆகும். இம் முத்திரை பரதக் கலையில் கபித்த முத்திரையாக பால் கறத்தல், கண்ணுக்கு இமை போடுதல், பிள்ளையார் போன்ற விநியோகங்களுக்கு பயன்படுகிறது.

எனவே மேற்கூறிய கருத்துக்களைத் தொகுத்து நோக்கும் இறைவனுடன் தொடர்புபட்ட பரதக்கலையானது தெய்வீகமயமானதுடன் இறைவனுடன் ஆன்மாவை நெருங்க வைப்பதற்காக நிகழ்த்தப்படும் கிரியைகளில் பயன்படும் முத்திரைகளுக்கும் ஆடல் கலையில் உபயோகிக்கப்படும் ஹஸ்தங்கள் எனப்படும் முத்திரைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது புலனாகிறது.

## அகில இலங்கை இந்து மாமன்றப் பொன்விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப் போட்டி முடிவுகள்

அகில இலங்கை இந்து மாமன்றம் பொன்விழாவை முன்னிட்டு நடத்திய பாடசாலை மாணவர்களுக்கான தேசிய மட்டப் பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப்போட்டி முடிவுகள்:

தேசிய மட்டப் பேச்சுப் போட்டியில் கீழ்ப்பிரிவில் மட்டக்களப்பு வின்சன்ட் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி செல்வி எஸ். சானுஜா முதலாவது இடத்தையும், கல்லடி சிவானந்த தேசிய பாடசாலை மாணவன் செல்வன். ஆர். ஜனகன் இரண்டாம் இடத்தையும், ஹட்டன் சென். தோமஸ் கல்லூரி மாணவி செல்வி எம். மீனாம்பிகை, கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலய மாணவன் செல்வன். ஜெய. ஜெயமாருதி ஆகியோர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். மத்தியபிரிவில் மட்டக்களப்பு விவேகானந்த மகளிர் மகா வித்தியாலய மாணவி செல்வி. அபிராமி முதலாம் இடத்தையும், கொழும்பு இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் ப. அஜந்தன் இரண்டாம் இடத்தையும், கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன். வி. நரேஸ்குமார் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். மேற்பிரிவில் கொழும்பு இந்துக் கல்லூரி மாணவன் இரா. டர்ஷக முதலாம் இடத்தையும், மட்டக்களப்பு வின்சன்ட் பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி செல்வி. அ. புவனா இரண்டாம் இடத்தையும், மஸ்கெலியா சென். ஜோசப் தமிழ் மகா வித்தியாலய மாணவி செல்வி எஸ். சசிரேகா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

கட்டுரைப் போட்டியில் பரிசு பெறுபவர்கள்: கீழ்ப்பிரிவில் யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி செல்வி. சி. நிஷாந்தி முதலாம் இடத்தையும், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி செல்வி ச. நிவேதிகா இரண்டாம் இடத்தையும், இறக்குவானை பரியோவான் தமிழ் மகா வித்தியாலய மாணவன் செல்வன் கே. தனுஷன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மத்திய பிரிவில் கொழும்பு விவேகானந்தா கல்லூரி மாணவி செல்வி. ஏ. திவ்யகாயத்திரி, முதலாம் இடத்தையும், யாழ். இந்துக் கல்லூரி மாணவன் செல்வன். யோகேஸ்வரன் அஜித் இரண்டாம் இடத்தையும், நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி. திவ்யாஷனி சிவசுப்பிரமணியம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மேற்பிரிவில் ஹட்டன் ஹைலண்ட் கல்லூரி மாணவி செல்வி வித்யாஷினி சிவசுப்பிரமணியம் முதலாம் இடத்தையும், யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவி செல்வி நிலானி சின்னத்துரை இரண்டாம் இடத்தையும், யாழ் வடமராட்சி இந்துக் கல்லூரி மாணவி செல்வி. அபிராமி நல்லதம்பி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

தேசிய மட்டப் பேச்சுப் போட்டி, மற்றும் கட்டுரைப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கமும், சான்றிதழும் வழங்கப்படும். பரிசுகள் வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## திலகவதியார் *(23ம் பக்கத் தொடர்ச்சி )*

(23ம் பக்கத் தொடர்ச்சி )

### அடிக்குறிப்பு


(1) பெரியபுராணம், சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை 1993, பா – 1287

(2) மேற்படி, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை 1993, பா – 1301

(3) மேற்படி, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை 1993, பா – 1294

(4) மேற்படி, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை 1993, பா – 1302

(5) மேற்படி, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை 1993, பா – 1316

(6) மேற்படி, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை 1993, பா – 1318

(7) மேற்படி, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை 1993, பா – 1326

(8) மேற்படி, சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை 1993, பா – 1235

(9) திருநாவக்கரசர் தேவாரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை 1945

(10) இளங்கோவடிகள் சிலப்பதிகாரம், வழக்குரை காதை பா–20, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை 1942

(11) பெரிய புராணம், மு. கு. ப. 1993, பா–1318

# சேர் பொன். அருணாசலம் நினைவுக் கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற கட்டுரைகள்



சேர் பொன்னம்பலம் அருணாசலம் அறநிதியம் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய 150வது ஜனன ஆண்டு நினைவுக் கட்டுரைப் போட்டியில் முதலாம், இரண்டாம் பிரிவுகளில் முதற் பரிசு பெற்ற கட்டுரைகள் "இந்து ஒளி"யின் கடந்த இரண்டு இதழ்களிலும், ஆங்கில மொழிக் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கட்டுரை "இந்து ஒளி"யின் கடந்த இதழிலும் வெளியாகியிருந்தது. தமிழ் மொழி கட்டுரைப் போட்டியின் மூன்றாம் பிரிவில் முதற்பரிசு பெற்ற கட்டுரையும், ஆங்கில மொழி கட்டுரைப் போட்டியில் இரண்டாம், மூன்றாம் பிரிவுகளில் முதற்பரிசு பெற்ற கட்டுரையும் இந்த இதழில் வெளியாகிறது.

# இலங்கை அரசியலில் சேர் பொன். அருணாசலம் ஏற்படுத்திய தாக்கங்கள்

செல்வி தயாந்தினி பூபாலரெத்தினம்
முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்,
மட்டக்களப்பு

*'செயற்கரிய செய்வார் பெரியார், சிறியார்*
*செயற்கரிய செய்கலாதார்* –' என்ற வள்ளுவப் பெருமானின் குறளையே இலக்கணமாகக் கொண்டும், வரலாறு எப்பொழுதும் பின் நோக்கிப் பயணிப்பதில்லை, ஆனால் அந்த வரலாற்றைப் பகிர்ந்து கொள்ளும் மகான்களோ பிற்போக்கு வாதிகளாக இருப்பதும் இல்லை என்ற பார்வைப் புலத்தில் நின்றும் நாம் சேர். பொன் அருணாசலம் அவர்கள் இலங்கை அரசியலில் ஏற்படுத்திய தாக்கங்களை சுருக்கமாக இங்கு ஆய்வு செய்தும், இன்றைய தமிழ் தேசியவாதத்தின் பரிணாம வளர்ச்சியில் அன்னாரின் பணிகளின் வகித்த பங்கையும் நோக்குவோம்.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின்போது இலங்கை சிவில் சேவையின் மிகத்திறமை வாய்ந்தவர்களில் சேர் பொன் அருணாசலம் ஒருவராக மதிக்கப்பட்டார். 1913ஆம் ஆண்டில் சேவையில் இருந்து ஓய்வு பெற்று சேர். பொன் அருணாசலம், 1919ம் ஆண்டில் இலங்கை தேசிய காங்கிரசின் முதல் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதுடன் அக்கால கட்ட இலங்கை அரசியலில் ஒரு முன்னணி அரசியல் பிரமுகராக தோற்றம் பெற்றார்.

அப்போதைய இலங்கை மிதவாத தலைமைத்துவத்தைப் போலன்றி, சேர். பொன் அருணாசலம் பலவிடயங்களில் தீவிரப் போக்கைக் கடைப்பிடித்தார். சுயாட்சி அரசாங்கம், சர்வசன வாக்குரிமை என்ற இருவிடயங்களிலும், அவர் தமது சகாக்களைப் பார்க்கிலும் பலமடங்கு தீவிரமும் தொலைநோக்குடனும் தமது வாதங்களை முன் வைத்தார். அதே போன்று தொழிலாள வர்க்க மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளிலும் கள்ளங்கபடமில்லாத, நேர்மை, இதயசுத்தியுடன் தமது பணிகளை மேற்கொண்டார்.

இலங்கை தேசிய சங்கமும், இலங்கை அரசியல் சீர்திருத்தக் கழகமும் கொழும்பை அடிப்படையாகக் கொண்ட சிங்கள – தமிழ் பிரமுகர்களை உள்ளடக்கியனவாகவே இருந்தது. இந்த இரண்டு அரசியல் அமைப்புகளினதும் குறிக்கோள் அரசியல் அமைப்பு ரீதியில் சீர்திருத்தம் மூலம் சுயாட்சி அரசாங்கம் அமைப்பதாகவே இருந்தது. இருப்பினும் இலங்கை சீர்திருத்தக் கழகத்தில் பெரு வாரியான உறுப்பினர்கள் சிங்கள பிரமுகர்களாகவே இருந்தனர்.

1915ஆம் ஆண்டு சிங்கள – முஸ்லீம் இனக்கலவரம், மற்றும் அன்றைய பிரித்தானிய அரசு அறிமுகப்படுத்த விளைந்த இலங்கைக்கான புதிய அரசியல் யாப்பு என்பனவற்றைத் தொடர்ந்து சிங்கள, தமிழ், முஸ்லீம்கள் ஒரு இயக்கத்தை அமைக்க முனைந்தனர். இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த இந்திய தேசிய காங்கிரசைப் போலவே இலங்கையிலும் ஒரு இயக்கத்தை அமைத்துக் கொண்டனர்.

இந்த அமைப்பைத் தொடங்குவதற்கு முன்னர் சிங்களத் தலைவர்களும், தமிழ்த் தலைவர்களும் ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டனர். யாழ்ப்பாணச் சங்கம் ''தமிழ் மக்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப பிரதிநிதித்துவம்'' என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தது. அதன்படி முடியுமானவரை தமிழ் விகிதாசாரத்திற்கிணங்க பிரதிநிதித்துவமும், மேல்மாகாணத்தில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவமும் வழங்கப்படும் என்று 1918ல் இலங்கை தேசிய சங்கத்தின் சார்பில் ஜேம்ஸ் பீரிசும், இலங்கை சீர்திருத்தக் கழகத்தின் சார்பில் ஈ. ஜே சமரவிக்கிரமாவும் யாழ்ப்பாண சங்கத்தினை பிரதிநிதித்துவம் செய்த சேர். பொன் அருணாசலத்திடம் எழுத்து மூலமாக உறுதியளித்தனர்.

எனவே, இலங்கை தேசிய காங்கிரசில் இணைவதற்கு தமிழ் தரப்பினர் முதலில் மறுப்பு தெரிவித்த போதிலும் சிங்களத் தலைவர்களின் எழுத்து மூலமான உறுதிமொழி வழங்கப்பட்டதை தொடர்ந்து தமிழர் தரப்பும் இலங்கை தேசிய காங்கிரசில் இணைந்தது. 1919ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11ஆம் திகதியன்று இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. அதன் முதற் தலைவராக சேர். பொன் அருணாசலம் தெரிவு செய்யப்பட்டார்.

சிங்களத் தலைவர்களின் எழுத்து மூலம் உறுதிமொழி கிடைத்ததும் இந்திய தேசிய காங்கிரஸ் போன்ற ஒரு தனி அரசியல் அமைப்பை உருவாக்கக் கனவு கண்டு வந்த சேர். பொன் அருணாசலத்தின் கனவு பலித்து விட்டதென்றே நம்பினார். ஆனால் மனிங் சீர்திருத்தத்திற்கான முயற்சிகளை பிரித்தானிய அரசு முயன்று கொண்டிருந்தபோது தமிழ் பிரதிநிதித்துவம் குறைக்கப்படுவதை இலங்கை தேசிய காங்கிரசிலிருந்த சிங்களத்

தலைவர்கள் கண்மூடித்தனமாக இருப்பதைக் கண்ட அருணாசலம் முரண்படத்தொடங்கியதுடன், எதிர்த்து வாதிடவும் முனைந்தார்.

சிங்களத் தலைவர்கள் வாக்குறுதியை மீறியதைத் தொடர்ந்து 1921ஆம் ஆண்டு அருணாசலம் இலங்கை தேசிய காங்கிரசிலிருந்து வெளியேறி தமிழ் மகா சபையை அமைத்தார். இதன் பின்னர் இலங்கை தேசிய காங்கிரஸ் ஒரு சிங்கள அரசியல் அமைப்பாகவே படிப்படியாக மாற்றமடைந்தது.

தமிழ்/சிங்கள உறவில் ஏற்பட்ட இந்த முதலாவது முறிவு சிங்களத் தலைவர்களின் துரோகத்தை மட்டும் எடுத்துக் காட்ட வில்லை. இலங்கை தேசியத்தையோ, தமிழர்களையோ கணக் கெடுக்கப்போவதில்லை என்பதையும், சிங்கள பௌத்த மேலாதிக் கத்தையே முன்னெடுக்கப் போவதையும், இனத்துவ ஒருமைப் பாட்டை சிதைத்துவிடும் என்பதையும் அடிக்கோடிட்டுக் காட்டியது.

எனவே, சிங்கள தமிழர் ஐக்கியத்தின் அடிப்படையில் ஐக்கிய இலங்கை உருவாக்க விளைந்த அருணாசலத்தின் கனவு பிசுபிசுத்துப் போனதுடன், தமிழர் தனிவழி சென்று தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியத்தை அருணாசலம் தமது நுண்ணறிவால் உய்த்துணர்ந்து கொண்டார்.

1921ஆம் ஆண்டு ஆவணிமாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணத் தில் தமிழர் மகா சபை உருவாக்கப்பட்ட வேளை எல்லாத் தமிழர் களையும் ஒரு குடையின் கீழ் அணி திரட்டியதுடன், எல்லாத் துறை சார்ந்த மக்களையும் தமிழர் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதற்கு பணியாற்றுவதற்கும் ஒன்றுபடுத்திய வரலாற்று சாதனையும் நிகழ்த்திய கர்மவீரர், தமிழ்த் தேசிய அரசியலுக்கு காலமறிந்து கணிப்புச் செய்து பங்களிப்புச் செய்த தமிழ் தேசி யத்தின் முன்னோடி என்ற வரலாற்றுச் சிறப்புக்கும் உரித்தானவர் சேர். பொன் அருணாசலம்.

1921ஆம் ஆண்டிலேயே தமிழ் பேசும் மக்களின் அரசியல், சமூக பொருளாதார கல்வி மற்றும் பொது சேம நலன்களைப் பாது காப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் உரிய வேளையும் தருணமும் வந்து விட்டது என்பதையும், தமிழ் தேசியம் கட்டியெழுப்பப்பட வேண்டியது இன்றியமையாத விடயம் என்பதையும் அனை வருக்கும் புலப்படுத்திய அரசியல் மேதை அவர்.

சேர். பொன் அருணாசலம் இன்று ஏறத்தாள மறக்கப்பட்ட, விசேடமாக இளைய சமுதாயத்தினருக்கு பரிச்சயமற்ற ஒருவராக இருக்கமுடியும். ஆனால் இலங்கை அரசியல் அரங்கில் –20ம் நூற்றாண்டின் ஆரம்ப கால அரசியல் அரங்கில், தமிழர் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார நலன்களைப் பேணிக்காப்பதில் தீவிர அக்கறையும் உறுதியும், இலட்சிய வேட்கையும் ஒருங்கே அமைந்த மகானாகவே அவர் விளங்கினார்.

தமிழ் அரசியல் உரிமைக்காக ஆணித்தரமாக குரல் எழுப்பி வாதிட்டார். சிங்களத் தலைவர்களுடன் ஒன்றுபட்டு ஐக்கிய இலங்கை யினுள் தமிழ் நலன் பேண முனைந்தார். ஆனால் சிங்களப் பேரின வாதிகள் வாக்குறுதி மீறி துரோகம் இழைத்த பின்னர், அவர் சிங்களத் தலைவர்களை நம்புவதற்கு துளியும் முற்படவில்லை

தனிவழியே தமிழருக்குரிய வழி – அதுவே தமிழருக்கு விமோ சனம் அளிக்கும் வழி என்று திட நம்பிக்கை கொண்டதுடன் எதிர் காலத்தில் தமிழர் பின்பற்ற வேண்டிய அரசியல் நடவடிக்கைக்கு வழிகாட்டிச் சென்றார்.

இலங்கை அரசியலில் சேர். பொன் அருணாசலம் ஏற்படுத்திய பலுவான தாக்கங்களின் விளைவாகவே தமிழ் தேசியம் படிப்படி யாக வளர்ச்சி பெற்று வந்ததுடன் சிங்களப் பேரின வாதத்தின் மேலாதிக்கத்துக்கும் சவாலாக மாற்றம் பெற்று வந்தது. தற்போது தமிழ்த் தேசியம், தமிழ் தாயகம், விடுதலைப் புலிகளின் அரசியல் அமைப்பு ஆகிய மூன்றும் தமிழ்ச் சமூகத்தின் இறைமையுடன் பிணைந்தவையாகி பரிணாம வளர்ச்சி பெற்று தமிழ் சமுதாய விடுதலைப் போராட்டத்தின் முக்கிய கூறுகளாக இருக்கின்றன. இம் மூன்று கூறுகளையும் ஒன்றுபடுத்தி தமிழர் விடுதலைப் போராட் டத்திற்கு உரமூட்டி வழிகாட்டிய தமிழ்த் தேசியப் பணியில் சேர் பொன் அருணாசலத்துக்கு பெரும் பங்குண்டு.

சேர். பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் சகோதரர் களின் காலம் தொட்டு இன்று வரை சிங்கள அரசியல் வர்க்கம் தமிழ் மக்களை போலி வாக்குறுதிகளை அளித்து ஏமாற்றிய விடயம் வரலாறு கண்ட உண்மை. இந்த ஏமாற்று வித்தை காரணமாகவே சேர். பொன் அருணாசலம் 1921ஆம் ஆண்டில் இலங்கை தேசிய காங்கிரசில் இருந்து விலகி தமிழர் மகாசபை அமைத்து தமிழர் அரசியல் உரிமைகளுக்கு தமிழரே போராட வேண்டும் என்று அன்று முடிவெடுத்தார். அவர் அன்று எடுத்த அந்த முடிவு இலங்கையின் இன்றைய அரசியல் சூழ்நிலையிலும் பொருத்தமானதாகவே இருக்கிறது.

இறுதியாக 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே, தமிழ் சமூகத்தையும், தமிழ் தாயகத்தையும், தமிழ் தேசியத்தையும், தமிழ் கலாசாரத்தையும், தமிழர் பொருளாதார வளங்களையும் சிதைத்து சின்னாபின்னப்படுத்தி தமிழ் சமூகத்தினுள்ளும், சிறுபான்மை மக்கள் மத்தியிலும் இயல்பாகக் காணப்படும் முரண்பாடுகளை கூர்மை அடையச் செய்தும், தமிழ் சமூகத்தை அடக்கி ஆளும் கங்கணத்துடன், யுத்த சன்னத்தமும் பூண்டு நிற்கும் சிங்களப் பேரினவாத அரசாங்கத்தையும் அதனுடன் கைகோர்த்து நிற்கும் தமிழ் விரோத சக்திகளையும், அதற்கு மேலாக வெளிக்காட்டுச் சக்திகளையும், அவற்றின் சதிகார வியூகங்களையும் முறியடித்து தமிழ் தேசியம் தாக்குப் பிடித்து உயிர்ப்புடன் பலமிக்க சக்தியாக இருக்கிறது என்றால் அது 1921ஆம் ஆண்டு அமரர் சேர் பொன் அருணாசலம் ஏற்றிவைத்த நந்தா விளக்கான முன்னோடி தமிழ்த் தேசியத்தின் உயிர்பூட்டும் தாக்க விளைவே மூலகாரணம் என்ற முடிவுக்கு வருவது மிகையாகாது.

அன்னாரின் 150வது பிறந்த தினத்தை நினைவுகூரும் இவ்வேளையில் அவருடைய அரசியல் கருத்து வீச்சுக்களை நாம் மீள மீள அலசி ஆராய்ந்து, உரக்கச் சிந்தித்து அவர் தடம் பதித்த பாதையில் நாம் வீறுநடை பயில்வதுதான் நாம் அம்மேதைக்கு ஆற்றக்கூடிய மாபெரும் நினைவஞ்சலியாகும்.

அதுவே நாம் அம்மேதைக்கு செலுத்தக்கூடிய கைமாறாகும். எண்பத்து மூன்று ஆண்டுகள் கடந்தும் அவர் அறிவுறுத்திய கருத்துக்களும், அவர் கடைபிடித்த அரசியல் போக்குகளும் இன்றும் எம்மத்தியில் செல்வாக்குச் செலுத்தும் சக்திகளாகவே விளங்குகின்றன. இன்றும் அவர் கருத்துக்களுக்கும், அரசியல் போக்குகளுக்கும் ஒரு வலுவான உயிர்ப்பும் பொருத்தப்பாடும் இருந்தே வருகின்றது.

இறை வழிபாட்டில் முன்னேறித் திளைத்து அதன் இன்பமயத்தை அனுபவிக்கும்போது, நமக்கு வரும் துன்பங்கள் யாவும் வலிமையற்று மிகவும் துச்சமாக நமக்குத் தெரியும். ***(ஸ்ரீ வேணுகோபாலன்)***

சுயநலமின்றி எந்த நேரமும் பணி புரியும் இலட்சிய வாழ்க்கையே கர்மயோகம். ***(சுவாமி விவேகானந்தர்)***

## Prize - Winning Essays in the Sir Pon. Arunachalam Memorial Essay Competition

The essay which won the award of the First Prize in the competition conducted among students by the Sir Pon. Arunachalam Trust in memory of his 150th Birth Day was published in the previous issue of "The Hindu Oli". The essays which were awarded the Second and Third Prizes are published in this issue.

Grade - 11 : First Place

# Sir Ponnambalam Arunachalam

Thrishana Pothupitiya
*Bishop's College, Colombo*

It was an era when Ceylon was under the dominance of the British Government. The educated Ceylonese began the quest for political freedom and civil rights. They fought for the independent of their motherland. Among these patriots, shown SIR PONNAMBALAM ARUNACHALAM, one of the greatest leaders of this little nation. He was an inspiring leader and a great character. A person to look up to and guiding light to all Ceylonese, whether they be Tamil, Sinhalese, Muslim or Burgher.

Sir Arunachalam was born in Colombo to Gate Mudaliyar Ponnambalam and Sellachchi Ammaiyar on the 14th day of September 1853. He was the third in the family and was the younger brother of another distinguished patriot, Sir Ponnambalam Ramanathan. He was educated at the Royal Academy presently known as Royal College. Later he proceeded to Christ College at Cambridge where he excelled in Classics and Mathematics, winning the foundation scholarship and obtaining the masters degree,

He was the first Ceylonese to enter the Ceylon Civil Services in 1875. In 1887 he was appointed registrar general. He was also the first Ceylonese to be elected president of the Colombo branch of the Royal Aisiatic Society. He was a dedicated man and a very valuable person to the Hindu people of Ceylon. As the president of the Saiva Paripalana Sabai he took, a great interest in promoting Hindu cultural matters. It was he too, who saw the need of a university for Ceylon. He was a great philosopher and author. In 1911 he completed his scientific compilation of the National Census Report, which was a great hit Another of his great works were the 'Sketches of Ceylon History, Studies' in 1906 and 'A Digest of the Civil Law of Ceylon, Census report of 1901

In 1913 on his retirement from public service he was knighted in recognition to his services to his country. His famous speech on 'Our Political Freedom' delivered in 1917 under auspices of the Ceylon National Association, shows his desire for Ceylon political progress. The highlight of his political career came in 1919 with the birth of the Ceylon National Congress of which he was the chairman. However differences arose and he withdrew from that institution for the formation of Ceylon Tamil league in 1922 of which he was president.

For over half a century he worked hard for the betterment of his motherland, excelling in the fields of politics and social service. He Worked side by side with others especially the Sinhalese in peace and harmony, a quality we should develop today. He was an aspiring person and a great archiever. To quote Sir S.W. R.D. Bandaranayke who said,

*"Arunachalam was one of the most productive men of his age."* Sir Arunachalam passed away at Madurai on the 9th day of January 1924 while on a pilgrimage worshipping of the Hindu Temples of South India. This one of the greatest patriots of Ceylon ended his regime at the age of 71 almost 80 years ago.

## Discovery of Reasons...

'Is religion to justify itself by the discoveries of reason through which every other science justifies itself? Are the same methods of investigation, which we apply to science and knowledge, outside, to be applied to the science of religion? In my opinion, this must be so; and I am also of opinion that the sooner it is done the better. If a religion is destroyed by such investigations, it was then all the time useless, unworthy, superstition; and the sooner it goes the better. I am thoroughly convinced that its destruction would be the best thing that could happen. All that is dross will be taken off, no doubt, but the essential parts of religion will emerge triumphant out of this investigation. Not only will it be made scientific-as scientific, at least, as any of the conclusions of physics or chemistry-but it will have greater strength, because physics or chemistry has no internal mandate to vouch for its truth which religion has.'

*- Swami Vivekananda -*

Grade - 111 : First Place

# The Dawn of Sir Ponnambalam Arunachalam

Duleesha De Silva
*Sirimavo Bandaranaike Vidyalaya, Colombo.*

Sir Ponnambalam Arunachalam can be considered as one of the great heroes who has been born at the time of a political revolution in Sri Lanka. He was born in 1815, in Jaffna, becoming another member of his family, having two brothers. He obtained his Primary education at Royal College, which was known as Royal Academy at that time. Then be had been sent to Cambridge University, England in 1870 for his higher studies and had recieved many scholarships during his education. He was the one who first passed from the Civil Service Examination in Sri Lanka in 1875.

He was first appointed as a civil worker in Colombo Kachcheri and then he became the District Judge. He has done a service, being the Register General and the Piscal Officer in Wester Province also. When he was working as the Registar General, be was selected as one of the members of Parliament in 1906.

"Respecting all with equal equinimity rather than being favourable" was one of the best sayings of him. Sir Ponnambalam Arunachalam was one of the active members to appoint Lanka National Union for the purpose of getting political Freedom to Sri Lanka in 1919. He was very much dedicated to solve the problems between Muslim, Sinhala riots in 1915. In accordance with, some noblemen Sir Ponnambalam Arunachalam was struggling very hard to solve the racial and religion segregation in Sri Lanka.

The speech delivered by him on the basis of "Our Political Needs" was noted as one of most important speeches which enhances and reveals his attitudes and opinions about polities and people.

Labourers' Welfare Society and Labour Development Project were started and launched by him in according to attain the similar rights for the workers in Sri Lanka.

In 1919 being. one of the active members of Lanka National Union he contributed himself to get the independence to Sri Lanka From Englishmen Eventhough he is Tamil he has said "Ladies and Gentlemen, if we don't speak Sinhala as Sinhalese, who else is there to speak Sinhala. We have to remember that it is a pleasure to speak Sinhala as we are the only people who speak Sinhala in this world." at a function which was held at Ananda College, Colombo.

Without neglecting all races and religions, he has started Lanka National Union and Lanka Labourers Union with the purpose of doing welfare to the society, Sri Ponnambalam Arunachalam was one of the great Union leaders among the working crowd who always wanted to consider about the equal rights of human being.

In addition to all these great service, he has helped in constructing of Universities all around Sri Lanka with the hope of educating poor and talented students with tertiary education.

After a great service of 38 years to the government of Sri Lanka he got his retirement in 1913 and was awarded with a post of knight to appreciate his contribution for the development of Sri Lanka.

In 1915 he developed the rural culture and many industries by giving financial aid and by supplying necessary ingridients and tools for the people who were involved in making furniture, Weaving clothes, Pottery work and many more domestic industries.

Technical Education Centres and English Education Centres specially for the poor students were constructed by him.

Among the other noblemen, the name of Sir Ponnambalam Arunachalam became immortal because of the great service done by him to our motherland Sri Lanka.

We can say that Sri Ponnambalam Arunachalam was one of the greatest sons of the mother Sri Lanka who has brightened the shine of it with a great pride to all of us.

Because of his commitment he was considered as one of the heroes in Sri Lanka who has tried very hard to break the big barriers of slavery.

Despite all those critical activities and many problems came towards him, he has proved himself as a good leader. Who contributed others to the victory.


It is clear that he has tried very much to prevent poor people from getting ignored from the society by saying "We are one family. We are one family of having many brothers and sister."

Having a great affection towards Sinhala people he has worked with a great effort to gain the social justice. I think Sir Ponnambalam Arunachalam is a nobleman that we hardly come across to know about. He has used his intelligence and strength for well-being of the people without considering any social – barriers. This great person was gone away from us forever when he was 79 in 1930. I wish if he were born again in our motherland Sri Lanka to develop our country to the best.

## சுவாமிஜி ஜீவனானந்தா மகராஜ் நினைவு அஞ்சலி நிகழ்வு [04.03.2006]



கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமிஜி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்கள், மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா, மாமன்ற உப தலைவர் திரு. சி. தனபாலா ஆகியோர் சுவாமிஜி ஜீவனானந்தா மகராஜ் அவர்களது உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிக்கிறார்கள். அருகே மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை



நிகழ்வுக்கு வருகை தந்திருந்தவர்களுள் ஒரு பகுதியினர்

---

## மாமன்றத்தில் மகா சிவராத்திரி நிகழ்வு [26.02.2006]



மாமன்றக் குரு சிவஸ்ரீ இராமநாத விஜயகுமாரக் குருக்கள் பூசை நிகழ்வுகளை நடத்துகிறார்.



லேக்ஹவுஸ் இந்து மன்றத்தினர் வழங்கிய பஜனை நிகழ்ச்சி


## ஞானவித்தகர் சீ. விநாசித்தம்பி நினைவு அஞ்சலி நிகழ்வு [12.03. 2006]








மாமன்றத் தலைவர் திரு வி. கயிலாசபிள்ளை தலைமையுரையும், மாமன்ற உபதலைவரும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி துணை அதிபருமான செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் நினைவுச் சிறப்புரையும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு ம.க. ஈழவேந்தன் அஞ்சலி உரையும் நிகழ்த்துகிறார்கள்.






நிகழ்வுக்கு வருகை தந்திருந்தவர்களுள் ஒரு பகுதியினர்.

## மாமன்றத்தில் மகா சிவராத்திரி நிகழ்வு [26.02.2006]





மகா சிவராத்திரி பூசை வழிபாட்டில் கலந்து கொண்டவர்களுள் ஒரு

# மாமன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு

## கருத்தரங்குகளும் சிறப்பு மாநாடும்

## (01.04.2006, 02.04.2006)

மாமன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்குகளும் சிறப்பு மாநாடும் கடந்த எப்ரல் முதலாம், இரண்டாம் திகதிகளில் "இந்து மக்கள் எதிர்நோக்கும் சவால்களும் பிரச்சினைகளும்" எனும் தொனிப் பொருளில் கொழும்பில் நடைபெற்றன.

ஏப்ரல் முதலாம் திகதியன்று, கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தின் நாவலர் அரங்கில் காலை 9.00 மணிக்கு "ஆலய வழிபாடு, ஆலய நிர்வாகப் பிரச்சினைகள்" என்ற கருப்பொருளில் கருத்தரங்கு ஆரம்பமானது. மாமன்ற சமய விவகாரங்கள், விழாக்கள் குழுத் தலைவர் சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கு நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வாழ்த்துரை வழங்கினார். அதனையடுத்து தலைமையுரையும், தொடர்ந்து மாமன்றப் பொதுச் செயலாளரின் உரையும் இடம்பெற்றது. அதன் பின்னர் மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரும், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா அவர்கள் சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பலர் தங்கள் கருத்துக்களை முன்வைத்தார்கள்.

மதிய போசனத்தைத் தொடர்ந்து மாலை 3.00 மணிக்கு "இந்துக்களின் சமூக கலாசார பிரச்சினைகளும் சிவதொண்டர் அணியின் பங்களிப்பும்" எனும் பொருளில் கருத்தரங்கு ஆரம்பமானது. மாமன்றத் துணைத் தலைவர் திரு. சின்னத்துரை தனபாலா நிகழ்வுக்கு தலைமை தாங்கினார். மாமன்ற பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் வழங்கிய கருத்துரைகளின் தொகுப்பைத் தொடர்ந்து கலந்துரையாடலும், மாமன்ற உப தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களது சிறப்புரையும் இடம்பெற்றது.

மறுநாள் 2ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு "இந்து மாணவர்களின் கல்விப் பிரச்சினைகள்" என்ற கருப்பொருளில் கருத்தரங்கு நடைபெற்றது. மாமன்றக் கல்விக்குழு தலைவர் திரு. க. அருணாசலம் கருத்தரங்கு நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற தலைமையுரையின் பின் மாமன்ற சிறப்பு உறுப்பினர் திரு. கி. புண்ணியமூர்த்தி கருத்துரைகளின் தொகுப்பை வழங்கினார். அதன் பின்னர் கொழும்பு பல்கலைக்கழக கல்வித்துறைப் பேராசிரியர் சோ. சந்திரசேகரம், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன், உப பீடாதிபதி திரு. பா. தனபாலன், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி திரு. வ. ரவீந்திரன் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினார்கள். இதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன் பின் மாமன்றக் கல்விக்குழுவின் செயலாளர் திரு. த. மனோகரன் நிறைவுரை நிகழ்த்தினார்.

மதிய போசனத்தின் பின்னர், பிற்பகல் 3.00 மணியளவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமானது. மங்கள இசை முழங்க, அறுபத்து மூன்று நாயன்மார்களது திருவுருவப் படங்களுடன், யானைமீது சேக்கிழார் நாயனாரின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு, அறிஞர்கள், பிரமுகர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள். லோறன்ஸ் வீதி, காலி வீதி, வழியாக வெள்ளவத்தையை வந்து சேர்ந்த ஊர்வலம், அங்கிருந்து இராமகிருஷ்ண வீதி வழியாக இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தை வந்தடைந்தது. அதன் பின்னர், மாலை 5.00 மணியளவில் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொன்விழா சிறப்பு மாநாடு மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் ஆரம்பமானது.

மங்கள விளக்கேற்றலும், அதன் பின் இறைவணக்கமும் செலுத்தப்பட்டதை தொடர்ந்து மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரும், வரவேற்புக் குழுத் தலைவரும், இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி அதிபருமான திரு. ந. மன்மதராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார். அதன்பின் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமிஜி ஆத்மகனானந்தா மகராஜ், கப்பித்தாவத்தை பால செல்வ விநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பா. சண்முகரத்னசர்மா, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோரது ஆசியுரைகள் இடம்பெற்றன.

மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளையின் தலைமையுரையைத் தொடர்ந்து, மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் கருத்தரங்குகளின் தொகுப்பை வழங்கினார். அதன் பின்னர், மாமன்றத்தின் பொன்விழா வெளியீடான "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. மாமன்ற உபதலைவரும் மாமன்ற வெளியீடுகள் குழுத் தலைவருமான பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். அதன்பின் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்களின் சிறப்புரையைத் தொடர்ந்து மாநாட்டின் இறுதி நிகழ்வாக மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

அன்றைய சிறப்பு மாநாடு நிகழ்ச்சிகளை திருமதி ஹேமா சண்முகசர்மா தொகுத்து வழங்கினார்.

# வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரை


# (14.03.2006)




மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை, மாமன்ற பிரதித் தலைவர் திரு மா. தவயோகராஜா, மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினரும், இரத்மலானை இந்துக் கல்லூரியின் அதிபருமான திரு. ந. மன்மதராஜன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுகிறார்கள். அருகே விடுதிகள், முதியோர் இல்லக் குழுச் செயலாளர் திருமதி அ. கயிலாசபிள்ளை



அமரர் வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களது உருவப்படம். செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் நினைவுப் பேருரையையும், மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் நன்றியுரையையும் நிகழ்த்துகிறார்கள்.





நிகழ்வுக்கு வருகை தந்திருந்தவர்களுள் ஒருபகுதியினர்.



நல்லை ஆதீன முதல்வர், மாமன்றத் தலைவர், மாமன்ற பிரதித் தலைவர் மங்கள விளக்கேற்றுகிறார்கள்.


நல்லை ஆதீன முதல்வர், இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வாழ்த்துரை. சிவஸ்ரீ பாலகைலாசநாதசர்மா சிறப்புரை.


நாயன்மார்களது திருவுருவப் படங்கள். பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியீட்டுரை, செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் சிறப்புரை


சிறப்பு மாநாடு ஊர்வலத்தின் போது ...

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195.